# SIVA SHRINES IN INDIA & BEYOND

## PART IV

IN TAMIL

BY

**P. SAMBANDAM, B.A., B.L.**

**AUTHOR OF**

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, The Ideal Wife, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At any Cost, The Fair Ghost, Brahmin vs Non-Brahmin, Vijayarangam, As you Like it, Sati Sulochana, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathi Part II, A Rehearsal or Sabapathi Part III, Sabapathi Part IV, Mixture, Blessed in a Wife, The Dancing Girl, Subadra-Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's Prescription Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markendeya, Sarangadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa, As We Sow-So We Reap, Over Forty Years Before the Footlights Parts I to VI, The Search, Prince Koneri, The Crowd in the Shandy, Ratnavali, The Gypsy Girl, Vaikunda Vaithiyar, Dikshithar Stories, Funny Stories, The Good Sister, Short Stories, Hints to Actors, The Tamil Drama, Humorous Essays, A hand book for Tamil Talkies, Stray Flowers, The Wedding of Valli, Talkie Experiences, The Dead revived, Asthanapura Dramatic Company, Music-Mad, Sabapathi-Zamindar, The Nine Playlets, A Little Spark of Fire, Art *vs* Love, Deepavali Varisai, Hitler *vs* Indian, Siva-shrines in India & Beyond Parts I to III, Subramanya shrines, Kalakkurippugal Unavupporulgal, etc. in Tamil.

FIRST EDITION

**MADRAS.**

PRINTED AT THE RATHNA VILASAM PRESS,

37, ERULAPPAN STREET, SOWCARPET, G. T., MADRAS.

*All rights reserved.*] **1948** [*Price Re. 1.*

# சிவாலயங்கள் — இந்தியாவிலும் அப்பாலும்

## நான்காம் பாகம்

RECEIVED 1 JAN 1950 TANJORE

நாடகப்பேராசிரியர்
**ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.**
அவர்களால் இயற்றப்பட்டது.

### இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :

லீலாவதி—சுலோசனா, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப் பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தம பத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு; சுல்தான்பேட்டை சப் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் — ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி ?, ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக் காட்சி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும்-முதல் மூன்று பாகங்கள், சிவாலய சிற்பங்கள், மனையாட்சி, தீபாவளிவரிசை, இந்தியனும் ஹிட்லரும், காலக் குறிப்புகள், சுப்ரண்ய ஆலயங்கள், தீயின் சிறுதிவலை, கலையோ காதலோ ? முதலியன.

முதற் பதிப்பு

"இரத்தின விலாஸ்" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

காபி ரைட் ] 1948 [ விலை ரூபா 1.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY

OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVDIVELU

பரோலி :—வட இந்தியா-ஆதிகாலத்தில் இது சிவாலய மாயிருந்து, பிறகு மாற்றப்பட்டது.

பல்லாரி :—மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி; எம். எஸ். எம் ரெயில்வே ஸ்டேஷன். இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு; (1) நாகேஸ்வரர் கோயில், (2) கோட்டை மல்லேஸ்வர ஸ்வாமி கோயில்.

பல்லாவரம் :—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜ தானி; சிவாலயம். குகைக் கோயில்; ஸ்டேஷனுக்கு அருகில் கிழக்கி லுள்ளது: 5 குகைகள் (ஆகவே இதற்கு பஞ்ச பாண்டவர் மலை என்று பெயர்.) இவைகளில் ஆதியில் சிவலிங்கங்கள் இருந்ததாக பிரான்சு தேசஸ்தரான தூப் றெயில் துரை எண்ணுகிறார். தற்காலம் இவைகள் மகம் மதியர் சுவாதீனத்திலிருக்கிறது. மஹேந்திரவர்மன் காலத் தியது- (600-625)

பலகாமி :—அல்லது பெலகாவி, மைசூர் ராஜ்யம், ஷிகார்பூர் ஜில்லா, இங்கு பல சிவாலயங்கள் உள. (1) தட்சிண கேதாரீஸ்வரர் கோயில், இது பழைய சாளுக்கிய கட்டடம். ஒரு மண்டபத்தைச் சுற்றி 3 கோயில்கள் உள. மண்டபத்தின் கூரை இடிந்திருக்கிறது. சிகரத்தில் ஹொய்சால மன்னவர்களுடைய பிருதாகிய யாளி இருக் கிறது. கோயிலுக்கு ஒரு புறம் நந்தி யிருக்கிறது. இங் குள்ள மற்ற கோயில்கள், (1) திரிபுராந்த கேஸ்வரர் கோயில் (2) சோமேஸ்வரர் கோயில், (3) நீலகண்டேஸ்வரர் கோயில்- சிவலிங்கம் பச்சை நிறமானது.

பலாஸ் தேவ் :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி சிவாலயம்; 1680-ஆடு கட்டப்பட்டது.

பலிகட்டம் :—விசாகப்பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம், ஸ்வாமி-பிரம்மேஸ்வரர் - கோயில் மேற்கு பார்த்தது, கோயில் கற் பாறையின்மீதுள்ளது. அடியில் உத்தர வாஹினி ஓடுகிறது. ராசாபூர் ஸ்டேஷ னுக்கு 23 மைல்.

**பவானி :**—பவானி முக்கூடல் என்றும், நுணு என்றும் வழங்கப்படுகிறது; சென்னை ராஜதானி, ஈரோட் ஸ்டேஷனுக்கு 8½ மைல் வட மேற்கு. பவானியும், காவேரியும் சங்கமமாகுமிடத்தருகில் கோயிலுள்ளது. பராசர், குபேரன், விஸ்வாமித்திரர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-சங்கமுக நாதேஸ்வரர், தேவி-வேதாம்பிகை. காவிரி, பவானி தீர்த்தம், இலந்தை மரம், லிங்கம் அமிர்தத்தாலாய தென்பது ஐதீகம். வடக்குக் கோபுரம் பெரியது; கோயிலுக்குளபோக இதன் வழியாகத்தான் போகவேண்டும் கிழக்கு வழியில்லை. (இக் கோயிலுக்குள் மஹாவிஷ்ணுவுக்கும் ஒரு கர்ப்பக்கிரஹ முண்டு; ஆதிகேசவப் பெருமாள்) இவ்வூரில் பத்ரகாளிகள் நான்கு பேர்கள் அசுரர்களைக் கொன்றதாக ஐதீகம். இதற்கு தட்சிண காசி என்றும் பெயர், உத்தரவாஹினி தட்சிண லிங்கம் உடையபடியால். கோயிலில் கேரோ என்னும் ஓர் ஆங்கில துரையால் ஸ்வாமிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தந்தக் கட்டில் பள்ளியறையில் இருக்கிறது. தற்காலக் கோயில் சுமார் 500 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாக காண்கிறது. திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. ஈரோட்டிலிருந்து பஸ் வசதி யுண்டு. இங்கு பெரிய முசாபர் பங்களா கோயிலுக் கருகில் உளது. பவானி முக்கூடல் என்றும் பெயர். மூன்றாவது ஆறு அந்தர் வாஹினியா யிருப்பதாக ஐதீகம், இதற்குப் பெயர் அமுத நதி.

இத்தலத்தை தெரிசித்தவர்க்கு ஒரு தீங்கும் ஒண்ணாதலின் இதற்கு திரு நண்ணா அல்லது 'திரு நணு' என்று பெயராயிற் றென்பர். இதன் மற்றப் பெயர்கள் தட்சிண அளகை, தட்சிண பதரிகாசிரமம், திருவேணி சங்கமம், தட்சிணப் பிரயாகை, திரு முக்கூடல், திருவானி கூடல், தென் கயிலை, பராசர் க்ஷேத்திரம், வக்கிரபுரம் என்பனவாம்.

தேவியின் பெயர்கள்: வேதநாயகி, வேதவல்லி, பொன்னார் மௌலி, பண்ணார் மொழியாள் என்பனவாம்.

பவானி நதிக்கு வாரதி என்றும் பெயர். வானி என்பது பழைய பெயராம். கல்வெட்டுகளில் வானி என்றே இருக்கிறது.

இங்குள்ள மற்ற சிவாலயங்கள்:-பராசர் கோயில், பராசரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கமுடையது; இங்கிருந்து தான் அந்தர் வாஹினியாக அமுத நதி சங்கமத் துறையில் சேர்கிறதாக ஐதீகம். பவானி சிவாலயத்திற்கு தென் மதில் சுவருக்கு 60 அடி தூரம் ஒரு சிறு கோயில் உளது. இங்குள்ள தீர்த்தங்கள் காயத்ரி தீர்த்தம், சாவித்ரி தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், தேவ தீர்த்தம், சக்கர தீர்த்தம், சூரிய தீர்த்தம், உரோமச தீர்த்தம்.

(2) **காயத்ரி லிங்கேஸ்வரர்** :—காயத்ரி தீர்த்தக் கரையிலுள்ள சிறு சிவாலயம். இது விஸ்வாமித்ரர் பிரதிஷ்டை என்பது ஐதீகம்.

(3) **ஊராச்சி மலை கோட்டை** :—சிவாலயம், இதற்கு வேதகிரி என்றும் பெயர், ஸ்வாமி-வேதகிரீஸ்வரர், தேவி-வேதநாயகி, பவானிக்கு $2\frac{1}{3}$ மைல். பவானியிலுள்ள முசாபரி பங்களா கட்டி முதலியார்களால் கட்டப்பட்டது. பவானி சிவாலயம் அமர குந்தியில் அரசுபுரிந்த திருமிடு கட்டி முதலியார் அவர்களாலும், அவரது சகோதரி சின்னம்மையாராலும் கட்டப்பட்டது. கோயில் காவிரியின் மேற்குக் கரையிலுள்ளது. ஆலயம் சிறிது; கருங்கற்களால் கட்டப்பட்டது. 5 கோபுரமுடையது, கட்டி முதலியாருடைய அரசச் சின்னங்களாகிய விற்கொடி, புலி, மீன் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இம்முடி கட்டி முதலியார் நிருத்த மண்டபம், அம்மன் கர்ப்பக்கிரகம், அநந்த மண்டபம், மகா மண்டபம், குமார கோயில் கோபுரம், முதலியார் கட்டியதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இங்குள்ள சஹஸ்ரமுக லிங்கமும் இவரால்தான் பிரதிஷ்டை செய்யப்பட்டது; நிருத்த மண்டபம் கட்டிய சிற்பியின் பெயர் இராமண்ணு ஆச்சாரி என்று வெட்டப்பட்டிருக்கிறது. கொயிலில் பள்ளியறை ஸ்வாமி எழுந்தருளுவதற்கு தந்தப் பலலக்கு 1804 வருடம் கெய்ரோ எனும் ஆங்கில துரையால் சமர்ப்பிக்கப்பட்டது. அப்பல்லக்கில அவர் பெயரும் இருக்கிறது.

இங்குள்ள சுப்பிரமணியர் ஆலயத்தின் ஓர் பகுதியில் மூன்று சிரங்கள், மூன்று கரங்கள், மூன்று பாதங்களுடைய ஜ்வரஹரேஸ்வரர் சிவ மூர்த்தம் இருக்கிறது.

இங்குள்ள ஆதிகேசவப் பெருமாள் ஆலயம் பவானி நதிக்கு தென்புறம் இருக்கும் காளிங்கராயன் புதூருக்குப் பக்கத்திலிருந்தது, ஆற்றுக்கு அது இரையாகிப்போகவே, ஒரு விஷ்ணு பக்தர் பிறகு அக் கற்களைக்கொண்டு தற்கால முள்ள ஆலயத்தை கட்டினார்; அவர் பெயர் புலியூர் கவுண்டர்.

இங்குள்ள முக்கிய படித்துறைகள்:-காயத்ரி படித்துறை, திமஞ்சனப் படித்துறை, திருவேணி சங்கமப்படித் துறை.

**(4) சகஸ்ர லிங்கேஸ்வரர் ஆலயம்:—** அமிர்த லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு வட கிழக்கிலுள்ள ஒரு சிறு சிவால்யம்.

பவானி கோயிலில் ஆடிப் பெருக்கு விழா விசேஷம். பிரம்மோற்சவம் 12 நாள், சித்திரை மாசம்.

**பழைய சங்கடம்.—**குளித்தலை தாலுகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி. ஆளவந்த ஈஸ்வரர் கோயில், தேவி அன்னவல்லி; இதற்கு பழைய ஜெயங் கொண்ட சோழ புரம் என்று பூர்வீக பெயர்.

**பழைய சீவரம்:—**செங்கல்பட்டு ஜில்லா, காஞ்சீபுரம் தாலுகா, சென்னை ராஜதானி. ஒரு சிறு குன்றின்மீது சிவாலயமுண்டு. தற்காலம் பாழடைந்திருக்கிறது; பூஜை யில்லை. ஸ்ரீ வரதராஜர் பார்வேட்டையில் தங்கும் குன்றின் பக்கத்திலுள்ளது.

**பழைய மாம்பலம்:—**சென்ன பட்டணத்திற் கருகிலுள்ளது, சென்னை ராஜதானி. காசி விஸ்வநாதர் கோயில்.

**பழனம்:—(திரு)** தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருவையாறுக்கு $1\frac{1}{2}$ மைல், காவிரிக் கரையிலுள்ளது. திருக்குரங்காடு துறைக்கு 3 மைல் மேற்கு சிவாலயம்.

திக்குப்பாலர்கள் பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி-சஹாயேஸ்வரர், தேவி-பெரியநாயகி யம்மை; மங்கள தீர்த்தம், காவிரி நதி. பூர்வீக ஆலயம்; உட்பிரகாரம் மிகவும் பழைமை யானது, வெளிப்பிரகாரம் பிறகு கட்டப்பட்டது. ஸ்வாமி அம்மன் சந்நிதிகள் இரண்டும் கிழக்கு பார்த்தவை. பாம்பு தீண்டி யிறந்த அப்பூதி அடிகள் குழந்தையை, அப்பர் உயிர்ப்பித்த ஸ்தலம். கோயிலில் பல கல்வெட்டுகள் உள. தற்காலத்திய அம்மன் சந்நிதி முன்பு விஷ்ணு சந்நிதியா யிருந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. தற்காலம்,விஷ்ணு பரமசிவத்தின் பின்புறம் ஒரு கோயிலில் வைக்கப்பட்டிருக்கிறார். விஷ்ணுவின் உற்சவ விக்ரஹம் இங்குள்ளது. விஷ்ணுவின் மூலஸ்தானத்தில் வேணு கோபாலர் இருக்கிறார். இங்கு வரதராஜருடைய விக்ரஹமு முண்டு. இக் கோயிலிலுள்ள மூர்த்திகளில் பலர் இடம் மாறி யிருக்கிறனர். இதற்குக் காரணம் இங்கு விஷ்ணு வசிப்பதால் என்று குருக்கள்மார் கூறுகின்றனர். வேணு கோபால ஸ்வாமிக்கு உறியடி உற்சவம் நடக்கிறது. திருஞானசம்பந்தர் பாடல பெற்றது.

**பழையாறை**:—ப ழை ய ா றை வ ட த ளி என்பது தேவாரப் பெயர். தஞ்சாவூர் ஜில்லா. பட்டீஸ்வரத்திற்கு அருகிலுள்ளது - சென்னை ராஜதானி சிவாலயம். ஸ்வாமி-சோமேஸ்வரர், தேவி சோமகலா நாயகி. சிவ கங்கை தீர்ந்தம். இது பழையாறை + வடதளி என்று இரண்டு ஸ்தலங்களாயிருக்கின்றன. வடதளிக்கு திருமேற்றளி என்றும் பெயர். நாயன்மார் இவ்விரண்டு ஸ்தலங்களையும் சேர்த்து ஒரே பதிகத்தில் பாடியிருக்கின்றனர். வடதளி ஆலய ஸ்வாமி பெயர், வடதளிநாதர், சோமேசர், தர்மபுரீஸ்வரர், தேவி விமலநாயகி,கௌரியம்மை,சோமகலா நாயகி; உத்திர புஷ்கரணி, காமதேனுவின் புதல்வி விமலி என்பதால் பூசிக்கப்பட்டது. மேட்டின் பேரில் கோயில்; இங்கு ஸ்வாமி, அம்மன் விக்ரகங்கள் தவிர வேறென்று மில்லை. பழையாறை அமர்நீதி நாயனர் வாழ்ந்த திருப்பதி. திருநாவுக்கரசு நாயனர் சமணர்களால் வடதளியில் மூடப்பட்டிருந்த சிவபெருமானை அரசனைக் கொண்டு வெளிப்படுத்தி பூசித்த ஸ்தலம். அப்பர் பாடல் பெற்றது. பழையாறை

ஆலயம் சுந்தர சோழனல் கட்டப்பட்ட தென்பர். (954—666) சந்திரன் பூசித்து தேய்தல் நீங்கிய ஸ்தலம்.

பழனி :—சென்னை ராஜதானி; ரெயில்வே ஸ்டேஷன். ஸ்டேஷக்கு 3 மைல் வடக்கு சிவாலயம். ஸ்வாமி பிரஹ தீஸ்வரர் அல்லது பெரிய உடையார்; கோயில் ஷண்முக நதிக்கரையிலுள்ளது. சோழக் கட்டடம். இதற்கு ஆவி னங்குடி என்றும் பெயர். பிரசித்திபெற்ற முருகர் ஸ்தலம். வையாபுரி என்றும் பெயர் உளது.

பள்ளவூர் :—பாலக்காடு தாலுகா மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்.

பள்ளத்தூர் :—சென்னை ராஜதானி; காரைக்குடிக்கு 4 மைல் - சிவாலயம், ஸ்வாமி-சுந்தரேசர், தேவி-மீனுட்சி. நாட்டுக்கோட்டை செட்டியாரால் கட்டப்பட்ட புதிய ஆலயம். சத்திரமுண்டு.

பள்ளிப்படிக்கரை:—சென்னை ராஜதானி தென் இந்தியா சிவாலயம்-ஸ்வாமி நீலகண்டேஸ்வரர் தேவி அமிர்தகர வல்லி. அமிர்த தீர்த்தம். தேவி பரமசிவத்தின் விஷ பானத்தைத் தடுத்த ஸ்தலமென்பது ஸ்தல புராணம்.

பள்ளிமடம் :--ராம்நாத ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-காளநாதர், ஸ்வாமி விருஷபவாகனக் கோலத்துடன் இருக்கிருர்.

பள்ளியின் முக்கூடல்:—(திரு) அரியான் பள்ளி, அரிக்கரை யான் பள்ளி என்றும் வழங்கப்படுகிறது. திரு ஆருரில் இறங்கி 3 மைல் போகவேண்டும். சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-முக்கோணேஸ்வரர், தேவி-மைமேவும் கண்ணியம்மை; முக்கூடல் தீர்த்தம். வெட்டாறு ஸ்டேஷ னுக்கு இரண்டு மைல். மூர்க்க ரிஷி பூசித்த ஸ்தலம். சிறிய கோயில்; இங்குள்ள சிவலிங்கம் மிகவும் பளபளப் பானது. அப்பர் பாடல் பெற்றது.

பளவ நத்தம் :—ஜமீன் கிராமம்; ராம்நாத ஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம், ஸ்வாமி-கைலாச நாதர்.

பளிவேலா :—ராஜோல் தாலுகா, கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி; கொப்பேஸ்வரர் கோயில். இங்குள்ள நந்தி ஔரங்கஜீப்பால் பின்னமாக்கப்பட்டதென்பர். கோயிலில் கல்வெட்டுகள் உள.

பறியலூர் :—(திரு) இது பரசலூர் என்று தற்காலம் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி; விலங்கூருக்கு 2 மைல் தென் கிழக்கு, அஷ்டவீரட்டான க்ஷேத்திரங்களிலொன்று. தட்சன் தலையைப்பறித்த ஸ்தலம். தட்சனுடைய உருவமும் வீரபத்திரருடைய உருவமும் கோயிலில் உளது. மாயவரம் ஸ்டேஷனி லிறங்கி 7 மைல் போக வேண்டும். ஸ்வாமி-வீரட்டேஸ்வரர்; தேவி - இளங்கொடியம்மை; சந்திர புஷ்கரிணி தீர்த்தம்.

பன்னு :—மத்திய மாகாணம், பன்னு சமஸ்தானத்தின் தலை நகர்-சிவாலயம். ஸ்வாமி-கைபிநாத் மகாதேவ்.

பனங்காட்டூர் :—(திரு) இது, வனம்பார்த்தான் பனங்காட்டூர், திருப்பனங்காடு, பனையபுரம் எனவும் வழங்கப்படுகிறது. ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; மூண்டியம் பாக்கம் ரெயில் ஸ்டேஷனுக்கு 2 மைல் வட கிழக்கு, காஞ்சீபுரத்திலிருந்து 8¼ மைல் தெற்கு, சிபிச்சக்ரவர்த்தி பூசித்த க்ஷேத்திரம். சூரிய பூஜை சித்திரை மாசம். வன்பாக்கம் அருகிலிருக்கிறபடியால் வன்பாத்தான் பனங்காட்டூர் எனப் பெயர் பெற்றது. கோயிலில் இரண்டு சந்நிதிகள் உண்டு. தெற்கிலிருப்பது அகஸ்தியர் பூசித்தது. ஸ்வாமி-தாளபுரீஸ்வரர், தேவி-ஸ்தூலகோமளபதாம்பாள். வடக்கிலிருப்பது புலஸ்தியர் பூசித்தது. ஸ்வாமி - கிருபா நாதேஸ்வரர், தேவி-கிருபாநாயகி. 3 தீர்த்தங்கள்-சம்பந்தர் தீர்த்தம், அப்பர் தீர்த்தம், சுந்தரர் தீர்த்தம், சிவபெருமானுக்கு பனம் பழம் நிவேதனம் விசேஷம். கோயில் மிகவும் பழமையானது; ஆலயத்திற் கெதிரில் இருந்த 2 பனைமரங்கள் இப்பொழுது இல்லை. ஸ்வாமி பனங்காட்டீஸ்வரர். தேவி அமிர்தவல்லி யம்மை. பனை விருட்சம்-சுந்தரர் பாடல் பெற்றது. வள்பாக்கத்தில் ஒரு சிவாலயமுண்டு. ஸ்வாமி ராமசாமி ஈஸ்வரர், தேவி பஞ்சின்மெல்லடி யம்மை. சுந்தரர் சரித்திர சம்பந்தமான இடம். சுந்தரர் பாடல் பெற்றது.

**பனங்குடி:**-திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி ராமலிங்க ஸ்வாமி கோயில்.

**பனந்தாள்:**-(திரு) கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ஆடுதுறைக்கு 7 மைல் வடக்கு. குங்கிலயக் கலயநாயனர் தொண்டு செய்த க்ஷேத்திரம். திருப்பனந்தாள் மடம் எனும் ஒரு பழமையான சிறந்த சைவ மடம் இங்கு இருக்கிறது. இவ்வூர் ஆலயத்திற்கு தாடகேச்சுரம் என்று திருநாமம். தாடகை எனும் பெண்ணுக்காக சாய்ந்திருந்த சிவலிங்கம், யானை முதலியவைகளைக் கொண்டு இழுத்தும் நிமிராதது, குங்கிலயக் கலயநாயனர் கழுத்திற் கட்டியிழுத்தபோது நிமிர்ந்த ஸ்தலம். ஸ்வாமி-சடையப் பேசுரர், அருணஜடேஸ்வரர்; தேவி பெரியநாயகியம்மை. பிரம தீர்த்தம்-நாக கன்னிகை தீர்த்தம். கோபுரம் பெரியது. கோயிலில் குங்கிலியக் கலய நாயனர் சரித்திரம் கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. பனை விருட்சம், திருஞான சம்பந்தா பாடல் பெற்றது. பிரம்மோற்சவம் பங்குனி மாதம். பல்லக்கு உற்சவம் விசேஷம்.

**பனப்பாக்கம்** :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-மயூரநாதர், கோயில் சோழக் கட்டடம். பல கல்வெட்டுகளுடையது.

**பனம்பூர்** :—மங்களூர் தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-நந்தினேஷ்வர்.

**பனை மலை** :—தென் இந்தியா, சிவாலயம்; விழுப்புறத்திற்கு 16 மைல். இரண்டாம் நரசிம்ம வர்மன் காலத்தியது (600-710) பல்லவ சில்பம்.

**பவனையூர்** :—திரு மெய்யம் தாலுகா, புதுக்கோட்டை சமஸ்தானம்; சிவாலயம்.

**பனையூர்** :—(திரு) சென்னை ராஜதானி; நங்நிலத்திற்கு 1 மைல் தென் கிழக்கு. முசுகுந்த சக்ரவர்த்தி, லட்சுமி தேவி, பராசர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-சௌந்தர்ய நாதர், தேவி-பெரிய நாயகி; அமிர்த தீர்த்தம், பனை

விருட்சம். திருவாரூரில் இறங்கி 7⅛ மைல் போகவேண்டும். சிவபெருமான் சுந்தர மூர்த்திக்குக் கூத்தாடி காட்சி கொடுத்த ஸ்தலம். திருஞான சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. விடங்க ஸ்தலங்களிலொன்று.

**பஸ்தார்** :—சண்டி பிரிவு, மத்ய மாகாணம், சிவாலயம். ஸ்வாமி-நந்தேஸ்வரர், தேவி-மோடா தேவி தீர்த்தங்கள், சங்குனி, தான்குன்.

**பாகாலா** :—சென்னை ராஜதானி; சித்தூருக்கு 23 மைல். சிவாலயம். ஸ்வாமி-சந்திரசேகரர். ரெயில் ஸ்டேஷன்.

**பாகர்கன்ஜ் பிரிவு** :—வங்காள ராஜதானி. போனு பாலியா கிராமம், சிவாலயம் பழையது, சுயம்பு லிங்கம்; சிவராத்திரி விசேஷம்.

**பாகல்பூர் பிரிவு**,—வங்காள ராஜதானி. (1) கர்னு **கிராமம்**. (கர்ணன் + நகரம்) சிவாலயம். ஸ்வாமி-பரமசிவம், தேவி-பார்வதி. (2) **ஸ்ரீநகர்** சிவாலயம், இதில் பல கல் வெட்டுகள் உள.

**பாகலி** :—ஹார்ப்பனஹல்லி தாலுகா, பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-கள்ளேஸ்வரர், சாளுக்கிய சில்பம், ஹார்ப்பனஹல்லிக்கு 8 மைல்.

**பாகேஷ்வர்** :—டுமாவோன் ஜில்லா, ஐக்கிய மாகாணம், காத்கோடம் ரெயில் ஸ்டேஷனுக்கு 6½ மைல் சிவாலயம். ஸ்வாமி-பாகேஸ்வர், (வியாக்ரம்=புலி) இங்கு தர்ம சத்திரங்கள் உள. கோமதியும், சர்ஜூவும் கூடுமிடம், அல்மோரா வுக்கு 26 மைல் வடக்கு. கடயூர் அரசர்களால் (2500 BC-700 AD) கட்டப்பட்ட கோயில் என்பர். டுமாவோன் சில்பம், மார்க்கண்டேயர் பூசித்த ஸ்தலம். பரமசிவம் புலி வடிவமாய்த் தோன்றியபடியால் பாகேஷ்வர் எனப் பெயர் உண்டாயிற்று. மார்க்கண்டேய புராணத்தில் இத்தலம் குறிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வாமிக்கு வாகீஸ்வரர் என்றும் பெயர்.

**பாங்கல்** :—நைஜாம் ராஜ்யம், மத்ய இந்தியா, நால்கொண்டா ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-பாஞ்சேஸ்வரர்.

**பாங்கிபூர்** :—தார்வார் ஜில்லா, ஆறுவத்துகம்பட ஆலயம். 60 தூண்கள் உடைய கோயில், இது ஆதியில் சிவாலயமாயிருந்து பிறகு பிஜபூர் சுல்தானல் மசூதியாக்கப்பட்டது. தற்காலம் மிகவும் பழாய்க் கிடக்கிறது.

**பாச்சிலாச் சிராமம்** :—(திரு) இது சிருவாசி எனவும் வழங்கப்படுகிறது. திருவானைக் காவலுக்கு 3 மைல் வடமேற்கு. சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா; திருச்சிராப்பள்ளியிலிருந்து 6 மைல், சிவாலயம். ஸ்வாமி-மாற்றறிவரதர், தேவி-பாலசௌந்தரி, விசாலாட்சி; வன்னி மரம்; பிரம தீர்த்தம், அன்னமாம் பொய்கை, முயலக தீர்த்தம். இங்குள்ள நடராஜ மூர்த்திக்குப் பின்னிய சடையும், பக்கத்தில் அசுரனும் உண்டு. திருஞான சம்பந்த மூர்த்தி கொல்லி மழவன் எனும் அரசனுடைய குமாரத்திக்கு மூயலகன் எனும் வியாதியைத் தீர்த்த ஸ்தலம். திருஞான சம்பந்த மூர்த்தி பதிகம்பாடிய காரணத்தினல் முயலகனுக்கு மோட்சம் கிடைக்க, நடராஜர் சர்ப்பததின் மீது நடனமாடினதாக ஐதிகம். சபாநாதர் சிரத்தில் கிரீடம் உளது. சுந்தர மூர்த்தி பதிகம்பாடிப்பெற்ற செப்புக் காசுகள் பொன்னய் மாறின ஸ்தலம்.

**பாசரகோடு** :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி; சோமேஸ்வரர் கோயில், ஸ்வாமி ஆரண்ய விடங்கர், ஆரண்ய தீர்த்தம்.

**பாசராலு** :—மைசூர் ராஜ்யம், தற்காலம் நாகேஸ்வர் கோயில் என வழங்கப்படுகிறது. சாளுக்கிய சில்பம்.

**பாசூர்** :—(திரு) திருவள்ளூர் தாலுகா, சென்னை ராஜதானி. திருவள்ளூர் ஸ்டேஷனுக்கு 5 மைல் வடமேற்கு சிவாலயம். ஸ்வாமி-பாசூர் நாதேஸ்வரர் அல்லது பாசுபதீஸ்வரர், வாசீஸ்வரர்; தேவி-பசுபதி நாயகியம்மை, சுயம்புவல்லி; சோழ தீர்த்தம். சிவபெருமாள் மூங்கிலடியில் தோன்றிய ஸ்தலம். சிவபிரான் சோழனுக்கு ஒரு காரணம்பற்றி பாம்பாட்டியாகத் திருவுருகொண்டு ஆடல் காட்டியருளிய ஸ்தலம். திருஞான சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற ஸ்தலம். பிரம்மோற்சவம் வைகாசி மாசம்.

பாஞ்ச மஹால் பிரிவு :—பம்பாய் ராஜதானி, தேவ்கே தார் கிராமம், கேதாரேஸ்வரர் கோயில். இங்கு லீலாவதி கிராமத்தில் ஒரு சிவாலயமும் தாவா எனும் கிராமத்தில் ஒரு சிவாலயமு முண்டு.

பாசலூர் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, வீரட்டேஸ்வர ஸ்வாமி கோயில்; தர்மபுர ஆதீனத்திற்குட் பட்டது.

பாட்னு பிரிவு :—வங்காள ராஜதானி, பைகுண்ட்பூர் கிராமம். இங்கு மிகவும் பழமையான ஓர் சிவாலய முண்டு.

பாடாஸ் :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, நாகேஸ்வரர் கோயில்; 200 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டது.

பாடி :—இதற்கு திருவலிதாயம் என்று தேவாரப்பெயர். சென்னை ராஜதானி, வில்லிவாக்கம் ஸ்டேஷனுக்கு $1\frac{1}{2}$ மைல் தென் மேற்கு. பராத்வாஜர், பிரகஸ்பதி, ஹனுமார் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-வலிதாய நாதர் அல்லது திருவல்லீஸ்வரர், தேவி-தாயம்மை அல்லது ஜெகதாம்பிகை. பாரத்வாஜ தீர்த்தம், ஹனும தீர்த்தம். விக்ரம சோழன் ஸ்வாமியை பூசித்து மகப்பேறு பெற்ற க்ஷேத்திரம், பலி + தாயம் = வலி தாயம் என்றாயிற்றென்பர்; பலி = பூசை.

பாண்டிக் கொடு முடி :—கொடுமுடி யெனவும் வழங்கப்படுகிறது. தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், திரிமூர்த்திகளுக்கு இங்கு கோயில் உண்டு. ஸ்வாமி-கொடுமுடி நாதேஸ்வரர், மகுடேஸ்வரர், தேவி-பண்மொழி நாயகியம்மை, திரிபுர சுந்தரி,-வன்னி விருட்சம், காவிரி நதி; சுந்தரர் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடிய ஸ்தலம். ஸ்டேஷனுக்கு 1 பர்லாங்கில் சத்திரம். மூவர் பாடல் பெற்றது.

பாண்டர் :—மத்ய இந்தியா, சண்டா ஸ்டேஷனுக்கு 18 மைல் சிவாலயம் - பத்ரேசர், பத்ராவதி தேவி.

பாணவர் :—மைசூர் ராஜ்யம் சிவாலயம், ஸ்வாமி-மஹாதேவர்.

பாணவாசி :—மேற்கு இந்தியாவிலுள்ளது. வர்தா நதிக் கரையிலுள்ளது சிவாலயம். ஸ்வாமி-மதுகேஸ்வர், கோயில் கடம்ப அரசன் ஒருவனுல் கட்டப்பட்டது. அவர்களது குலதெய்வக் கோயில்; கோயில் பெரியது.

பாணேஸ்வரம் :—மத்ய இந்தியா, ஜகந்நாதத்துக்கு அருகிலுள்ளது. ஈஸ்ட் இந்தியா ரெயில் ஸ்டேஷன்-சிவாலயம். லிங்கம் ஸ்ரீ ராமர் பிரதிஷ்டை யென்பது ஐதீகம்.

பாத்ரவட் :—வட இந்தியா, சிவாலயம்-சுயம்பு லிங்கம்.

பாத்பூத் :—பம்பாய் ராஜதானி; புரோச் உட் பிரிவு. சிவாலயம், நருமதையின் வடகரையி லுள்ளது. ஸ்வாமி-பாதேஷ்வர்; சிறிய கோயில்.

பாதபட்டீசம் :—(பழைய பட்டீசம்) கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஒரு தீவில் இருக்கிறது. இங்கு இன்னெரு தீவில் மஹா நந்தீஸ்வர் கோயில் உளது.

பாதர்பூர் :—ஆசாம் பெங்கால் ரெயில் ஸ்டேஷன், சிவாலயம்; மலையின் உச்சியி லுள்ளது, ஸ்வாமி-சித்தேஸ்வரர்.

பாத்ரகாஹு :—வட இந்தியா, சிவாலயம். ஸ்வாமி-சதாசிவம்-சுயம்பு லிங்கம்.

பாதாமி :—பிஜபூர் ஜில்லா, பம்பாய் ராஜதானி; இதற்கு வாதாபி என்றும் பெயர். மாலே ஜிட்டி சிவாலயம், 56 அடி நிகளம்; இது மாமல்ல புரத்துச் சிவாலயத்தை விட பழமையானது. திராவிட சில்பம். ஆரும் நூற்ருண்டில் கட்டப்பட்டதாம். இங்குள்ள சங்கரநாராயண மூர்த்தி பார்க்கத் தக்கது. தென் மஹாராஷ்டிர ரெயில் ஸ்டேஷன். ஊர் ஸ்டேஷனுக்கு 3 மைல்; ஸ்டேஷனுக்கும் பட்டணத்திற்கும் நடுவில் ஒரு தர்மசாலை யுண்டு. இங்குள்ள மற்ற சிவாலயங்கள் (1) ஸ்ரீகைட ஸ்வாமி கோயில்-குகைக் கோயில், (2) விருபாட்சர் கோயில், (3) மல்லிகார்ஜுனர் கோயில் (4) லகுலீசர் கோயில், (5) பூதநாதர் கோயில், (6)

மஹாா கூடேஸ்வரர் கோயில் மிகவும் பழமையான சாளுக்கிய சில்பம்.

பாதாளம் :—வட இந்தியா, சிவாலயம். ஸ்வாமி-ஹடகேஸ்வரர், சுயம்புலிங்கம்.

பாதாளீச்சுரம் :—(திரு) பாமணி, பாம்பணி என்றும் வழங்கப்படுகிறது. சாசனங்களில் பாம்புணி என்றிருக்கிறது; சென்னை ராஜதானி, மன்னார் குடி ஸ்டேஷனுக்கு 2 மைல் வடக்கு. பாம்புருவுள்ள தனஞ்ஜெய ரிஷி பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-சர்ப்பபுரீஸ்வரர், நாகநாதர், தேவி-அமிர்த நாயகி; நாக தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

பாதிரிப் புலியூர் .—(திரு) திருப்பாப்புலியூர் என்று சாதாரணமாக வழங்கப்படுகிறது. கூடலூர் தாலுகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; கூடலூர் ஸ்டேஷனுக்கு 3 மைல், கோயில் திரும்பாப்புலியூர் ஸ்டேஷனுக்கு ½ மைல் வடக்கு. வியாக்ர பாதர் பூசித்த க்ஷேத்திரம், இதற்கு வடபுலியூர் என்றும் பெயர் உளது. மூடக்காலுள்ள முயல் ரூபத்தைச் சாபத்தினால் பெற்ற மங்களர் எனும் முனிவர் பூசித்து அவ்வுரு நீங்கி முன் உருப் பெற்ற ஸ்தலம். கற்றூணிற் கட்டி கடலிலிடப் பட்ட திருநாவுக்கரசு ஸ்வாமிகள் "சொற்றுணை வேதியன்" எனும் திருப்பதிகம்பாடி கரையேறின ஸ்தலம். அந்த இடம் கரையேறவிட்ட குப்பம் என்று வழங்கப்படுகிறது. ஸ்வாமி-தோற்றுத் துணையீஸ்வரர், பாடலீஸ்வரர், தேவி-தோகையம்பிகை, பெரியநாயகியம்மன்; பெண்ணை கெடில நதி, பாதிரி விருட்சம் பிரம்மோற்சவம் வைகாசி மாசம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் பாடல் பெற்றது. இங்கு பாதாளீஸ்வரர் கோயில் என்று இன்னொரு சிவாலயமுளது. சுவாமி பெயர் கல்வெட்டுகளில் திருக்கடை நாழலுடையார் என்றிருக்கிறது. சதாசிவ செட்டியார் சத்திரம் கோயிலுக்கருகி லுள்ளது.

பாடலி புரம் :—வட இந்தியா ரெயில்வே ஸ்டேஷன், சிவாலயம். சுவாமி- பாடலீசர்-கங்கா நதி.

பாபல் :—பூனு ஜில்லா, பொம்பாய் ராஜதானி, சிவாலயம். சுவாமி-நாகேஸ்வரர், கன்ஹூரோஜ் படக் என்பவரால் கட்டப்பட்டது.

பாபநாசம் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி; தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், பழைய சிவாலயம். சுவாமி-ராமலிங்கேசர், தேவி - பர்வதவர்த்தினி, ராமர் பூசித்த ஸ்தலமென்பர்.

பாப நாசம் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, அம்பா சமுத்திரம் ரேயில் ஸ்டேஷனுக்கு 5 மைல் தென் மேற்கு; விக்ரமபுரத்திலிருக்கிறது சிவாலயம். பக்கத்தில் கலியாண தீர்த்தம் எனும் அழகிய நீர்வீழ்ச்சி யுண்டு. மலைக்குமேல் பாண தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம் என்று இரண்டு தீர்த்தங்களுண்டு. கோயிலின் படித்துறையில் மீன்களுக்கு தினம் கோயில் பிரசாதம் அளிக்கப்படுகிறது உச்சி காலத்தில். ஸ்ரீராமர் ராவணனைக் கொன்ற பழி நீங்கிய ஸ்தலமென்பது ஐதீகம். சுவாமி-பாபவிநாச சுவாமி, தேவி - உலகாம்பாள். இங்கிருக்கும் அழகிய மண்டபம் திருமலை நாயகரால் கட்டப்பட்டதாம். கோயிலில் 108 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு முசாபர் பங்களா உண்டு. கோபுரம் ஏழு நிலைகளை உடையது; 80 அடி உயரம். கோயிலின் முன்பாக ஆறு வடக்காகச் செல்கிறது. உத்தர வாஹினி தட்சிண லிங்கம் விசேஷம் எனக் கூறம்பட்டிருக்கிறது. லிங்கம் சுயம்பு லிங்கம், சுவாமியின் மற்ற திருநாமங்கள், வயிராச லிங்கர், பழமறை நாயகர், முக்களா லிங்கர், பரஞ்சோதி லிங்கர். கோயில் விக்கிரமசிங்க பாண்டியனால் கட்டப்பட்டது. அம்மன் கோயில் பிறகு கட்டப்பட்டது. கோயில் நிகளம் 460 அடி, அகலம் 185 அடி. இக்கோயிலில் நவக்கிரகங்கள் தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்தல விருக்ஷம் முக்களா; தீர்த்தங்கள் பொருநை, வேததீர்த்தம். பழைய பாபநாச தீர்த்தம், கல்யாண தீர்ததம், வைகை தீர்த்தம், வாண தீர்த்ரும், (இது 16 கல் தூரமுள்ளது மலையில்) இங்கு அருகாமையில் சிவந்தியபபர் கோயில், எனும் மற்றொரு சிவாலயமுண்டு. பாவநாசத்தில் ஒரு கல்

வெட்டும், சிலந்தியப்பர் கோயிலில் ஒரு கல் வெட்டும் உளது. அகஸ்தியர், இந்திரன், காசிபர், விராட்டு, பூசித்த ஸ்தலம்; ஒரு பிராம்மணன் தன் தாய் தந்தையரைக் கொன்ற பழி நீங்கிய ஸ்தலமென்பர். முக்கிய உற்சவம் பங்குனி மாசம். பாண தீர்த்தத்தில் ஆடி அமாவாசை ஸ்நானம் விசேஷம்.

**பாம்புரம்** :—(திரு) திருப் பாம்பு புரம் எனவும் பெயர் உண்டு. சென்னை ராஜதானி; பூந்தோட்டம் ஸ்டேஷனுக்கு 3 மைல் மேற்கு. கோயிலில் நாகராஜன் சிலையிருக்கிறது; ஆதிசேஷன் பூசித்த ஸ்தலம். சுவாமி-பாம்பீஸ்வரர், தேவி-வண்டார் பூங்குழலியம்மை, வன்னி விருட்சம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**பாயர்** :—காஷ்மீர் ராஜ்யத்திலுள்ளது, மிகவும் சிறிய கோயில்; 8 அடி சதுரம், 21 அடி உயரம். நான்கு பக்கமும் நான்கு வாசற் படிகள் உள. கோயில் ஆறே ஆறு கற்களாலாயது. சுமார் '950-ஆ கட்டப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. காபூலை ஆண்ட பீமசாஹி எனும் அரசனால் கட்டப்பட்ட பீமகேஸ்வரர் கோயிலாயிருக்கலாம் என்று நினைக்கப்படுகிறது. கோயில் கிரேக்கர்களிடமிருந்து வந்த காந்தார சில்பமுடையது.

**பார்னியோ** :—இது சிங்கபூருக்கு அப்பாலுள்ள ஓர் தீவு. இங்கு ஓர் குகையில் சிவாலயமுண்டு; கிலமாயிருக்கிறது. கணேசர், நந்தி மூலலிய சில சிற்பங்கள் இன்னும் இருக்கின்றன.

**பாயில்** :—பாடியாலா ராஜ்யத்திலுள்ளது. பஞ்சாப் மாகாணம்; சிவாலயம். சுவாமி - மஹாதேவர், தேவி-பார்வதி.

**பாராகாட்** :—வட இந்தியா, மீர்கன்ஜ் ஸ்டேஷனுக்கு 3 மைல்; சிவாலயம். நர்மதை தீர்த்தம்.

**பாராவுட்** :—பஞ்சாப் மாகாணம், ஜின்ட் சமஸ்தானம். இங்குள்ள சிவாலயங்கள் (1) பாராவுட் கிராமம் சிவாலயம் (2) சாபிடான் கிராமம் சிவாலயம், சுவாமி - நாகேஸ்வர் மஹாதேவ், தேவி - நாகதமனி லிங்கம் ஜெனமேஜய

மஹா ராஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தென்பது ஐதீகம். நாகக்ஷேத்திர தீர்த்தம். (3) பாடுகலன் கிராமம், மஹாதேவர் கோயில், பராசர் தீர்த்தம். (4) ஹாத் கிராமம் சிவாலயம். (5) பிண்டாரா கிராமம், சோமேஷ்வர் மஹாதேவ் கோயில். (6) ஜிண்ட பட்டணம், சோமேஷவர் கோயில், சுவாமி-சோமேஷ்வர், தேவி-மானசா தேவி. இங்கு மஹாதேவ பூதேஷ்வர் கோயில் ஒன்றுண்டு.

**பாரீஸ்வரம்** :—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி பாரீஸ்வரர். பாண்டி மண்டலத்தில் திருப்புத்தூர் பக்கத்தி லுள்ளது. பழைய கோயில் பாரி எனும் வள்ளல் கட்டிய கோயிலாக மதிக்கப் படுகிறது. பிறகு கோயில் புதுப் பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பாரோ பூதூர்** :—போரோபுதர் சரியான பெயர். ஜாவா தீவில் உள்ளது. இங்கு ஒரு சிவாலயமுளது. இதை இங்குள்ளவர்கள் சந்திர லோரோ ஜொங்ரன் என்று அழைக்கின்றனர். கோயிலின் சுவர்களில் ராமாயணக் கதை சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

**பாரல்லி**:—ராஜபுதனம், பேரோல்லி கிராமம்;சிவாலயம். ஸ்வாமி·கடேஷ்வர். கோயில் மிகவும் அழகிய சில்ப முடையது. கூரையின் உட்புறத்து வேலைப்பாடுகள் பார்க்கத் தக்கவை. சர் பெர்கூசன் என்பவர் இதை மிகவும் புகழ்ந்திருக்கிறார்.

**பால்மாறு** :—உடுபி தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**பால்முறி** :—மைசூர் ராஜ்யம், ஸ்ரீரங்கப்பட்டணம் தாலுகா, அகஸ்தீஸ்வரர் கோயில்,

**பாலக்காடு** :—மலபார் ஜில்லா, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி-விஸ்வநாதர், தற்காலக் கோயில் 1425-ஆம் இட்டி கொம்பி ராஜன் என்பவரால் கட்டப்பட்டது. இங்கு முசாபர் பங்களா உண்டு.

பாலக்கோல் :—குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ராமலிங்கேஸ்வர் கோயில்.

பால சோர் பிரிவு :—வங்காள ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் : (1) பாலசோர் அல்லது பாலசூர் பட்டணம் ஸ்வாமி-பாணேஸ்வர், லிங்கம் பாணாசுரனால் பூசிக்கப் பட்டது என்பது ஐதீகம், சுயம்பு லிங்கம். (2) ரேமுனு கார்க்கேஷ்வர் கோயில். (3) ஷேர்காகர் ஷ-ரேஸ்வரர் கோயில். (4) பங்கேஷ்வர் பக்ரேஷ்வர் கோயில். (6) பர் தன்பூர் மணிநாகேஸ்வரர் கோயில் (இவைநான்கிலும் மேற்கு பார்த்த லிங்கங்கள் உள.) (6) குமாரி கிராமம், சிவாலயம் ஆதியில் புத்த ஆலயமாயிருந்து பிறகு சிவாலய மாக மாற்றப்பட்டதாம். (7) நங்களேசர் கிராமம் லாங்க ளேஸ்வரர் கோயில் (லாங்கலம்=கலப்பை) ஸ்வாமி-ஹர பார்வதி. (ஹரன்+பார்வதி) பரமசிவத்திற்கும் பார்வதிக் கும் விக்ரஹங்கள் இருக்கின்றன. (இது சாதாரணமாக வட இந்தியாவில அபூர்வம்.)

பாலம்பீட் :—ஹாங்கலக்கு 6 மைல், கோயில் கோபுரம் திராவிட சில்பம்; மற்றது சாளுக்கிய சில்பம். ஸ்வாமி-கள்ளேஸ்வரர் அல்லது காலமேஸ்வரர்,

பாலாகாட் பிரிவு :—மத்திய மாகாணம்;இங்கு 3 கோயில் கள் உள. (1) வஞ்சி கிராமம், இங்கு 1 மைல் தூரத்தில் காட்டின் மத்தியில் கோடேஷ்வர் சிவாலயம், ஹேமாத் பண்ட் கட்டிடம். சிவராத்திரிதான் பூஜை. (2) சாவர் கோரி கிராமம், மஹாதேவர் கோயில்; குகைக் கோயில் சிவராத்திரி விசேஷம்.

பாலாத் துறை :—திருப்பாலாத் துறை என்று வழங்கப் படுகிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி மார்க்கண்டர் பூசித்த ஸ்தலம்,

பாலக்கோட் :—சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-பரமேஸ்வரர், இந்த லிங்கம் ஆதியில் கிருஷ்ண ராஜபேட்டையிலிருந்தது ; அது பாழாய்ப் போக இங்கு கொண்டு வந்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக் கோயில் பாஸ்கர ராஜா என்பவரால் கட்டப்பட்டது.

**பாலகிரி** :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, பீமேஸ்வர ஸ்வாமி கோயில்.

**பாலக்குடி** :—திருப்பாலக்குடி எனவும் வழங்கம்படுகிறது. ராம்நாத ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-மந்தநாதஸ்வாமி; ஸ்ரீராமர் பிரதிஷ்டை யென்பது ஐதீகம்.

**பாலகோலு** .—சென்னை ராஜதானி, கிருஷ்ணு ஜில்லா· சிவாலயம். தங்கலிங்கம் உள்ளது.

**பாலங்கரை** :—புதுக் கோட்டை சமஸ்தானம், புதுக் கோட்டைக்கு 13 மைல்-பழைய சிவாலயம்.

**பாலி கட்டம்** :—விசாகப்பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி; நரசராவ் பட்டணத்திலிருந்து 23 மைல், சிவாலயம். பிரம்மேஸ்வரர் கோர்யில், சந்நிதி மேற்கு பார்த்தது. இங்கு பாய்கிற பண்டேடு எனும் சிறு நதி உத்தர வாஹினி.

**பாலிவி** :—எல்லூருக்கு 8 மைல், நுஜ்வீடிலிருந்து 10 மைல், சென்னை ராஜதானி, சிவாலயம். சிவராத்திரி உற்சவமும், கலியாண உற்சவமும் விசேஷம்.

**பாலுவா** :—ஐக்கிய மாகாணம், (1) பார்த்தி கிராமம் சிவாலயம். கௌலேஷ்வர்நாத் மஹா தேவர் கோயில், பழைய சிவாலயம் கிலமாகிப் போக, சுமார் 250 வருடங்களுக்கு முன் தடுராய்பக்த்சிங் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது. (2) ராணிதலால் கிராமம் சிவாலயம், ராஜா மஹிப் நாராயண சிங் என்பவரின் மனைவியால் கட்டப்பட்டது.

**பாலைத் துறை** :—(திரு) திருப்பாலத் துறை என்று அழைக்கப்படுகிறது; திருச்சிராப்பள்ளி தாலுகா, சென்னை ராஜதானி, பாபநாசத்திற்கு $1\frac{1}{2}$ மைல் வட கிழக்கு, பிரமன் பூசித்த ஸ்தலம். தாருகாவனத்து ரிஷிகள் அனுப்பிய புலியை உரித்து, சிவபெருமான் அதன் தோலைப் போர்த்துக்கொண்ட ஸ்தலம், ஸ்வாமி - பாலைவன நாதேஸ்வரர் அல்லது தாருகவனேஸ்வரர், தேவி-தவள வெண்ணகையம்மை, காவிரி நதி, கோயில் மிகவும் பழையது; கிலமா

யிருக்கிறது. கோபுர ஸ்தூபிகள் எடுத்துவிடப்பட்டன. அப்பர் பாடல் பெற்றது,

**பாலை வனம்** :--சென்னை ராஜதானி, பொன்னேரியி லிருந்து 11 மைல்-சிவாலயம். லிங்கம் வெண்ணிற முடையது. திருப்பாற் கடலைக் கடைந்த போது தெறித்த பால் துளிகளாலாய தென்பது ஸ்தல புராணம். லிங்கம் வடு பட்டது; சூடான அபிஷேகம் செய்யக்கூடாது. கர்ப்பக் கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி. பிரம்மொற்சவம் பங்குனி மாசம்.

**பாங் நகர்** :—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவாலயம்.

**பாவஞ்சா** :—மங்களூர் தாலுகா; தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி. மஹா வில்வேஸ்வரர் கோயில்.

**பாளையங் கோட்டை** :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம் திரிபுராந்தகர் - விசாலாட்சி, வைப்புஸ்தலம்.

**பாவசாரி** :—பம்பாய் ராஜதானி, மஹாதேவர் ஆலயம்.

**பாழலி** :—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-சுந்தரேஸ்வரர், தேவி-பார்வதி.

**பாறி வைஜநாதர் கோயில்** :—பான மாடத்திலிருந்து புறப்பட்டு பாமணி ஸ்டேஷனிலிறங்கி 12 மைல் போக வேண்டும், சிவாலயம்.

**பாற்றுறை** ,—(திரு) சென்னை ராஜதானி, திருவெறும்பூருக்கு 4 மைல் வட கிழக்கு. மார்க்கண்டேயர் பூசித்த பொழுது அபிஷேகத்திற்குப் பால் கிடைக்காமற்போக, சிவபெருமான் பால் பெருகும்படி அனுக்கிரஹித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-மூலநாதேஸ்வரர், தேவி-மேகலாம்பிகை, அல்லது மோகலாம்பிகை, கொள்ளிட தீர்த்தம். சிவபெருமான் பொன் இதயமாயப் புற்றிலிருந்து எழுந்தருளிய ஸ்தலம்-திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

பாஜித்பூர் :—ஐக்கிய மாகாணம். இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு: (1) ஜாஜ்மௌ இதன் பழைய பெயர் சித்தபுரீஸ்வரம்; பிரத்தேஷவர், தேவி-சிந்தாதேவி. (2) ஷாஜஹான் பூர் பிரிவு, பிலிபிட் கிராமம், கௌரி சங்கர் கோயில்.

பாஜௌரா :—வட இந்தியா, காங்கிரா ஜில்லா, ரவி நதிக்கரையிலுள்ளது, சிவாலயம்; 35 அடி உயரம். ஆரிய சில்பம். மோடார் வண்டுகள் மூலமாகப் போகலாம்.

பாஹூர் :—புதுச்சேரிக்கு அருகாமையி லுள்ளது, சென்னை ராஜதானி, சிவாலயம் பல்லவ சில்பம். ஸ்வாமி-மூலேஸ்வர், கல்வெட்டுகளில் மூலஸ்தான முடையார் என்றிருக்கிறது. இங்கு பல கல் வெட்டுகள் உண்டு.

பாஸ்ஸாலா :—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்.

பாஷான் :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, சிவாலயம். கோயில் ஷாஹூ மகா ராஜாவின் தாயாரால் சுமார் 1708-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. சக்ரதீர்த்தம், சிவராத்திரி விசேஷம்.

பிகனீர் சமஸ்தானம் :—வட இந்தியா, இங்குள்ள சிவாலயங்கள் :-(1) கோட்பூர் பிரிவு நாநா கிராமம், சிவாலயம். ஸ்வாமி-நீலகண்ட மஹாதேவர். (2) பில்ரா பிரிவு புக்களா கிராமம் ; மஹாதேவர் சிவாலயம். இதற்கு அருகில் பார்வதி கோயில் பிரத்யேகமாக உளது. சுமார் 100 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. (3) நாடோல் கிராமம், சோமேஸ்வரர் கோயில், பழைய சிவாலயம். (4) சத்ரி ஜோகேஷ்வர் சிவாலயம். (5) ஜஸ்வந்த பூர் பிரிவு ரத்னபுரி கிராமம்; சிவாலயம் 12-ஆம் நூற்றூண்டில் கட்டப்பட்டது. (6) கேர் கிராமகூபம், இங்கு 3 சிவாலயங்கள் உள. மேற்கு பார்த்த கோயில்கள். (7) நாகௌர் பட்டணம் முரளிதரர் கோயிலில் இங்கு ஒரே பிரகாரத்தில் அக்கம் பக்கமாய் லிங்கமும், கிருஷ்ண விக்ரஹமும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. (8) பாலி கிராமம், சிவாலயம் 1143-ஹு குமாரபாலர் என்பவரால் கட்டப்பட்ட அழகிய கோயில். (9) பிகனிர்பட்டணம்-புதிய சிவாலயம் அழகியது.

பிட்சாண்டார் கோயில் :—இதற்கு சமய புரம் என்றும் பெயர். திருச்சிராப்பள்ளிக்கு 7 மைல், லால்குடி தாலுகா திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். உத்தமர் கோயில், ஸ்வாமி பெயர் கல்வெட்டுகளில் திருக் கரம்பத்துறை மஹா தேவர் என்றிருக்கிறது.

இங்கு மஹா விஷ்ணுவிற்கும், பிரம்மாவிற்கும் சந்நிதிகள் உண்டு; தினம் மும்மூர்த்திகளுக்கும் பூஜை நடக்கிறது. இவ்விடம் பஞ்சப்பிரகார உற்சவம் விசேஷம்.

பிட்டா புரம் :—(பிஷ்டபுரம்) கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, குக்குடேஸ்வரர் சிவாலயம். பாதகயை தீர்த்தம், இங்கு கயாசுரனைப் பரமசிவம் சம்ஹாரஞ் செய்த இடமாம்.

பிட்டான்பூர் :—பெங்கால்நாகபூர் ரெயில்வேயிலுள்ள சல்பா எனும் ஊருக்கு 2 மைல்-சிவாலயம்.

பிடவூர் :—தற்காலம் திருபபட்டூர் என்னும் பெயருடையது. திருசசிராப்பள்ளி ஜில்லா, முசிறி தாலுகா, இதுதான் சங்க காலத்திய பிடவூர்; சிவாலயம் வைப்பு ஸ்தலங்களில் ஒன்று.

பித்ரஹல்லிக் கோட்டை :—பம்பாய் ராஜதானி துங்கபத்ரைக் கரையிலுள்ளது. சிவாலயம் பாழாயிருக்கிறது. பஞ்சமுக லிங்கம்.

பிரங்கி புரம் :—வினுகொண்டா தாலுகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். ஸ்வாமி-வீரபத்ரேஸ்வர்.

பிரம்பியம் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கும்பகோணத்திற்கு 5 மைல் வடமேற்கு-சிவாலயம்.

பிரம்மதேசம் :—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-சந்திரமௌளீஸ்வரர். கிருஷ்ண சாஸ்திரியார் இது பல்லவ கட்டடம் என்று கூறியுள்ளார்; தூப்ரெயில் துரை பழைய சோழ கட்டடம் என்று நினைக்கிறார்.

**பிராக்ஜோதிஷ புரம்**:—வட இந்தியா, கோஹத்திக்கு சமீபம், சிவாலயம். ஸ்வாமி-கபிலேஸ்வரர், தேவி-காமாட்சி. பிரம்மபுத்ர நதியின் மத்தியில் ஒரு சிறு குன்றின்மேலுள்ள சிவாலயம்.

**பிரம தேசம்**:—அம்பா சமுத்திரம் தாலுகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, கைலாசநாத ஸ்வாமி கோயில். இதற்குப் பெரிய தெப்பக்குளம் உண்டு. கோயிலிலுள்ள சோமவார மண்டபம் பார்க்கத் தக்கது. கோயில் நாயக்க அரசர்கள் காலத்தியதாயிருக்கலாம். பெரிய கோபுரம் மேற்கு பார்த்தது. 7 நிலைகளையுடையது. கிழக்கு கோபுரம் நாயக்க அரசர்கள் மந்திரியாகிய வீர ராகவ முதலியாரால் கட்டப்பட்டது, சுமார் 400 வருடங்களுக்கு முன். மதுரை கோயிலை ஒத்திருக்கிறது. கோயில் தெற்கே பார்த்தது. கர்ப்பக்கிரஹத்தில் தும்புரு நாரதர்களுடைய சிலைகளிருக்கின்றன.

**பிரம்ம கபாலம்**:—வட இந்தியா பதிரிகாஸ்ரமத்திற்கு சமீபமுளது. சிவாலயம்; ஸ்வாமி-கபாலேஸ்வரர். இது கங்கை உற்பத்தியாகுமிடம்.

**பிரம்மபுரம்**:—தென் இந்தியா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி - பிரம்மேஸ்வரர், தேவி - நாகவல்லி; பிரம்மா பூசித்த க்ஷேத்திரம்.

**பிரபாசம்**:—வட இந்தியா சிவாலயம். ஸ்வாமி - சசி பூஷணர். சுயம்புலிங்கம்.

**பிரயாகை**:—(அலஹாபாத்) வட இந்தியா ரெயில் ஸ்டேஷன். கங்கையும், யமுனையும் சங்கமமாகுமிடம்; திரிவேணி சங்கமமம் என்று பெயர். சரஸ்வதி நதி அந்தர் வாஹினியா யிருப்பதாக ஐதீகம். சிவாலயம், ஸ்வாமி-சோமேஸ்வரர், தேவி-பார்வதி; சுயம்புலிங்கம்; திரிவேணி தீர்த்தம். கோயில் யமுனையின் கீழ்க்கரையிலுள்ளது.

**பிறம்பில்**:—பிறம்பூர் என்றும் பெயர். சென்னை ராஜதானி, தென் இந்தியா, மங்கநல்லூர் ஸ்டேஷனிலிருந்து 5 மைல், தேவார வைப்புஸ்தலம். தற்காலம்

குமாரசாமி கோயிலாக பிரசித்தி பெற்றது. ஆயினும், சிவபெருமானும் தேவியாரும் கோயில் கொண்டிருக்கின்றனர்.

**பிரான் மலை** :—திருப்பத்தூர் தாலுகா, ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி. கொடுராஜீஸ்வரர் கோயில்; விஸ்வநாதர் கோயில், சொக்கநாதர் கோயில்.

**பிருந்தாவனம்** :—வட இந்தியா (பிரபல விஷ்ணு க்ஷேத்திரம்) சிவாலயம். கோயில் ஸ்ரீ கிருஷ்ணன் காலத்திற்கு முந்தியதாகச் சொல்லப்படுகிறது, ஸ்வாமி-மஹாதேவர், தேவி-பார்வதி. (மிகவும் பழமையான கோயிலென காலஞ் சென்ற கே. ஆறுமுகப் பிள்ளை கூறுகிறார்.) யமுனை தீர்த்தம்.

**பில்சாட்** :—வட இந்தியா, சிவாலயம், ஸ்வாமி-மஹாசேனர் கோயில்-415-ம் வருஷத்திற்கு முந்தியதென சிலர் கூறுகின்றனர்.

**பிலாஸ்பூர்** :—வட இந்தியா, மத்ய மாகாணம்; இங்குள்ள சிவாலயங்கள் :-(1) பிலாஸ்புரி ரங்கநாத் ஷிவ் - சிவாலயம். (2) கரோட் கிராமம், சிவாலயம் ஸ்வாமி-லட்ச்மேஸ்வரர்; சுமார் 1300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. மத்திய மாகாணத்தில் இதுதான் சிறந்த கோயில். (3) பாலி கிராமம் சிவாலயம், ஜாஜல்ல தேவரால் கட்டப்பட்டது. அழகிய சில்பமுடையது. (4) பீதாம்பூர் கிராமம். மஹாதேவர் சிவாலயம். இங்கு பிரார்த்தனை செலுத்துவோர் ஒரு லட்சம் சிதைவு இல்லாத அரிசிகளைக் செலுத்துகின்றனர். (5) தேன்பூர் பிர்தேஷ்வர் மஹாதேவர் சிவாலயம்.

**பிள்ளையார் பட்டி** :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, சிவாலயம்; ஸ்வாமி-மருதீசர், தேவி-வாடாமுலையம்மை.

**பிற்றமங்கலம்** :—மைசூர் ராஜ்யம். முக்தி நாதேஸ்வரர் சிவாலயம், 11-ஆம் நூற்றூண்டில் கட்டப்பட்டது.

**பீம்சங்கர் கோயில்** :—பம்பாய் ராஜதானி; ஜி. ஐ. பி. ரெயிலில் நேரளத்திலிருந்து காண்டசத்துக்குப் போய் அங்கிருந்து சில மைல்கள் மலையேறிப் போகவேண்டும். சிவாலயம், வட இந்தியாவிலுள்ள 12 ஜோதி லிங்கங்களில ஒன்று இங்குளது. பழைய கோயில், இங்கு நாநாபட் நாவிஸ் எனும் மஹாராஷ்டிர தலைவரால் கட்டப்பட்ட புதிய கோயில் ஒன்றுண்டு.

**பீமவரம்** :—கோதாவரி ஜில்லா, காகிநாடாவிலுள்ளது. சென்னை ராஜதானி, இவ்வூருக்கு சாளுக்கிய பீமேஸ்வரம் என்று பெயர். சிவாலயம், ஸ்வாமி-பீமேஸ்வரர், தேவி. திரிபுர சுந்தரி - தாருகாசுரன் கழுத்திலணிந்திருந்த சிவ லிங்கங்கள் ஐந்து; அவற்றுள் இது ஒன்று எனப்படும்.

**பீர்கட்** :—ஜி. ஐ. பி. ரெயில் பிஞ்கன்ஜ் ஸ்டேஷனுக்கு 3 மைல். மலையின் உச்சியில் சிவாலயம்.

**பீஜபூர் பிரிவு** :—பம்பாய் ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் :—(1) அகர்கேட் கிராமம், சிவாலயம்; 23 × 23 × 28 அடி விஸ்தீரணம். ஸ்வாமி - சங்கர்லிங் மஹாதேவ், சிவலிங்கம் வெள்ளைக் கல்லாலாயது (2) பால்கோவான் கிராமம், பாலேஷ்வர் சிவாலயம். (3) தேர் கோவான் கிராமம், மல்லிகார்ஜுனர் கோயில்; ஹேமாத்பண்ட் கட்டடம். (4) தாருக கிராமம், சிவாலயம் குகைக்கோயில். (5) டாங்கர் கோலான் கிராமம், மஹாதேவர் கோயில். (6) கோடான் கிராமம் சிவாலயம். (7) கொண்டே கோவான் கிராமம், மார்க்கலநாத் கோயில்; ராமேஷவரர் கோயில். (8) காரங் பிம்பிரி கிராமம், பிரம்மேஷவர் கோயில். (9) ஹரிச்சந்தர்கட்-அங்கேஷ்வர் மஹாதேவ் கோயில். (10) ஜான்கேட் கிராமம். ஜடாஷங்கர் ஆலயம். பூர்வம் மண்ணால் மூடப்பட்டிருந்தது, பிறகு வெளிப் படுததப்பட்டது. (11) கார்கேட் கிராமம். இங்கு 2 சிவாலயங்கள் உள. (12) சிரூர் கிராமம், ராமலிங்கர் கோயில், 50 × 20 அடி விஸ்தீர்ணம்; சித்தேஷ்வர் கோயில் 60 × 32 அடி விஸ்தீரணம்; இது ஆதியில் ஜெயின ஆலயமாயிருந்த தென்பர்; (13) தலைக் கோட்டை கிராமம், சிவாலயம். (14) அல்மேல் கிராமம், ராமலிங்கஸ்வாமி ஆலயம்; பாழா

யிருக்கிறது. இங்கு 3 லிங்கங்கள் உண்டு. ஒன்றில் நான்கு முகங்கள் இருக்கின்றன. (15) பாகேலாடி கிராமம், இங்கு 2 சிவாலயங்கள் உண்டு, பசவேஷ்வர் கோயில், ராமேஷ்வர் கோயில், இரண்டும் தெற்கு பார்த்தவை. (16) பாசா கோட் கிராமம், மல்லிகார் ஜுனர் கோயில்; மூர்லிங்குடி. (மூன்று லிங்கங்கள் குடி) இது சுமார் 150 வருடங்களுக்கு முன் கட்டப் பட்டது. (17) பேவுர் கிராமம், ராமேஷ்வர் கோயில், (18) பில்கி கிராமம், மஹாதேவர் ஆலயம், 1708-ஆம் கட்டப்பட்டது. (19) சிமால்கி இதன் முழுப் பெயர் சின்மய க்ஷேத்திரம், சிவாலயம். இங்கு 108 சிவ லிங்கங்கள் இருந்ததாக ஐதீகம். இங்கு ஆற்றின் கீழ் ஒரு சிவாலய மிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. (20) தேவாங் கோவன் கிராமம், 3 சிவாலயங்கள் : காமேஷ்வர் கோயில்; மல்லிகார்ஜுனர் கோயில், சங்கரலிங்கர் கோயில். (21) தூல்கேட் கிராமம், சங்கரலிங்கர் கோயில், 20 × 30 அடி விஸ்தீரணம். (22) முத்திகி கிராமம். 2 கோயில்கள் ; காசி விஸ்வேஸ்வரர் கோயில், மூக்தேஸ்வரர் கோயில். (23) நாலத்வாங் கிராமம், சிவாலயம்; 800 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. (24) நந்தி கேஷ்வர் கிராமம், மஹா கூடேஷ்வர் கோயில் 12 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது; முடி மல்லிகார்ஜுனர் கோயில், கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் மகுடேஷ்வர் என்றிருக் கிறது. இங்குள்ள தீர்த்தத்திற்கு விஷ்ணு புஷ்கரிணி என்று பெயர், விரூபாட்சர் கோயில். (25) நந்திவடிகோ கிராமம், பெரிய ஈஸ்வரர் கோயில். (26) ஈக்ஷாங்கி கிராமம், காளப்பர் கோயில். (27) சலோட்சி கிராமம், சிவயோகேஷ்வர் கோயில் 75 × 75 × 30 அடி விஸ்தீரணம். பழைய கோயில், இங்கு லிங்கம் கற்பாறையின கீழ் இருப் பதாக ஐதீகம்; சோமநாத் கோயில், கஜனி மகம்மதால் குஜராத் சோமநாதர் ஆலயம் அழிக்கப்பட்டபோது, அங் கிருந்த சிவலிங்கம் இக் கோயிலில் ஒளித்து வைக்கப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது. இக் கோயில் 1000 வருடங் களுக்கு முற்பட்டது. (28) சங்கமேஷ்வர் கோயில், பால் பிரபா, கிருஷ்ணு, நதிகள் சங்கமமாகுமிடம் - சிவாலயம். ஜெயின சில்பங்களிருக்கின்றன. பூர்வத்தில் ஜெயினலய

மாக இருந்திருக்கலாம். (29) சில்பூர் கிராமம், சிறிய சிவாலயம். (30) சிந்த்கி கிராமம், சங்கமேஷ்வர் கோயில். (31) கஜேந்திர கட் கிராமம். இங்கு 3 சிவாலயங்கள் உண்டு: விரூபாட்சர் கோயில், ராமலிங்கர் கோயில், கால்கேஷ்வர் கோயில். (32) கோல்கெலி கிராமம், கோலவீஷ்வர் சிவாலயம். (33) குடூர் கிராமம், ராமேஷ்வர் கோயில். (34) ஹீப்பார்கி கிராமம், கால்மேஷ்வர் கோயில் 30 × 15 அடி விஸ்தீரணம். (35) ஹீரூர் கிராமம், மாகேஷ்வர் கோயில். (36) ஹோர்தி கிராமம், சித்தேஷ்வர், மல்லிகார்ஜுனர் கோயில்கள். இவற்றுள் மல்லிகார்ஜுனர் கோயில் திராவிட சில்பமமைந்தது. 6-ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்டதாக கசின்ஸ் எண்ணுகிறார். (37) இங்கிலேஷவர் கிராமம், சோமேஷ்வர் கோயில்; இங்கு சித்தேஷ்வர் கோயில் எனும் குகைக் கோயிலுமுண்டு. (38) கெரூர் கிராமம், நாகேஷ்வர் கோயில் 1505-ஹு கட்டப்பட்டது. (39) குண்டார்சி கிராமம், மஹாபில்கேஷ்வர் கோயில்; மதிவலேஷ்வர் கோயில், இது ஏரியின் மத்தியிலிருக்கிறது. (40) முத்தபிலால் கிராமம், சிறிய சிவாலயம்.

பிஜோலியா :—ராஜபுதனத்திலுள்ளது. இங்கு 3 சிவாலயங்கள் உள.

புக்க அக்ரஹாரம் :—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-காசிவிஸ்வநாதர், தேவி-விசாலாட்சி.

புகடா :—கோட கொல்லா கிராமம், பர்ஹாம்பூர் தாலுகா, கஞ்சம் ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம் குன்றுகளின் அருகில் உள்ளது.

புகலூர் :—(திரு) சென்னை ராஜதானி, நந்நிலத்திற்கு 4 மைல் கிழக்கு சிவாலயம். இங்கு புலி உருவத்தில் பரமசிவம் எழுந்தருளியிருக்கிறார். ஸ்வாமி - அக்னீஸ்வரர் அல்லது கோளப்பிரான், தேவி-கருந்தார்குழலியம்மை. அக்னி தீர்த்தம், புன்னை மரம், திருநாவுக்கரசு நாயனார் முக்தி பெற்ற ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் தலையில் வைத்துறங்கின செங்கற்கள், பொன் கற்களாக்கிய

ஸ்தலம். தேவார காலத்தில் ஸ்வாமி பெயர் கோளபிரான். பிரம்மோற்சவம் வைகாசி மாசம். மூவர் பாடல் பெற்ற க்ஷேத்திரம். புகலூர் வர்த்தமனீச்சரம் (திரு)-திருப்புகலூர் கோயிலின் வடபுறமுள்ளது, புஷ்பமாலை தொண்டுசெய்து முருக நாயனர் வசித்த ஸ்தலம். மேகங்கள் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி - வர்த்தமானீஸ்வரர், தேவி - கருந்தார் குழலியம்மை, அக்னி தீர்த்தம், திருஞாஸசம்பந்தர் பாடல் பெற்றது.

**புட்டிகே** :—மங்களூர் தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி; சோமநாதர் சிவாலயம்-பல கல்வெட்டு களுடையது.

**புடைமருதூர்** :—அம்பா சமுத்திரம் தாலுகா, திருநெல் வேலி ஜில்லா, சென்னை ராஜதானி; நாரம்புநாத ஸ்வாமி கோயில், தேவி-கோமதியம்மன். இங்கு மாறன் சடையன் பாண்டியனது கல் வெட்டொன்று உளது. இங்கு மற்றொரு சிவாலயமுண்டு. ஸ்வாமி - சென்னபுரீஸ்வரர், தேவி-மங்கள நாயகி. புதிய கோயில் சுமார் 400 வருடங் களுக்கு முன் கட்டப்பட்டதென்பர்; 5 நிலைக் கோபுரம், ஸ்வாமி சந்நிதியும், அம்மன் சந்நிதியும் அக்கம் பக்கமா யிருக்கின்றன. நாயக்க அரசர்கள் காலத்தியதென்பர். கோயில் ஸ்டேஷனுக்கு 3 மைல் தூரம். தாமிரபர்ணி நதிக்கரையிலுள்ளது.

**புத்துக் கோட்டை** :—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-அகஸ்தீஸ்வரர், தேவி - ஆநந்தவல்லி; அகஸ்திய தீர்த்தம்.

**புத்தூர்** :—(திரு) சென்னை ராஜதானி. பிரான் மலைக்கு 15 மைல் தென் கிழக்கு. உமாதேவியார், லட்சுமி, பூசித்த க்ஷேத்திரம். சிவகங்கையிலிருந்து 22 மைல். ஸ்வாமி-புத்தூர் ஈஸ்வரர், தேவி-சிவகாமியம்மை. சீதளி தீர்த்தம், கருட தீர்த்தம், கொன்றை விருட்சம். இங்குள்ள பயிரவர் சந்நிதி விசேஷம். திருஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

புத்தூர் :—ஆறணி தாலுகா, வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. வித்யாநாதேஸ்வரர் கோயில், கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் வித்யாபதீஸ்வர முடைய நாயனர் என்றிருக்கிறது.

புது ஆவடையரர் கோயில் :—சென்னை ராஜதானி, தம்பிக் கோட்டை ஸ்டேஷனுக்கு 2½ மைல் வட மேற்கு. சிவாலயம், ஸ்வாமி-மத்யஸ்தம்புரீஸ்வரர், கோயிலில் திங்கட் கிழமைகளில் இரவு 12 மணிக்கு சிவபூஜை நடக்கிறது.

புல்டாம்பா :—மத்ய இந்தியா ரெயில் ஸ்டேஷன். சிவாலயம், கோதாவரிக் கரையிலுள்ளது.

புதுக் கோட்டை :—சென்னை ராஜதானி, புதுக் கோட்டை சமஸ்தானத்தின் தலைநகர்; இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு. (1) கோகர்ணத்தில் ஸ்ரீ கோகர்ணேஸ்வரர் கோயில், தேவி - பிரஹதாம்பாள். கர்ப்பக் கிரஹம் மலையில் குடையப்பட்டிருக்கிறது. லிங்கமும் அப்படியே குடையப்பட்டிருக்கிறது. குலோத்துங்க சோழன் காலத்தியது என்று எண்ணப்படுகிறது. பிரம்மோற்சவம் சித்திரை மாசம், (2) ஊர்மத்தியில் சாந்த நாத ஸ்வாமி கோயில், தேவி-வேத நாகியம்மன்.

புதுநகரம் :—பாலக்காட்டிற்கு 6 மைல் தூரம். மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, பெரிய சிவாலயம்.

புதுசசேரி :—சென்னை ராஜதானி, பிரெஞ்சு இலாகா முக்கிய பட்டணம். ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஆலயம், புதியது. சுமார் 300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. இங்கு அம்மணி வாசம் எனும் சத்திர முண்டு.

புதுப்பபடி :—ஆற்காடு தாலுகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி ; பாரத்வாஜேஸ்வரர் கோயில்.

புதுவயல் :—சென்னை ராஜதானி; செட்டி நாட்டிலுள்ள சிவஸ்தலம்; ஸ்வாமி-வீரசேகரா, தேவி - உமையம்பிகை, விநாயகருக்கு கைலாய விநாயகர் என்று பெயர்.

புரபு கோயில் :—குளித்தலை தாலுகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

புரிசை :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-புரீஸ்வரர், லிங்கம் சுக்ரீவப் பிரதிஷ்டை யென்பது ஐதீகம்.

புல்லம்பேட் :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம்.

புலிப்புறக் கோயில் :—சென்னை ராஜதானி; தென் இந்தியா சிவாலயம், ஸ்வாமி-திருப்புலீஸ்வரர், பிரம்மோற்சவம் தைமாசம்,

புலியூர் கிராமம் :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கரூர் தாலுகா, பழைய சிவாலயம்.

புவலைக் குடி :—திரு மெய்யம் தாலுகா, புதுக்கோட்டை சமஸ்தானம், புதுக்கோட்டைக்கு 16 மைல், சிவாலயம். மலைக் குகைக்கோயில்.

புவனகிரி :—தென் இந்தியா, சென்னை ராஜதானி; ஸ்வாமி-வேதபுரீஸ்வரர், தேவி-மீனாட்சி யம்மை.

புலிவனம் :—சென்னை ராஜதானி; மதுராந்தகம் தாலுகா உத்தரமேரூருக்கு 5 மைல், காஞ்சீபுரத்திற்கு 15 மைல், சிவாலயம். கர்ப்பக்கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி. ஸ்வாமி - வியாக்ரபாதீஸ்வரர், அமிர்தேஸ்வரர், தேவி-யாகாம்பிகை, பாலாம்பிகை, கல்வெட்டுகளில் ஊர் பெயர் புலிவலம் என்றிருக்கிறது. வியாக்ரபாதர், சூரியன், மார்க்கண்டர் பூசித்த க்ஷேத்திரம். இங்குள்ள லிங்கத்திற்கு ஜடையிருக்கிறது.

புலிவலம் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருவாரூருக்கு 2 மைல். தட்சிண கோகரணம் என்றும் பெயர். சிவாலயம் இங்குள்ள தட்சிணா மூர்த்தி பார்க்கத் தக்கது. ஸ்வாமி-கோகர்ணேஸ்வரர், தேவி-ஆநந்தவல்லி, வைப்புஸ்தலம்.

புவனேஸ்வரம் :—வங்காள நாக்பூர் ரெயில் ஸ்டேஷன். வட இந்தியா - குர்தாஸ் ஸ்டேஷனிலிருந்து 11 மைல். பிரபல சிவஸ்தலம், இங்கு முற்காலத்தில் 7000 சிவாலயங்களிருந்தனவாம். தற்காலம் சுமார் 500 சிவாலயங்களுண்டு. (1) இவற்றுள் லிங்கராஜ் மஹாதேவர் ஆலயம் மிகவும் பெரியது ; மிகச் சிறந்தது. கோபுரம் ஏழாம் நூற்றூண்டில் கட்டப்பட்டது. ஸ்வாமி பெயர் லிங்கராஜ் மஹாதேவர், புவனேஸ்வரர்;தேவி-பார்வதி; பிந்து சரோவாத் தீர்த்தம்,மஹாநதி அருகிலுள்ளது. லிங்கத்தை பஞ்சமர்கள் மகம்மதியர்கள் தவிர மற்ற எல்லா ஹிந்துக்களும் தொட்டு பூஜை செய்யலாம். கோயில் வட ஆரிய சில்பமமைந்தது, மிகவும் அழகியது. ஒரிஸ்ஸாவையாண்ட யயாதிகேசரி எனும் அரசனுல் ஆரம்பிக்கப்பட்டு அவனது பேரனுகிய அலபு கேசரி அல்லது லலாட் இந்திரகேசரியால் முடிக்கப்பட்டது. இங்குள்ள நாட்டிய மந்திரம் 11-ஆம் நூற்றூண்டில் சாலின கேசரியின் ராணியால் கட்டப்பட்டது. விமானம் 180 அடி உயரம், சுயம்புலிங்கம் 8 அடி உயரம்; பிராகாரம் 520 அடி × 465 அடி. பிராகாரத்தில் பகவதி, பார்வதி, ஆலயம். (2) இதற்கு ½ மைல் தூரத்தில் முக்தேஷ்வர் ஆலயம். இது 6-ஆம் நூற்றூண்டில் கட்டப்பட்டது. அழகிய சில்பமமைந்தது. (3) பரசுராமர் ஆலயம். இது 2-ஆம் நூற்றூண்டில் கட்டப்பட்டதென்பர். இதுதான் இங்குள்ள சிவாலயங்களுக் கெல்லாம் பழமையானது. ஆரிய சில்பமமைந்தது. (4) பாஸ்கரேஸ்வரர் ஆலயம், புவனேஸ்வரர் ஆலயத்திற்கு வட கிழக்கிலுள்ளது. 6-ஆம் நூற்றூண்டில் கட்டப்பட்டது. லிங்கம் மிகவும் பெரியது. (5) அருகாமையிலுள்ள கௌரி குண்டம் எனும் ஏரிக் கரையில் கேதாரேஸ்வரர் ஆலயமிருக்கிறது. மற்றுமுள்ள முக்கிய ஆலயங்கள் "சித்தேஸ்வர ஆலயம் ; வருணேஸ்வரர் கோயில ; கபிலேஸ்வரர் கோயில், ராமேஸ்வர் கோயில்: பரமேஸ்வரர் கோயில், உத்தரேஸ்வரர் கோயில், சிசிரேஸ்வரர் கோயில், மைத்ரேஸ்வரர் கோயில், மேகேஸ்வரர் கோயில், சுயம்புகேஸ்வரர் ஆலயம், கோடிதீர்த்தேஸ்வரர் ஆலயம், பிரம்மேஸ்வரர் ஆலயம் முதலியன ; இங்கு பல சத்திரங்கள் உண்டு.

புழல் :—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-திருமூலஸ்தான முடைய நாயனுர்.

புள்ளமங்கை :—(திரு) இதற்கு ஆலந்துறை என்றும் பெயர் உண்டு. சிவபெருமான் ஆலத்தை உட்கொண்ட க்ஷேத்திரம். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். ஐயம் பேட்டைக்கு 2 மைல். ஸ்வாமி-ஆலம் தவிர்த்த ஈஸ்வரர், பசுபதி நாதேஸ்வரர், தேவி-அல்லியங்கோதை; கோயிலி லுள்ள காளிக்கு தலைபலி யிடுவதுபோல் ஒரு சில்பமுண்டு. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. பரகேசரி வர்மன் முதலிய சோழ அரசர்கள் காலத்திய கல்வெடடுகள் பல உள. இங்கு பசுபதி கோயில் என்றும் ஒரு சிவாலய முண்டு. ஸ்வாமி-பசுபதிநாதேஸ்தரர், தேவி-பால்வண்ண நாயகியார், சிவ தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

புறம்பயம் :—(திரு) திருப்புறம்பியம் என்று அழைக் கப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கும்பகோணத்திலிறங்கி 6 மைல் போகவேண்டும். இன்னம் பருக்கு 2 மைல் வடமேற்கு. ஸ்வாமி-சாட்சிநாதேஸ்வரர் (பழைய பெயர் ஆதித்யேஸ்வரர்) தேவி-கரும்பன்ன சொல் அம்மை, பிரம தீர்த்தம், புன்னைவிருட்சம், பிரளயத்திற்குப் புறம்பாயிருந்தமையால் புறம்பயம் எனப் பெயர் பெற்றது. (புறம்பு + அயம் = நீர்) திருஞானசம்பந்தர் அரவத்தால் இறந்த வணிகனை எழுப்பிய ஸ்தலம். இங்கு தட்சிணு மூர்த்திக்குப் பிரத்யேகமாகக் கோயிலுண்டு; விசேஷ மானது. இங்கு குளத்தருகிலுள்ள பிள்ளையாருக்குப் பிரளயங்காத்த பிள்ளையார் என்று திருநாமம். வன்னியும் கிணறும், லிங்கமும் வணிகப் பெண்ணுக்கு சாட்சியாகிய ஸ்தலம். மூவர் பாடல் பெற்றது. சுந்தோப சுந்தர் பூசித்த ஸ்தலம்.

புறவார் பனங்காட்டூர் :—(திரு) பனங்காட்டூர் எனவும், பனையபுரம் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜ தானி, விழுப்புறம் ஸ்டேஷனுக்கு $5\frac{1}{2}$ மைல். வித்யாதரர், அகஸ்தியர், பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-பனங்காட்டீஸ்வரர்; தேவி-திருப்புறவமின்னம்மை, அமிர்தவல்லியம்மை, ஸ்தல

விருட்சம் பனே; பத்மதீர்த்தம், அமிர்த தீர்த்தம். சித்திரை மாசம் 7-ந் தேதி சூரிய பூஜை. சிபி சக்கரவர்த்திக்கு தர்சனம் அருளிய க்ஷேத்திரம்; திருஞானசம்பர் பாடல் பெற்றது.

புனற் பூன் :—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி-பிதா மஹேஸ்வரர்-உமாதேவி.

புன்கூர் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழி தாலுகா, சென்னை ராஜதானி, வைதீஸ்வரன் கோயிலுக்கு 2 மைல் மேற்கு; நந்தனுருக்காக ஸ்வாமி நந்தியை விலகச் செய்த ஸ்தலம். ஸ்வாமி-சிவலோக நாதர், தேவி-சொக்க நாயகி அல்லது செல்வ நாயகி; இடப தீர்த்தம், கணபதி தீர்த்தம், சிவகாமி தீர்த்தம். சுந்தரமூர்த்தி நாயனுர், கலிக்காம நாயனுருக்காக மழை பெய்யவும், பிறகு நிற்கவும் பாடியருளிய ஸ்தழம். மூவர் பாடல் பெற்றது.

புனவாயில் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, அறந்தாங்கி ஸ்டேஷனுக்கு 21 மைல், கிழக்கு. வேதங்கள் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-விருத்தபுரீஸ்வரர்-பழம்பதிநாதேஸ்வரர், தேவி-கருணை நாயகியம்மை, மகிழும் புன்னையும் ஸ்தல விருட்சங்கள், கருணை நதி தீர்த்தம். கோயிலிலுள்ள லிங்கம், ஆவுடையார், நந்தி, மிகவும் பெரியவை. திருஞான சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.

புஷ்கரம் :—ராஜபுதனம் (ராஜ ஸ்தானம்) உள்ளது. அஜ்மீருக்கு 10 மைல், சிவாலயம், ஸ்வாமி-ஆத்மேஸ்வரர் அல்லது அஜோகந்தர், பழய கோவில் இடிக்கப்பட்டு புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது. (இவ்வூரில் பிரம்மாவுக்கு பிரத்யேக கோயில் உளது).

புஷ்பகிரி :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, இதற்கு மத்ய கைலாசம் என்று பெயர். இங்குள்ள சிவாலயங்கள் :-(1) சந்தான மல்லேஸ்வரர் கோயில். (2) வைத்ய நாதர் கோயில. (3) பீமேஸ்வரர் கோயில். (4) காசி விஸ்வநாதர் கோயில். (5) திரிகோடீஸ்வரர் கோயில். (6) இந்திரஸ்வரர் கோயில், (7) கமலசம்பவேஸ்வரர் கோயில், இங்கு

ஒரு ஆலயத்தில் சிவபெருமானும், கேசவப் பெருமாளும் ஒரே கோயிலில் எழுந்தருளியிருக்கின்றனர். இதற்கு புஷ்ப கிரி கோயில் என்று பெயர்.

**பூதபாண்டி** :—திருவாங்கூர் ராஜ்யம், பூதநாதர் கோயில் பழைய சிவாலயம், பல கல்வெட்டுகள் உள.

**பூதேசம்** :—வட இந்தியா, கோஹத்தியின் சமீபம், சிவாலயம். ஸ்வாமி - பஸ்மகாயர் - உமாதேவி, சுயம்பு லிங்கம்.

**பூதலூர்** :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி - ஆபத் சகாயர், தேவி-ஆனந்தவல்லி.

**பூந்துருத்தி** :—(திரு) காந்தர்வர் புஷ்பவனம் வைத்து பூசித்த ஸ்தலம். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருக்கண்டியூருக்கு $1\frac{1}{2}$ மைல் மேற்கு, தஞ்சாவூரி லிறங்கிப் போகவேண்டும். திருஞானசம்பந்தரும், அப்பரும் இங்கு சிவ காலம் தங்கியிருந்த ஸ்தலம். அப்பர் இங்கு ஒரு மடம் கட்டுவித்தார். அந்த இடம் இப்பொழுதும் காட்டப் படுகிறது. சப்த ஸ்தானங்களில் 6-வது ஸ்தலம். ஸ்வாமி- புஷ்பவன நாதேஸ்வரர், தேவி-அழகாலமர்ந்த நாயகி. காசிகங்கை தீர்த்தம்- கிழக்கு கோபுரம் 7 நிலை யுடையது. இரண்டாம் பிராகார கோபுரம் கிலமாயிருக்கிறது. கர்ப் பக்கிரஹத்தில் சில பழைய கல்வெட்டுகள் உள. இங்கு நந்தி சந்நிதிக்கு நேராக இல்லை. திருஞானசம்பந்தருக் காக சற்று விலகியதாக ஐதிகம். (சூர்யாபிஷேகத்திற்காக இவ்வாறு இருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர்.) கோயிலில் சில பல்லவ சிம்ஹத் தூண்கள் இருக்கின்றன. அப்பர் பாடல் பெற்றது.

**பூமாரு** :—வட இந்தியா, சிவாலயம். ஆறும் நூற்றாண் டில் கட்டப்பட்ட தென்பர்.

**பூர்** :—பூனு ஜில்லா, பம்பாய் ராஜதானி, குக்குடேஷ் வர் கோயில்; இங்குள்ள பரமசிவம் தாண்டவமாடும் சிலை

பார்க்கத் தக்கது. கோயில் 40 × 18 அடி விஸ்தீர்ணம், மஹா சிவராத்திரி விசேஷம்.

பூர்வி வைஜ்நாத் :—நிஜாம் ராஜ்யத்திலுள்ளது. ஜோதிர் லிங்கம் ஒன்றுள்ள சிவாலயம்.

பூரி பிரிவு :—வங்காள ராஜதானி, பாரால் கிராமம், சிவாலயம். எந்த வியாதியுடையவர்களும் இங்கு வந்து தரிசனம் செய்தால் நோய் தீரும் என்று எண்ணப்படுகிறது.

பூவணம் :—(திரு) தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். சென்னை ராஜதானி, பழைய சிவாலயம். ஸ்வாமி-பூவண நாதேஸ்வரர், தேவி-மின்னனையாளம்மை; வைகை நதி, பலா விருட்சம், பொன்னனையாள் எனும் தாசிக்காக ஸ்வாமி எழுந்தருளி ரசவாதம் செய்துகொடுத்த பொன்னைக்கொண்டு அவள் ஸ்வாமி விக்ரஹம் செய்து கொடுத்த ஸ்தலம். அத்தாசி பொன்னாலாகிய அந்த விக்ரஹத்தைக் கண்டு, "அச்சோ அழகு" என்று வலது கபோலத்தைக் கிள்ளி முத்தமிட்டபடியால் அங்கு வடுவுடைய மூர்த்திக்கு "அச்சோ அழகிய பிரான்" என்று பெயர் வந்தது. தமிழ்நாட்டு மூவேந்தரும் பூசித்த ஸ்தலம். பிரம்மோற்சவம் ஆனி மாசம். மூவர் பாடல் பெற்றது. பப்புருமஹாரிஷி பூசித்த ஸ்தலம்.

பூவனூர் :—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் ஸ்டேஷனுக்கு $2\frac{1}{2}$ மைல் தெற்கு. சுகரிஷி பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-புஷ்பவனேஸ்வரர், தேவி-சண்பகவல்லி யம்மை, கருங்குழித் தீர்த்தம், பாமணி யாற்றின் மேற்குக் கரையிலுள்ளது. சுகரிஷி புஷ்பவனம் வைத்து ஸ்வாமியை ஆராதித்தபடியால் புஷ்பவனம் என்று பெயர் பெற்றது. அப்பர் பாடல் பெற்றது. திருவிசைப்பா பெற்றது.

பூவாளூர் :—லால்குடி தாலுகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, மன்மதன் பூசித்த ஸ்தலம். பூ + வாளி + ஊர். (சமஸ்கிருதத்தில் காமர்பதி என்று பெயர்) சுவாமி-திருமூல நாதர், தேவி-குங்கும சௌந்தரி, வில்வ விருட்சம்; பல்குனி நதி.

பூந்தோட்டம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, பேரளத்திற்கு 4 மைல் சிவாலயம். புவனேஸ்வர். பூங்கோதை; அரிசில் நதி.

பூவிருந்தவல்லி :—சென்னை ராஜதானி, ஆவடி ஸ்டேஷனிலிருந்து 6 மைல் சிவாலயம். சுவாமி - வைத்யநாதர், தேவி-தையல் நாயகி யம்மன்; பிரமன், குண்டோதரன், சரஸ்வதி, தர்ம புத்திரர், தேவேந்திரன், சிவமுனிவர் பூசித்த ஸ்தலம் என்பது ஸ்தலபுராணம். சித்திரை மாசம் பிரம்மோற்சவம், ஸ்தல விருட்சம் தாளிப்பனை, குண்டோதரனுடைய தீபாக்கினியைச் சாந்தம் செய்த ஸ்தலம். தேவேந்திரனுக்கு பரமசிவம் மும்மூர்த்தி தர்சனம் கொடுத்த ஸ்தலம். சூரிய பூஜை மாசிமாசம். 1770-ஆம் பழைய கோயில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டது. சில வருடங்களுக்கு முன் பிராகாரத்தில் பூமியின் கீழ் ஒரு கள்ளறை கண்டு பிடிக்கப்பட்டது.

பூனா பிரிவு :—பம்பாய் ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் :-(1) பூனா - ரெயில் ஸ்டேஷன் பார்வதிகுன்றம். இங்கு ஒரு சிவாலயமுண்டு. சுமார் 1750-ஆம் மூன்றாவது பேஷ்வா பாலாஜி பாஜிராவ் என்பவரால் கட்டப்பட்டது. சுவாமி-தேவதேஸ்வரர், தேவி-பார்வதி, இக் கோயிலைச் சுற்றிலும் நான்கு சிறு கோயில்கள் உண்டு. அவற்றில் சூரியன், பார்வதி, கணேசர், விஷ்ணு, பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். கோயிலின் ஒரு புறம் நகார்கானா (வாத்யம் வாசிக்குமிடம்) உண்டு. 1760-ம் ஆண்டில் கோயிலிலிருந்த விக்ரஹங்கள் எல்லாம் மகம்மதியர்களுக்கஞ்சி வெளியேற்றப்பட்டன. பிறகு மறுபடியும் கொண்டு வந்து ஸ்தாபிக்கப்பட்டன. இங்குள்ள பார்வதி விக்ரஹமும், கணேசர் விக்ரஹமும் பொன்னாலானவை. (2) அமிர்தேஸ்வரர் கோயில்-இரண்டாம் பேஷ்வாவின் மனைவியால் சுமார் 1725-ஆம் கட்டப்பட்டது. (3) நாகேஸ்வரர் கோயில் - சோமவார் பேட்டையிலுள்ளது. இதுதான் பூனாவில் மிகப் பழமையான கோயில். (4) ஒங்காரேஷ்வர் கோயில் ஆற்றங்கரையில் சோமவார் பேட்டையிலுள்ளது. 1740—60 வருடங்களில் கட்டப்பட்டது. சிவலிங்கம் பூமி மட்டத்திற்கு 3 அடி கீழே இருக்கிறது. மழைக்காலத்தில்

லிங்கம் தண்ணீரில் மூழ்கியிருக்கிறது. (5) ராமேஷ்வர் கோயில் சுக்கிரவாரப் பேட்டையிலுள்ளது. சிவாஜிபண்ட் என்பவரால் கட்டப்பட்டது. சிவராத்திரி விசேஷம். (6) சோமேஸ்வரர் கோயில்-புதியது 1930-ஆம் கட்டப்பட்டது; ஆதிவார் பேட்டையிலுள்ளது. ஒருவிதமான சுயம்புலிங்கம். (7) துளசிபாக் கோயில், இங்கு மூன்று கர்ப்பக்கிரஹங்கள் உண்டு. அவற்றினுள் ஒன்றில் லிங்கப் பிரதிஷ்டையுண்டு. (8) மஹாதேவர் கோயில்-ஹோல்கார் பாலத்திற்கு அருகிலுள்ளது. இங்கு இரண்டு லிங்கங்கள் உண்டு. ஹோல்கார் வம்சத்தாரால் கட்டப்பட்டது. (9) பாஞ்சாளேஸ்வரர் கோயில், பூனா தபால் ஆபீசுக்கு 2 மைல், மலையில் வெட்டப்பட்ட கோயில். இங்குள்ள நந்தி மண்டபம் வட்டவடிவமானது. (10) ஷிவ்ஜி கோயில், குன்றின்கீழ் குடையப்பட்ட கோயில்; சிவலிங்கம் பிரதிஷ்டை திப்பு சுல்தான் காலத்தில் ஏற்படுத்தப்பட்டதென்பர். (11) சம்புதேவர் மலை, பூனா ஜில்லா, சிவாலயம் சுவாமி-சம்புதேவர். (12) புரந்தர் பூனா ஜில்லா, மஹாதேவர் சிவாலயம்.

பூனித்துறை :—திருப்பூநித்துறை யென வழங்கப்படுகிறது. கொச்சி ராஜ்யம், மேற்கு இந்தியா, சிவாலயம். சுவாமி-ஸ்ரீ பூர்ணத்திரயீசர்.

பூஜ் :—மைசூர் ராஜ்யம், பார்வதி குன்றில் சிவாலயம். பரமசிவத்தின் விக்ரஹம் $1\frac{1}{4}$ அடி உயரம், மடியில் பார்வதியும், கணேசரும் விளங்குகின்றனர்.

பெங்களூர் :—மைசூர் ராஜ்யம், ரெயில் ஸ்டேஷன். இங்குள்ள சிவாலயங்கள் :-(1) கோட்டைக்கு 1 மைல் மேற்கில் கேவி கங்காதரீஸ்வரர்-கோயில் சிறிய குன்றில் குடையப்பட்டிருக்கிறது, கெம்பகௌடரால்-சுமார் 1638-வருடம். சுவாமி கங்காதரீஸ்வரர்; சிவசின்னங்களாகிய திரிசூலம், டமருகம், 22 அடி உயரமுள்ள இரண்டு கற்பாறைகளில் வெட்டப்பட்டிருக்கின்றன. கர்ப்பக்கிரஹத்தைப் பிரதட்சிணம்வர ஒருவழி குன்றில்வெட்டப்பட்டிருக்கிறது; இருட்டாயிருக்கும்; வெளிச்சங்கொண்டு பார்த்தால் இங்குள்ள மாடங்களில் சில சிலை உருவங்கள்

அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கர்ப்பக்கிரஹம் 12 அடி சதுரம் 8 அடி உயரம். பிராகாரத்தின் ஒரு புறம் ஒரு சுரங்கம் போகிறது 204 அடி வரையில்; அதற்கப்புறம் ஓர் நீர் நிலை யிருக்கிறது. (2) மல்லேஸ்வரர் கோயில், சுவாமி பெயர் காட்டுமல்லேஸ்வரர். மல்லிகார்ஜுனர் கோயில் கெம்பகவுடரால் கட்டப்பட்டது. (3) ராமேஷ்வரர் கோயில்; கோயில் வடக்கு பார்த்தது. தேவி-பார்வதி; புதிய கட்டிடம். கோயிலில் ஸ்ரீ ராமர் சந்நிதியுண்டு. அதற்கும் பூஜை நடக்கிறது. இக் கோயில் பஞ்சாயதனக் கோயில் என்று அழைக்கப்படுகிறது. அதாவது 5 சந்நிதிகளையுடையது என்று பொருள்படும்; பரமசிவம், அம்பிகை, விஷ்ணு, கணேசர், அனுமார் அல்லது சூரியன், இவர்களுடைய சந்நிதிகளையுடையதாம். மைசூர் ராஜ்யத்தில் இத்தகைய கோயில்கள் பல உள. (3) அல்சூர் சிவாலயம். இது கண்டோன்மென்டில் இருக்கிறது. (4) சோமேஸ்வரர் கோயில், (5) காசிவிஸ்வநாதர் கோயில், கண்டோன்மென்டில காந்தி நகருக்கருகிலுள்ளது. சுவாமி-விஸ்வநாதர், தேவி-அன்னபூரணி, பிரம்மோற்சவம் ஆனி மாசம். விஸ்வேசுவரர் கோயில் பெங்களூர் கிழக்கிலுள்ளது - சிறிய கோயில் புதிய கட்டடம். கெம்பகவுடரால் கட்டப்பட்டது. இவ்வூரில் 10-க்கு மேற்பட்ட சத்திரங்கள் உண்டு.

**பெண்ணகர் :**—சென்னை ராஜதானி, சிவாலயம். கஜப்பிருஷ்ட ஆகிருதி. இங்கு இரண்டு சிவாலயங்களுண்டு, **பிரம்மேஸ்வரர்** கோயில் (பிரம்மா பூசித்த ஸ்தலம்) **கைலாசநாதர்** கோயில்.

**பெண்ணுகடம் :**—(திரு) இதற்குத் திருக்கடந்தை நகர் எனப் பெயர் உண்டு. சிவாலயத்திற்கு தூங்கானை மாடம் என்று பெயர், சென்னை ராஜதானி; ஆரத்துறைக்கு 4 மைல் வடக்கு. விருத்தாசலத்திற்கு 11 மைல் தென் மேற்கு. கலிக்காம நாயனர் அவதரித்த ஸ்தலம். சுவாமி-சுடர்க்கொழுந்தீசர், தேவி-கடந்தை நாயகி, பெண்ணை நதி தீர்த்தம்; சுவாமிக்கு பிரளயகாலேஸ்வரர் என்றும் பெயர். நந்தி சுவாமிக்கு முதுகைக் காட்டிய வண்ணம் இருக்கின்றனர்; பிரளயத்தைத் தடுப்பதற்காக இப்படி இருக்கும்

படி கட்டளையிடப்பட்டனர் என்பது ஐதிகம், தேவகன்னியர், காமதேனு, வெள்ளையானை, இந்திரன் பூசித்த ஸ்தலம். பெண்=தேவ கன்னிகை. (+ஆ=பசு:+கடம்—யானைக் கூட்டம்) கோயில் விமானம் கஜப்பிருஷ்ட ஆகிருதி. கஜ விமானம்-யானையைப் போன்றது. திருநாவுக்கரசு விடைக்குறி, சூலக்குறி வேண்டிப் பெற்ற க்ஷேத்திரம்.

பெத்த கல்லேபர்லே :—மசூலிப்பட்டணம் தாலுகா, கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம் ஸ்வாமி-நாகேஷ்வரர்.

பெத்தகாகனி :—குண்டூர் தாலுகா, மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி; வீரபத்திரர் கோயில்.

பெத்த செருகூரு :—பாபட்லா தாலுகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, அகஸ்தீஸ்வரர் கோயில்.

பெத்ததும்பலம் :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, வீரபத்திர ஸ்வாமி கோயில்; சாளுக்கிய சில்பம்.

பெத்தபலகலூர் :—குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-சர்வேஸ்வரர்.

பெத்தபடலலே :—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ராமலிங்கேஸ்வரர் கோயில்.

பெத்தமுடியம் .—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; முக்கண்டீஸ்வரர் கோயில்.

பெதாரு :—கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி, மசூலிப் பட்டணத்திற்கு 4 மைல் வடக்கு. அகஸ்தீஸ்வர ஸ்வாமி கோயில்.

பெரிய குளம் :—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சோழ கட்டடம், கல்வெட்டுகள் உள. ஸ்வாமி-சிவமரகதேசர், பார்வதி தேவி.

**பெரிய கோட்டூர்** :—பழனி தாலுகா, மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி; இங்கு இரண்டு பழைய சிவாலயங்கள் உள. இரண்டிலும் கல்வெட்டுகள் உள.

**பெரிய பட்டணம்** :—இதற்குப் பழைய பெயர் சிங்கபட்டணம், மைசூர் ராஜ்யம் ஹல்சூருக்கு 13 மைல், சிவாலயம். ஸ்வாமி-மல்லிகார்ஜுனர். கரிகாலச் சோழனல் கட்டப்பட்டதென்பர்.

**பெரியபாளையம்** :—சென்னை ராஜதானி, சென்னபட்டணத்திற்கு வடக்கிலுள்ளது, சிவாலயம். ஸ்வாமி-ஹரிமுக்தேஸ்வரர், தேவி-அன்னபூரணி, வன்மீக தீர்த்தம், வான்மீக முனியும், பிரகு முனியும் பூசித்த ஸ்தலம். இதன் அருகில் கோட்டை குபபம் எனும் கிராமத்தில் ஒரு சிவாலயமுளது; ஸ்வாமி-புண்யகோடீஸ்வரர்.

**பெருங்கரணை** :—ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-மூன்றுலோசன முடையார்.

**பெருங்களூர்** :—புதுக்கோட்டை சமஸ்தானம் புதுக்கோட்டைக்கு 11 மைல், சிவாலயம், குலோத்துங்க சோழனல் கட்டப்பட்டதென்பர். ஸ்வாமி - வம்சோத்தாரகர், மங்களாம்பாள்.

**பெருங் கோட்டுக்கரை** :—கொச்சி ராஜ்யம், திருச்சூருக்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி - சோமசேகரர்.

**பெருஞ்சேரி** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, இதற்குத் தாருகாவனம் என்றும் பெயர். சிவாலயம், ஸ்வாமி-வாகீசர் அல்லது வாக்குக் காட்டு வள்ளல், பிரஹஸ்பதி பூசித்த க்ஷேத்திரம்.

**பெருந்தலையூர்** :—சத்யமங்கலம் தாலுகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம். இதில் சுந்தர பாண்டிய தேவர் காலத்து கல்வெட்டொன்றுளது.

பெருந்துறை :—புதுக்கோட்டை சமஸ்தானம், திருமெய்யம் தாலுகா, புதுக்கோட்டைக்கு 14 மைல். சிவாலயம்.

பெருந்துறை :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம்.

பெருந்துறை :—(திரு) மதுரை ஜில்லா, பராசர், பிருகு முதலியோர் பூசித்த ஸ்தலம். மாணிக்கவாசகருக்கு குருமுகமாக உபதேசித்த ஸ்தலம். ஸ்வாமி-ஆத்மநாதர், தேவி-உமாதேவி, குருந்தமரம், சிவகங்கை, மாணிக்கவாசகர் பாடல் பெரிதும் பெற்ற க்ஷேத்திரம்.

பெரும்புலியூர் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருவையாறுக்கு 2 மைல் வடமேற்கிலுள்ளது. வியாக்ரபாதர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-வியாக்ரபுரீஸ்வரர், தேவி-சௌந்தர நாயகி, காவிரி நதி தீர்த்தம், திருஞானசம்பர் பாடல் பெற்றது.

பெரும்பேர் :—மதுராந்தகம் தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி - தான் தோணீஸ்வரர். கல்வெட்டுகளில் ஊர் பெயர் பெரும்பேரூர் என்றும், ஸ்வாமி பெயர் ஸ்ரீ கரணீஸ்வர முடையார் என்றும் இருக்கிறது.

பெருமகளூர் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பட்டுக்கோட்டைக்கு 20 மைல், சிவாலயம். இங்குள்ள லிங்கம் முற்றிலும் ஒரே கல்லா லமைந்தது. தஞ்சை அரசர் ஒருவர் இதை ஆலிங்கனம் செய்து கொண்டபடியால் அவரது ஆபரணங்களின் குறிகள் லிங்கத்தில் அழுந்தியிருப்பதாக ஐதிகம்.

பெருமல்பாட் :—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி; நாகேஷ்வர ஸ்வாமி கோயில்.

பெருமுக்கல் :—திண்டிவனம் தாலுகா, சென்னை ராஜதானி, செஞ்சிக் கோட்டைக்கு அருகிலுள்ளது; சிவாலயம். ஸ்வாமி-முக்தேஸ்வரர், தேவி-காமாட்சி யம்மன். கோயில்

சிறு மலையிலுள்ளது. வன்மீக தீர்த்தம், வால்மீகி ஆசிரமம் அருகிலுள்ளது என்பர். கோயில் யுத்த காலத்தில தாக்கப்பட்டு கொஞ்சம் கிலமாயிருக்கிறது.

**பெருவாரம்** :—திருவாங்கூர் ராஜ்யம்-சிவாலயம்,

**பெருவேளூர்** :—(திரு) **கரட்டூர் ஐயன் பேட்டை** என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, கரவீரத்திற்கு 2 மைல், வடமேற்கு. திருப்பாசூரிலிருந்து 8½ மைல், கௌதமர், சக்தி பூசித்த ஸ்தலம், ஸ்வாமி-பிரியா ஈஸ்வரர், தேவி-மின்னனையாளம்மை, மூஷிக தீர்த்தம், திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

**பெல்காம் ஜில்லா** :—பம்பாய் ராஜதானி, கோரக் பட்டினத்திற்கு 3 மைல் தூரம், **மஹா லிங்கேஸ்வரர் கோயில்**, வடக்கு பார்த்தது. கோரக் நீர் வீழ்ச்சி; இங்கு இன்னும் 2 சிறு சிவாலயங்கள் அருகில் இருக்கின்றன. பெல்காம் கோட்டையில் ஒரு சிவாலயமுண்டு; இது பாழுடைந்திருக்கிறது. மூக்கியவாயிலில் தாண்டவமாடும் ஈஸ்வரன் பக்கலில் பிரம்மாவும், மஹா விஷ்ணுவும் இருக்கின்றனர்; அழகிய சில்பம்.

**பௌகாமி** :—பெலகாமி என்றும் அழைக்கப்படுகிறது. மைசூர் ராஜ்யம், ஷீமோகா ஜில்லா, ஷிகார் பூர் தாலுகா. இங்கு ஐந்து சிவாலயங்கள் உள. (1) கேதாரீஸ்வரர் கோயில், மூன்று சந்நிதிகளையுடையது. சாளுக்கிய கட்டடம்,(பெலகாமி கேதாரீஸ்வரர் கோயில்)மண்டபத்தின் கூரை மகம்மதியர்களால் அழிக்கப்பட்டது. ஹொய்சல பிருது இங்குளது. (சலன் சார்தூலத்தைக் கொல்வது) இக் கோயில் ஜக்கணசாரியால் கட்டப்பட்டதாம். (2) பஞ்சலிங்கேஸ்வரர் கோயில், (3) கைடபேஸ்வரர் கோயில், (4) சோமேஸ்வரர் கோயில், (5) திரிபுராந்தகேஸ்வரர் கோயில். **பஞ்சலிங்கேஸ்வரர் கோயில்** பஞ்சபாண்டவர்களால் கட்டபட்டதென்பது ஐதிகம்; மிகவும் கிலமாயிருக்கிறது. சாளுக்கிய கட்டடம். தற்காலம் இவை பாழாயிருக்கின்றன. ஆயினும் சில அழகிய சில்பங்களுடைத்தாயிருக்கின்றன.

பேன்குடி :—திருப் பென்குடி என்று அழைக்கப்படு கிறது. சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-சொக் கேஸ்வரர், தேவி-சிவகாமி, ஹனும தீர்த்தம், சிபிச்சக்ர வர்த்தி பூசித்த ஸ்தலம்.

பேனுகோண்டா :—பெனுகொண்டா தாலுகா, சென்னை ராஜதானி; அநந்தபூர் ஜில்லா, பெங்களூர் குண்டக்கல் ரெயில் ஸ்டேஷன் - சிவாலயம். அவிமுக்தேஸ்வரர் கோயில், விஜயநகர சில்பமமைந்தது.

பேஜ்வாடா :—கிருஷ்ண ஜில்லா, சென்னை ராஜதானி, ஈஸ்ட் கோஸ்ட் ரெயில் ஸ்டேஷன். ஊரின் பழைய பெயர் கல்வெட்டுகளில் ராஜேந்திர சோழபுரம் என்றிருக் கிறது. கிருஷ்ண நதியின் கரையிலுள்ளது-சிவாலயம். சுவாமி-மல்லேஸ்வரர், அல்லது ஜெயசேனர். (இக் கோயி லைச் சார்ந்த கனக துர்க்கையின் கோயில் மிகவும் பிரபல மானது) அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். இங்குள்ள இந்திர தீபம் எனும் மலையில் அர்ஜுனன் தவம் புரிந்து சுவாமியிட மிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றதாக ஐதிகம். சுவாமி அர்ஜுனனுடன் யுத்தம் புரிந்தமையால் மல்லேஸ்வரர் எனப் பெயர் வந்தது. கலியுகத்திற்கு முன் ஸ்வாமிக்கு ஜெயசேனர் என்று பெயர் இருந்ததாம். இவ்வூரில் இன்னும் இரண்டு சிவாலயங்கள் உள. (1) மல்லிகார் ஜுனர் கோயில், (2) நாகேஷ்வரர் கோயில்.

பேரூல் ஜில்லா :—மத்திய மாகாணம், (1) போபாலி கிராமம், சிவாலயம். குகைக் கோயில், சுவாமி மஹா தேவர், தேவி-பார்வதி. (2) சல்பார்டி கிராமம், சிவாலயம் குகைக்கோயில்; சுவாமி-மஹா தேவர்.

பேரூர் :—மைசூர் ராஜயம், தேவாங்கரே தாலுகா, சிவாலயம். சுவாமி-கள்ளேஸ்வரர்.

பேணு பெருந்துறை :—திருப்பந்துறை என்றும் வழங் கப்படுகிறது. கும்பகோணத்திற்கு 7 மைல். தென் கிழக்கு. தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பிரமன் பூசித்த க்ஷேத்திரம். சுப்பிரமணியருக்கு சிவ பிரான் அருள்கொடுதத ஸ்தலம் என்பது ஸ்தல புராணம்.

சுவாமி-சிவாநந்தேஸ்வரர், தேவி-மலையரசியம்மை. சின்மயாநந்த தீர்த்தம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**பேபூர்** :—கள்ளிக்கோட்டை தாலுகா, மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**பேரளம்** :—மேற்படி தாலுகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம். சுவாமி-திரு முயற்சி நாதர், தேவி-சௌந்தர நாயகி, வருணன் பூசித்த ஸ்தலம்-வைப்புஸ்தலம். இங்கு திருமயச்சேரலிங்கர் கோயில் என்று ஒரு சிவாலயமுண்டு. சுவாமி-பரமேஸ்வரர், தேவி - மங்கள நாயகி, சரஸ்வதி தீர்த்தம். பிரம்மாவும், சரஸ்வதியும் பூசித்த க்ஷேத்திரம்.

**பேரூர்** :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஸ்டேஷனிலிருந்து 3 மைல், மேற்கு. இதற்கு பிப்பிலாரண்யம், தட்சிண கைலாசம், மேலைச் சிதம்பரம் என்றும் பெயர்கள் உண்டு. பரமசிவம், சுந்தரமூர்த்தியின் பொருட்டு, தாம் பறையனாகவும், உமா தேவி பறைச்சியாகவும் வேடம் பூண்டருளி, வயலில் நாற்று நட்டு திருவிளையாடல் புரிந்த க்ஷேத்திரம். பிரம்மாவும், விஷ்ணுவும் இங்கு பரமசிவத்தை கோமுனி, பட்டிமுனி எனும் உருவங்களில் பூசித்ததாக ஸ்தலபுராணம் கூறுகிறது. அன்றியும் காலவர், அதிமூர்க்கம்மன், காமதேனு பூசித்த ஸ்தலம். விஷ்ணு முதலியோருக்கு சபாநாதர் ஆநந்தத் தாண்டவமாடிய ஸ்தலம் சுயம்புலிங்கம்;சுவாமி-பட்டீசர், கோஷ்டீஸ்வரர், தேவி-பச்சை நாயகி, மரகத வல்லி, பிரம தீர்த்தம், காஞ்சி நதி; காஞ்சி நதி யென்பது நொய்யலாறு என்று வழங்கப்படுகிறது. நந்தி நேரா யிராது ஒரு புறமாயிருக்கிறது. இந்த ஸ்தலத்தில் பிறவாப் புளி இறவாப்பனை, விசேஷம். சுந்தரருக்காக சபாநாதர் அரசமரத்தடியில் நிர்த்தனம் செய்ததாக ஐதிகம். பிறவாப்புளி பெரிய கோயிலில் பெரிய கோபுரத்திற் கருகிலுள்ளது. கோயிலில் பெரும்பாகமும், கோயிலுக்கு அருகிலுள்ள குளமும் மதுரை திருமலை நாயகருடைய சகோதரர் அளகாத்திரி நாயகரால் கட்டப்பட்டது. கோயிலின் பழைய பாகம் 11-ஆம் நூற்றாண்டில் ஆண்ட ராஜேந்திர தேவன் எனும் சோழ அரசனால் கட்டப்பட்ட

தாம். சபாநாயகர் மண்டபம் அழகிய சில்பமமைந்தது. இங்கு கோமுனி, பட்டிமுனி சிலை உருவங்கள் உள. அன்றியும் இங்குள்ள கஜசம்ஹார மூர்த்தி, பிட்சாடனர், ஊர்த்தவத்தாண்டவேசர், காளி, வீரபத்திரர், அகோர வீரபத்திரர், கணேசர், சுப்பிரமணியர் சிலைகள் அழகியவை. மேலும் யோகிகள் யோகாப்பியாசம் முடிந்ததும், பழைய ரூபம் பெறுவதற்கு முன் இருக்க வேண்டிய முத்திரை செதுக்கப்பட்டிருக்கிறது. கோபுரம் 5 நிலைகளுடையது, சிறியது; பிற்காலத்தில் கட்டப்பட்டது. பீடம் மாத்திரம் கருங்கல்லாலாயது. சில வருடங்களுக்கு முன் உள் பிராகாரம் புதுப்பிக்கப்பட்டது. இரண்டாம் பிராகாரத்தில் சிங்கவாபி எனும் தீர்த்தம் உண்டு. இங்குள்ள காளி கோயிலிலிருந்து பார்த்தால் சபாநாயகரது மேல் தூக்கிய பாதம் காணப்படும். இதை திவ்ய தரிசனம் என்பர். கோயிலுக்குள் ஒரு விஷ்ணு ஆலயமுண்டு; ஸ்மார்தத பூஜை; இதற்கு உற்சவமுமுண்டு. இவ்விடம் 13-ஆம் நூற்றாண்டில் ஆண்ட இரண்டாம் விக்கிரம சோழனுடைய கலவெட்டுகள் உள. மூலஸ்தானம் பழைய கட்டடமாம். சோழ சில்பம்-சபாநாயகர் மண்டபம் 1750-ஆம் கட்டப்பட்டதாக பெர்கூசன் துரை எண்ணுகிறார். இதிலுள்ள ஒரு ஸ்தம்பத்தில் ஒரு சிப்பாய் தன் துப்பாக்கிக்கு மருந்து போடுவதுபோல் செதுக்கப்பட்டிருக்கிறது. பிரம்மோற்சவம் பங்குனி மாசம். இதில் பத்தாம் நாள் நடக்கும் நடராஜப் பெருமான் உற்சவம் பிரபலம். நடராஜரை எழுந்தருளச் செய்யும் பொழுது தண்டுகள் முறிவது அதிசயச் செய்கை. நாற்று நடவு உற்சவம் ஆனிமாசம். கோயிலின் அருகாமையில் வசிஷ்டர் யாகஞ் செய்த இடம் காட்டப்படுகிறது. இங்குள்ள மணலானது விபூதியாகப் பாவிக்கப்படுகிறது. கோயிலின் துவஜஸ்தம்பத்தில் ஒரு புறம் சுந்தரமூர்த்தி உருவம் இருக்கிறது. நடராஜ சபைக்குக் கிழக்குப்புறம் கருங்கல்லுக்குப் பதிலாக மரத்தாலாகிய சில்பம் இருக்கிறது. பூர்வகாலத்தில் இது கருங்கல்லாலாயதாம்; அதில் ஒரு தேரை இருந்ததாகவும் அதை ஆவுடையார் கோயில் கல் தச்சனாகிய ராமலிங்கம் என்பவரின் புதல்வன் கண்டுபிடித்து எடுத்துவிட்டதாகவும், பிறகு அதை மரத்தால் செய்து வைத்ததாகவும் சொல்லப்

படுகிறது. சுயம்பு லிங்கத்தில் காமதேனுவின் கன்றுக் குட்டி இடித்து முட்டியதால் படிந்த குளம்பின துவாரமும் காலின் வடுவும் இருக்கிறது. ஒரே கல்லில் வெட்டப் பட்ட சங்கிலியும், உருளுகிற தாமரை முதலிய விசித்திர சில்பங்களிருக்கின்றன. இங்கு காலேஸ்வரர் கோயில் என்று ஒரு சிறு ஆலயமுண்டு. காலவமுனி பூசித்த ஸ்தலம், புதிய கோயில். வட கைலாசம் எனும் கோயிலு முண்டு. இங்குள்ள கிணற்றில் ஸ்நானம் செய்து பரம சிவத்தை வழிபட்ட முகுந்த சக்ரவாத்தி மனித முகம் பெற்றதாக ஐதிகம். இதற்கருகில் ஸ்தல புராணத்தில் குறித்த இறவாப்பனை யுளது.

**பேரெயில் :—**(திரு) இது ஒகை, ஓகைப் பேரெயில், வங்கராப் பேரையூர், ஓகைப்பேரையூா எனவும் வழங்கப் படுகிறது. தென் இந்தியா, நாட்டியத்தான்குடி ஸ்டேஷ னுக்கு 6 மைல், தென் மேற்கு. வருணன், அக்னி பூசித்த க்ஷேத்திரம். சுவாமி-கஜகதீஸ்வரர், காலபுவனேஸ் வரர், தேவி-ஜெகந்நாயகி, அல்லது பெண்ணமிர்த நாயகி, மேகலாம்பாள்; அக்னி தீர்த்தம், வருண தீர்த்தம். கோயில் சிறியது. சபாபதி விக்ரஹம் மிகவும் அழகியது. அப்பர் பாடல் பெற்றது.

**பேரையூர் :—**திருமெய்யம் தாலுக்கா, புதுக்கோட்டை சமஸ்தானம் சிவாலயம். ஆதிசேஷன் பூசித்தது. சுயம்பு லிங்கம்-பழைய கோயில். இதற்கருகிலுள்ள ஒரு மலையில் ஒரு சிவாலயம்-குகைக்கோயில் உண்டு. சுவாமி-தாளவ னேஸ்வரர், தேவி-பிரகதாம்பாள், பனை மரம். இந்திரன் பூசித்த ஸ்தலம்.

**பேலூர் :—**பேலூர் தாலுகா, ஹசான் ஜில்லா, மைசூர் ராஜ்யம், இங்குள்ள ஆலயம் முற்றிலும் விஷ்ணு ஆலய மாக இருந்த போதிலும், ஆதியில் இங்கு சிவாலய மிருந்த தாக எண்ண இடமுண்டு. தற்காலம் சென்ன கேசவப் பெருமாள் சந்நிதிக்கருகில் பழைய சாளுக்கிய கோயில் ஒன்றுளது. அதில் சிவலிங்கம் ஆதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அதை வைணவர்கள் பிறகு அகற்றிவிட்டதாகச் சொல்லப்படு

கிறது. கோயில் பீடம் நட்சத்திர வடிவமானது. தற்காலம் பெரிய கோயிலுக்குக் கிழக்கில் நஞ்சுண்டேஸ்வரர் கோயில் எனும் ஒரு புதிய மிகச்சிறிய சிவாலயமுளது. மேற்கில் சங்கரேஸ்வரர் கோயில் என்னும் ஒரு சிவாலயமுளது. ஹொய்சால சில்பம்-இங்கு அம்மன் சந்நிதியுண்டு.

பேளூர் :—சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, வசிஷ்ட நதிக்கரையிலுள்ளது. சிவாலயம்-ஸ்தல விருட்சமாகிய இலுப்பை மரத்தில் வித்துக்கள் இல்லை என்று கூறப்படுகிறது.

பைஞ்ஞீலி .—(திரு) திருப்பங்கிலி எனவும் வழங்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி. திருச்சிராப்பள்ளிக்கு 11 மைல் வடகிழக்கு. சிவாலயம், சோழ கட்டடம். சுவாமி-நீலகண்டேஸ்வரர், மாற்றறிவாதர், தேவி-விசாலாட்சி, பாலசௌந்தரி; இங்கு இரண்டு அம்மன் கோயில்கள் உண்டு. ஒன்று கிழக்கு பார்த்தது மற்றொன்று தெற்கு பார்த்தது. இக் கோயிலில் யமதர்மராஜனுக்கு பூமியின் கீழ்மட்டத்தில் ஓர் ஆலயமுண்டு. நவக்கிரஹங்களுக்குப் பதிலாக 9 விளக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம் பிராகாரத்தில் வாழை மரங்கள் உள; இவை சபிக்கப்பட்ட தேவ கன்னிகைகள் என்பது ஐதிகம். இம் மரங்கள் தண்ணீர் வார்க்கப்படாமல் வளர்கின்றன என்று சொல்லப்படுகிறது. பசியினால் வருந்திய அப்பருக்கு சுவாமி கட்டமுது கொடுத்து அருளிய தோட்டமும், தடாகமும் இதற்கு ½ மைல் தூரத்தில் இருக்கிறது. சுவாமிக்கு நிவேதனம் செய்த வாழைப்பழத்தைத் தின்னலாகாது, எறிந்துவிட வேண்டும் என்பது ஐதிகம். கோயிலின் சிலபாகம் பாண்டிய அரசர்களால் கட்டப்பட்டது. மூவர் பாடல் பெற்ற க்ஷேத்திரம். சிவபெருமான் யமனை எழுப்பிய ஸ்தலம்.

பைரங் :—வட இந்தியா, சிவாலயம். சுவாமி-பைரங்நாத், சுயம்புலிங்கம்.

பொப்பூடி :—நரசாரங் பெட் தாலுகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**போர்ராகுகை** :—விசாகப் பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சிவராத்திரி விசேஷம்.

**பொலன்னருவா** :—லங்கைத் தீவின் மத்தியில் உள்ளது. பழைய பெயர் புலஸ்திபுரம் அல்லது கலிங்கபுரம், சிங்களப் பெயர் தோபாவீவா-சிவாலயம்,சிவாவயம் சுமார் 1190-ஷு நிஸ்ஸங்க மல்லர் என்பவரால் கட்டப்பட்டதென மதிக்கப் படுகிறது. முற்றிலும் கருங்கல் கட்டடம். விமானத்தின் உச்சியும், மண்டபமும் இடிந்து போயிருக்கிறது. கோயிலில் தற்காலம் பூஜையில்லை. இது தற்காலம் தளத மாளிகாவா என்று தவறுக அழைக்கப்படுகிறது. இங்கு, தற்காலம் விஷ்ணு தேவாலயம் என்று அழைக்கப்படும் கோயிலும், பூர்வத்தில் சிவாலயமாயிருந்த தென்பதற்குச் சந்தேக மில்லை; கர்ப்பக்கிரஹத்தின் பேரிலும், அடியிலும், நந்தி கள் இருக்கின்றன. இங்குள்ள கல்வெட்டுகள் ஒன்றில் சுவாமி பெயர், தேவிஈஸ்வரமுடையார் என்றிருக்கிறது. கோயில் திராவிட சில்பம்.

**போருமாமிலா** :—சென்னை ராஜதானி கடப்பை ஜில்லா, சிவாலயம். சுவாமி-திரிநேத்திரர்.

**போதன்** :—பம்பரய் ராஜதானி, சூரத் ஜில்லா, மாண் டலி உட்பிரிவு. சிவாலயம், சுவாமி-கௌதமேஷ்வர் மஹாதேவ். இவ்விடம் தர்மசாலை யுண்டு.

**போர்பந்தர்** :—வட இந்தியா, ரெயில் ஸ்டேஷன். சிவாலயம். ஸ்வாமியின் பெயர் மஹாதேவ் தாகூர்ஜி.

**போரூர்** :—திருப்போரூர் என்று சாதாரணமாய் வழங் கப்படுகிறது. தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜ தானி, (பிரபல சுப்பிரமணிய ஸ்தலம்.) இங்கு சிறு குன்றின்மீது சிவாலயம் உளது. சுவாமி-கைலாச நாதர், தேவி-பாலாம்பிகை, பிரணவாமிர்த்த தீர்த்தம். விஷ்ணுவும், மஹா லட்சுமியும் பூசித்த ஸ்தலம் என்பது ஸ்தல புராணம். இங்கு சுப்பிரமணியர் கோயிலுக்குள் ஒரு சிறு சிவாலயம் உண்டு. சுவாமி-காசி விஸ்வநாதர், தேவி-விசாலாட்சி. சுப் பிரமணியர் கோயிலிருக்குமிடத்தில் 300 வருடங்களுக்கு முன்பு சிவாலயம் இருந்ததாக சிலர் எண்ணுகின்றனர்.

இக்கோயிலுக்குள் வன்மீகேசுரர் ஆலயம் உளது. சுவாமி-வன்மீகேசர், தேவி-புண்யகாரிணி- மேற்கு நோக்கிய சந்நிதி. சூரபத்மனைக் கொன்ற பாபம் தீர சுப்பிரமணியர் வான்மீகேசரைப் பூசித்ததாக ஐதிகம்.

போலவரம் :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். சிவராத்திரி விசேஷம்.

போஜ்பூர் :—போபால் ராஜ்யம், வட இந்தியா, சிவாலயம்; 66 அடி சதுரம், சிவலிங்கம் 7½ அடி உயரம், 17 அடி 8 அங்குலம் சுற்றளவு. சுமார் 12 அல்லது 13-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்பர்.

பொன் அமராவதி :—திரு மெய்யம் தாலுகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சிவாலயம். சோழ அரசனாகிய ராஜராஜன் காலத்தில் கட்டப்பட்டது. பழைய சோழ கட்டடம்.

பொன்னேரி:—ஈஸ்ட்கோஸ்ட் ரெயில் ஸ்டேஷன். சென்னபட்டணத்திலிருந்து 23 மைல்; சென்னை ராஜதானி, சிவாலயம். சுவாமி பெயர்-அகத்தீஸ்வரர், தேவி-ஆநந்த யீஸ்வரி; கோயிலுக்கு எதிரில் சிறு குளமுண்டு. கோயில் ஸ்டேஷனுக் கருகிலுள்ளது. சித்ராபவுர்ணமி யன்று இக் கோயிலின் சிவபெருமான் விருஷபவாஹனத்திலும், அருகிலுள்ள விஷ்ணு ஆலயத்தின் மஹாவிஷ்ணு கருடவாஹனத்திலும் சந்திக்கும் உற்சவம் விசேஷம்; இதற்கு சந்திப்பு உற்சவம் என்று பெயர். இதற்கு 5 மைல் தூரத்தில் திருப்புன்னவாயல் என்று ஒரு சிவ க்ஷேத்திரமுண்டு. பொன்னேரிக்கு 2 பர்லாங் தூரம். சின்ன காவணம் எனும் கிராமத்தில் ஒரு சிவாலயமுண்டு, பக்கவில் பெரிய காவணம் எனும் ஊரில் ஒரு கோயிலுண்டு. சுவாமி பெயர்-எழுமுனீஸ்வரர்.

பொற் பந்தல் :—காஞ்சீபுரம் தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம், சுவாமி-அக்னீஸ்வரர், தேவி-இனிமொழியம்மை, தெற்கு நோக்கிய வாசல். பழைய காலத்தில் பொன்னாலாய பந்தர் கண்டு

எடுக்கப்பட்டதாகவும் அதனுல் பொன் பந்தல் எனப் பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவர்.

**பொள்ளாச்சி** :—அல்லது பொல்லாச்சி, சென்னை ராஜ தானி, கோயமுத்தூர் ஜில்லா, சிவாலயம்.

**மகாதாறு** :—பம்பாய் ராஜதானி; சால்செட்டுக்கருகில் உள்ளது, குகைக் கோயில்-சுவாமி-மண்டபேஸ்வர்.

**மருடேஸ்வரம்** :—வட இந்தியா, சிவாலயம், சுயம்பு லிங்கம். சுவாமி-ஜயந்தீஸ்வரர்.

**மங்கலக் குடி** :—(திரு) சென்னை ராஜதானி, ஆடுதுறை ஸ்டேஷனுக்கு 3 மைல் வடக்கு. ஏயர்கோன் கலிக்காம நாயனுர் மூத்தியடைந்த ஸ்தலம். கோயில் விக்ரம சோழ னுல் கட்டப்பட்டது. மஹாகாளி, சூரியன், விஷ்ணு, பிரம்மா, அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். சுவாமி-பிராணவர தேஸ்வரர், தேவி-மங்கல நாயகி, கொங்கிலவ விருட்சம். மங்கள தீர்த்தம், காவிரி நதி; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. அரசன் பொருளைத் திருப்பணி செய்து செல விட்டு, அஞ்சி உயிர் துறந்த மனைவி, இங்கு மங்களநாயகி யருளால் உயிர் பெற்று வணங்கிய ஸ்தலம். இங்கு குலோத்துங்க சோளீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலில் மூதல் பராந்தகன் (905-947) காலத்திய கல்வெட்டுகள் உள.

**மங்களூர்** :—மேற்கு இந்தியா, ரெயில் ஸ்டேஷன், சென்னை ராஜதானி, தென் கன்னட ஜில்லா, சிலாலயம் - சுவாமி-பாண்டிய ஈஸ்வரர் அல்லது மஞ்சுநாதர், சிவராத்ரி விசேஷம். இங்கு முசாபரி பங்களா உண்டு.

**மங்கை புரம்** :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவால்யம்.

**மதூலி பட்டணம்** :—சென்னை ராஜதானி, கஞ்சம் ஜில்லா, ராமலிங்கேஸ்வரர் கோயில்.

**மஞ்சேரி** :—சென்னை ராஜதானி, சிவாலயம். சுவாமி - அகஸ்தீஸ்வரர்; தேவி - ஆநந்தவல்லி, அகஸ்தியரும் 5 கந்தர்வர்களும் பூசித்த ஸ்தலம்.

மஞ்சேஷ்வர் :—சென்னை ராஜதானி, தென் கன்னட ஜில்லா, சிவாலயம். சுவாமி-மஞ்சேஷ்வர்.

மடவார் விளாகம் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, ஸ்ரீ வில்லிபுத்தூருக்கருகிலுள்ளது. வைத்யநாதீஸ்வரர் கோயில்.

மண்டகப்பட்டி :—சென்னை ராஜதானி, தென் ஆற்காடு ஜில்லா, குகைக் கோயில், பல்லவ சில்பம். மஹேந்திர வர்மனால் (600-625 கி. பி.) குடையப்பட்டது. மூன்று குகைக்கோயில்களில் பிரம்மா, விஷ்ணு, பரமசிவம், இவர்களின் உருவங்களிருக்கின்றன. பிரதானமான கோயில் சிவாலயம் என்று தூப்ரெயில் துரை எண்ணுகிறார். இங்கு தற்காலம் பூஜையில்லை.

மண்டபல்லி :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்-மஹாதேவர்.

மண்டபபேசரா :—பம்பாய் ராஜதானி, தாணு ஜில்லா, இங்கு ஒரு சிவாலயம்-குகைக் கோயில் இருந்தது. இதை போர்த்துகேயர் பாழாக்கினர்.

மணடலா பிரிவு :—மத்திய மாகாணம், இங்கு இரண்டு சிவாலயங்கள் உள : (1) தியோகாவன் கிராமம், நருமதையும் மற்றொரு நதியும் சங்கமமாகுமிடம், சிவாலயம். சுவாமி-ஜமதக்னேஷ்வர். (2) கக்கரமத் கிராமம்; பழைய சிவாலயம். சுவாமி-மஹாதேவர், இது ஆதியில் ஜெயின் ஆலயமாயிருந்த தென்பர்.

மண்டி :—வட இந்தியா, காங்கிரா தாழ்வரையிலுள்ளது. மண்டி ராஜ்யத்தில், சிவாலயம். அழகிய சில்ப மமைந்தது. பேஜ்நாத்துக்கு 5 மைல் தூரம்.

மணக் குடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சுந்தரேஸ்வர ஸ்வாமி கோயில்.

மணஞ்சேரி :—(கிழக்கு) கீழைத் திருமணஞ்சேரி என்பது தேவாரப் பெயர். ஆமை சிவபெருமானைப்

பூசித்து மனித உருவம் பெற்று, தனக்குக் குறித்த பெண்ணை மணந்த க்ஷேத்திரம். மன்மதன் பூசித்த ஸ்தலம். குலச்சிறை நாயனர் பூசித்த ஸ்தலம். சென்னை ராஜதானி, மாயவரம் தாலுகா, சுவாமி-அருள்வள்ள நாதர், தேவி-யாழின் மொழியம்மை, திருமண சமுத்திர தீர்த்தம், இங்கு இருந்த புராதனமான கோயில், கற்கோயிலாக கண்டராதித்யர் மனைவி செம்பொன் மாதேவியாரால் கட்டப்பட்டது, 948 கி. பி-சென்னை ராஜதானி குற்ருலம் ரெயில் ஸ்டேஷனுக்கு $4\frac{1}{2}$ மைல், திருஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. இதற்கு 9 மைல் தூரத்தில் கர்கடகேஸ்வரர் கோயில், சுவாமி-கர்க்கடகேஸ்வரர், கர்க்கடகம் = நண்டு. பூசித்த ஸ்தலம்.

**மணஞ்சேரி** :—புதுக்கோட்டை சமஸ்தானம், புதுக்கோட்டைக்கு 9 மைல். சிவாலயம். சுயம்புலிங்கம், நந்தியின் காதிலிருந்து தீர்த்தம் சதா பெருகுகிறதென்பர்.

**மணப்பாறை** :—அகஸ்தீஸ்வரர் கோயில, சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, ரெயில் ஸ்டேன்;நல்லாண்டவர்சுவாமி கோயிலுக்கு 1 பர்லாங் வடக்கிலுள்ளது. பழைய கோயில்-இதில் சில கல்வெட்டுகள் உள.

**மண்ணிப் படிக்கறை** :—(திரு) இது இலுப்பையடி, இலுப்பைப்பட்டு என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, வைதீஸ்வரன் கோயிலுக்கு 6 மைல், வாழ்கோளிபுத்தூருக்கு 1 மைல் மேற்கிலுள்ளது. பரமசிவம் நஞ்சையருந்தின வைபவ க்ஷேத்திரம். சுவாமி-நீலகண்டேஸ்வரர், தேவி-அமிர்தகர வல்லியம்மை, அமிர்த தீர்த்தம், பார்வதி தேவியார் சிவபிரானது திருக்கழுத்தைப் பிடிக்க, அங்கு கறை காட்டியருளிய ஸ்தலம் - சுந்தரர் பாடல் பெற்றது.

**மணற்கால்** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, ஆருருக்கு 3 மைல் சிவாலயம், வைப்புஸ்தலம்.

**மணக்கரை** :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம்; மங்களேஸ்வரர், மங்களநாயகி;பாண்டவர்கள் பூசித்ததாக ஐதிகம்.

மணமங்கை :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-மங்களேஸ்வரர், தேவி-மங்களநாயகி, பாண்டவர்கள் பூசித்த ஸ்தலம் என்பர்.

மணலூர் :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, சிவாலயம். மதுரைக்கு 6 மைல்.

மணிக் கிராமம் :—இதற்கு மணிக்கோயில் என்றும் பெயர். சிவாலயம்; சீர்காழிக்கு 1 மைல், வைப்புஸ்தலம்.

மணிகரபேரி :—உடுபி தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, சோமநாதேஸ்வரர் கோயில்.

மணிமங்கலம் :—சைதாப்பேட்டை தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, தர்மேஸ்வரர் கோயில், தேவி வேதவல்லி. கோயில் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. கர்ப்பக்கிரஹம் மஹாபலிபுரம் சகாதேவன் ரதம் போன்றது. இங்கு கைலாச நாதர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

மணிபூர் :—வட இந்தியா, சிவாலயம், ஸ்வாமி - மஹாதேவர். தேவி-பார்வதி.

மணிவாக்கம் :—சென்னை ராஜதானி, சிவாலயம். சுவாமி-மருதேஸ்வரர், தேவி-மரகதவல்லி, பாதாள கங்கை தீர்த்தம்.

மத்தகிரி .—மைசூர் ராஜ்யம், தும்கூர் ஜில்லா, தும்கூரிலிருந்து 24 மைல், மது + கிரி = மத்தகிரி என்றாயதென்பர். சிவாலயம், சுவாமி-மல்லேஸ்வார், கோயிலின் கொடுங்கைகளில் புறாக்கள் தங்கியிருப்பதுபோல் சில்பங்கள் உள. (சிவாலயத்தின் பக்கலில் ஒரு ஜைன ஆலயமுளது.)

மத்ரா :—வட இந்தியா, (பிரபல விஷ்ணு க்ஷேத்திரம்) இங்கு ஒரு சிவாலயம் உண்டு. ஸ்வாமி-பூதேஷ்வர் மஹா தேவ். கோயிலின் வெளிப்பிராகாரம மராட்டிய அரசர்களால் கட்டப்பட்டது. இங்குள்ள சிறு மலைக்கு கைலாசம் என்று பெயர். இதன் தாழ்வரையில் கோகர்ணேஸ்வரர்

கோயில் எனும் ஒரு சிவாலயமுண்டு. அன்றியும், இங் கருகிலுள்ள கங்கா கிருஷ்ண கட்டத்தில் ஒரு மஹாதேவர் சிவாலயமுளது.

**மத்ரா தாசில்** :—ஐக்கிய மாகாணம். இங்கு ஆரிங் எனும் ஊரில் சிவாலயம் உண்டு. சுவாமி-பிமலேஷ்வர் மஹா தேவ், சிறிய கோயில். முத்திதரும் ஏழு க்ஷேத்திரங்களில் ஒன்று. இதற்கு ஆதியில் மதுரபுரி என்று பெயர் இருந் தது. இங்குள்ள மற்ற கோயில்கள் :-ராமேஷ்வர் கோயில். யமுனு நதிக்கரையில் வங்காள கட்டத்திலுள்ளது; ஹாட கேஷ்வர் கோயில் கௌகாட்டில் உள்ளது; ரங்கேஷ்வர் மஹாதேவ் கோயில், ரங்கபூமியிலுள்ளது. இங்கு பல தர்ம சத்திரங்கள் உண்டு.

**மதன பள்ளி** :—சென்னை ராஜதானி, கடப்பை ஜில்லா, சிவாலயம்.

**மதுராந்தகம்** :—சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன் மதுராந்தகன் எனும் சோழ அரசனுல் கட்டப்பட்டிருக்க லாம். இவன் சுமார் 950 கி. பி. யில் ஆண்டவன். சுவாமி- அருளாளேஸ்வரர், வெண்காட்டீஸ்வரர்(?) இங்கு சத்திர முண்டு.

**மதுரை** :—இதற்கு ஆலவாய் என்பது தேவாரப் பெயர். சம்ஸ்கிருதத்தில் ஹாலாஸ்யம் என்று பெயர். கடம்ப வனம் என்பது இதன் பூர்வீகப் பெயர்; கூடல், நான் மாடக்கூடல், சமட்டி விச்சாபுரம், துவாத சாந்த ஸ்தலம் என்றும் பெயர்களுண்டு. வைகையாற்றின் கரையி லுள்ளது. பண்டைக் காலத்தில் பாண்டிய ராஜதானியா யிருந்தது. தனஞ் செயன் எனும் ஓர் வணிகன் இங்கிருந்த கடம்பவனத்தில் ஓர் இரவு இந்திரன் லிங்கபூஜை செய் ததைக் கண்டு அரசனுக்கு அறிவிக்க, அரசன் கடம்ப வனத்தைக் களைந்து, ஓர் பட்டணத்தை யுண்டு பண்ண வெண்ணி பரமசிவத்தை வேண்ட, அவர் அனுப்பிய ஓர் பாம்பு நகரின் எல்லையைச் சுற்றி வட்டமாகக் காட்டிய படியால், இவ்வூர் பூர்வகாலத்தில் வட்டமாக அமைக்கப் பட்டது. இக் காரணம்பற்றியே இதற்கு ஆலவாய் என்று பெயர் வந்தது. ஊரில் வட்டமாயிருக்கும் வீதிக்கு

தற்காலம் வெளிவீதி யென்று பெயர். இதற்குள் அடங்கி யிருப்பது பழைய மதுரையாம். ஸ்தலபுராணத்திற்கு ஹாலாஸ்ய மான்மியம் எனப் பெயர். தமிழ்ப்புராணம் திருவிளையாடற்புராணம். அம்பிகை தடாதகைப் பிராட்டியாகப் பிறந்து அரசாண்டு திக்விஜயம் செய்து கடைசியில் சுந்தரேஸ்வரரை மணந்த க்ஷேத்திரம். பரமசிவம் 64 திருவிளையாடல்கள் புரிந்த புண்யபூமி. கபிலர், பரணர், நற்கீரர் முதலிய பொய்யடிமை யில்லாப் புலவர்களாகிய சங்கத்தார் இருந்த இடம். மூர்த்தி நாயனுர் அரசாண்ட பதி. அரிமர்த்தன பாண்டியனிடம் மாணிக்கவாசகர் மந்திரியாக விருந்த நகரம். இந்திரன் சாபய் நீங்கி சிவ பெருமானை சித்ரா பௌர்ணமி யன்று பூசித்த க்ஷேத்திரம். திருஞான சம்பந்தர் சமணர்களை வென்று அவர்களைக் கழுவிலேற்றிய ஸ்தலம். அவர் திருப்பதிகம் வரைந்த ஏட்டை அனலிலிட வேகாமலிருந்த திவ்ய க்ஷேத்திரம்; மற்ெருரு திருப் பதிகத்தை வைகையில் பிரவாகத்திலிட, ஏடு எதிராகச் சென்ற மகிமை யுடையப் பிரதேசம். கூன் பாண்டியன் சைவனுகி நெடுமாற நாயனுர் எனும் பெயர் பெற்றஊர்;மங்கையர்க்கரசி குலச்சிறைநாயனுர்வாழ்ந்தபூமி, பாண்டிய ராஜனுக்காக நடராஜப் பெருமான் கால்மாறி யாடிய க்ஷேத்திரம். இங்கு பஞ்ச சபைகளில் வெள்ளி யம்பலம் உள்ளது. ஸ்வாமியின் பெயர் சொக்கநாதர், சுந்தரேஸ்வரர்; இன்னும் மற்றத் திருநாமங்கள் - கற்பூர சுந்தரர், கலியாண சுந்தரர், மீனுட்சி சுந்தரர்; சண்பகச் சுந்தரர், கடம்பவன சுந்தரர், பழியஞ்சிய சுந்தரர், ஆலவாய்ச் சுந்தரர், சோமசுந்தரர் முதலியன. தேவி மீனுட்சி யம்மன்; தீர்த்தங்கள்: பொற்ருமரை, எழுகடல், வைகை யாறு. ஸ்தல விருட்சம், கடம்ப விருட்சம், (பழைய மரத்தின் அடிப்பாகம் சுவாமி கோயிலின் வடக்குப் பிராகாரத்தில இன்றும் காணலாம்.) கோயில் இந்தியாவிலுள்ள சிவாலயங்களிலெல்லாம் மிகச் சிறந்தது. இதைப் பார்க்க ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களிலிருந்தும் பிரயாணிகள் திரள்திரளாக தினம் வருகின்றனர், பழைய ஆலயம் மகம்மதியர்கள் காலத்தில் பெரும்பாலும் அழிக்கப்பட்டது. மதுரையை மகம்மதியர்கள் ஆண்டகாலம் 1310-1358. "இஸ்லாம் சிம்மங்கள் ஆலயத்தின் மதிள்

சுவர்களையும் 14 கோபுரங்களையும் மாட வீதிகளையும் இடித்துத் தரைமட்ட மாக்கின" என்று ஒரு மகம்மதிய ஆசிரியர் கூறியுளார். விஜயநகர அரசனாகிய புக்க தேவரது குமாரனாய குமார கம்பன உடையார் என்பவர் மதுரையை மகம்மதியர்களிடமிருந்து மீட்டு, பூட்டப்பட்டிருந்த ஆலயத்தைத் திறந்து, பூஜைக்கு அருகாக்கினர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கோயில் மூன்று பிராகாரங்களை உடையது; விஸ்தீரணம் இரண்டு பக்கம் 720-729 அடி உள்ளது; மற்ற இரண்டு பக்கங்கள் 834-852 அடி உள்ளது; மொத்த விஸ்தீரணம் சுமார் 25 ஏகரா. இங்கு 9 கோபுரங்கள் உள்ளன. பெரிய கோயில் விமானம் சுமார் கி. பி. 1520-ஆம் ஆண்டில் சொக்கநாத நாயகரால் கட்டப்பட்டதாம். மீனாட்சி யம்மன் கோயில் பெரும்பாலும் திருமலை நாயகர் காலத்தில் கட்டப்பட்டதாம். ஆயிரக்கால் மண்டபம் நாயக்க அரசர்களிடம் தளகர்த்தனாயிருந்த அரியநாயக முதலியாரால் கி. பி. 1560 (சுமார்) கட்டப்பட்டது; இதில் 985 கால்கள் தானிருக்கின்றன; முதலியாரது சிலை உருவம் இம் மண்டபத்தின் முன் பாகம் உள்ள ஓர் தூணில் செதுக்கப்பட்டிருக்கிறது. புது மண்டபம் அல்லது வசந்த மண்டபம் கோயிலுக்கு கிழக்கில் வெளியில் உள்ளது; திருமலை நாயகர் காலத்தியது. இதற்குக் கிழக்கில் ராய கோபுரம் சுமார் 1623-1685-ல் ஆரம்பிக்கப்பட்டு, முடிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது; இதன் அடிப்பாகம் 174 அடி உயரம்; 107 அடி அகலம்; வாயிற்படி 60 அடி உயரம். ஸ்வாமி கோயிலுக்குள் உள்ள ஒரு பெரிய மண்டபம் பெரிய வீரப்ப நாயகரால் கட்டப்பட்டதாம்; இவர் காலம் 1500-1578. தற்காலம் மீனாட்சி நாயக்கர் மண்டபம் என்று சொல்லப்படுகிறது முத்துவீரப்ப நாயக்கரால் கட்டப்பட்டதாம். கலியாண மண்டபம் 1707-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. நான்கு வெளி கோபுரங்கள் கம்பன உடையார் காலத்தில் கட்டப்பட்டன வென்பர்; இவர்தான் மதுரையை மகம்மதியர்களிடமிருந்து மீட்டவர்; இவர் காலம் சுமார் 1372 கி. பி. ஆகும். ஸ்வாமி கோயிலும் அம்மன் கோயிலும் அக்கம் பக்கமாயிருக்கின்றன. மீனாட்சி அம்மன் கோயிலின்

முன் புறத்திற்கு அஷ்ட சக்தி மண்டபம் என்று பெயர். ஸ்வாமி கோயிலின் கிழக்கு கோபுர வாயிலாக சாதாரணமாகப் பக்தர்கள் புகுவதில்லை. உற்சவாதிகளெல்லாம் அம்மன் சந்நிதி வாயிலாகத்தான் நடத்தப்படுகின்றன. இதற்குக் காரணம், விஜயரங்க சொக்கநாதர் காலத்தில் கோயிலின் வேலையாட்களுக்கு இறையிலியாக (வரியில்லாமல்) விடப்பட்ட மான்யங்களுக்கு, வரி தண்ட உத்யோகஸ்தர்கள் முயல, அதைத் தவிர்ப்பதற்காக ஒரு கோயில் வேலையாள் இக் கிழக்கு கோபுரத்திலேறி கீழே விழுந்து மடிந்ததால், இக் கோபுரத்தின் மூலமாக யாரும் புகுவதில்லையாம். இக் கோபுரம் 9 நிலை யுடையது. சுந்தர பாண்டியனால் 1218ஹு கட்டப்பட்டது. வடக்கு கோபுரத்திற்கு பல வருடங்களாக மொட்டை கோபுரம் என்று பெயர் இருந்தது; அநேக வருடங்களாக இக் கோபுரத்திற்கு மேல் கலசங்கள் வைக்கப்படவில்லை; வைத்தால் அவற்றை ஒரு பிசாசு தள்ளி விடுவதாக வதந்தி யிருந்தது. சில வருடங்களுக்கு முன் ஒரு கும்பாபிஷேகத்தின்போது இக் கோபுரம் ஸ்தூபிகளாகிய சிலைகள் வைக்கப்பட்டு சரியாக்கப்பட்டது; இது 9 நிலை யுடையது; 1572-ஹு கிருஷ்ண வீரப்ப நாயகரால் கட்டப்பட்டது. இக் கோபுரத்தின் கீழ் இதற்குக் காவலாக கருப்பண்ணசாமி கோயிலிருக்கிறது. இதற்கு வடைமாலை சாத்துகிறது பெரிய கைங்கர்யமாம்.

மேற்கு கோபுரம் 9 நிலையை யுடைசது 1323-ஹு பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்டது. நகாரா மண்டபம் மீனாட்சி கோயிலுக்கெதிரி லுள்ளது. சுமார் 1635-ஹு அச்சுதராயரால் கட்டப்பட்டதாம்.

இப் பெரிய கோயிலில் பார்க்க வேண்டிவைகள் :— (1) பொற்றமரைக்குளம்-மீனாட்சி கோயிலின் முன்புள்ளது. இதில் சங்கப்பலகை யிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இதன் படியில் ஓரிடத்திலிருந்து பார்த்தால் கோயிலிலுள்ள எல்லா கோபுரங்களின் சிகரங்களும் தெரியும். இக் குளத்தைச் சுற்றியுள்ள மண்டபங்களில் 64 திருவிளையாடல்கள் முதலியன வர்ணத்தால் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. (2) கிளி கூண்டு மண்டபம்-இதில் பஞ்சவர்ணக்

கிளிகள் முதலியன வைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள கருங்கற்றூண்களில் பஞ்ச பாண்டவர்கள் முதலியோருடைய பெரிய சிலை உருவங்களிருக்கின்றன; மிகவும் அழகியவை. ( ) முக்குறுணிப் பிள்ளையார்-மிகவும் பெரிய பிள்ளையார்; வண்டியூர் தெப்பக் குளத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட தென்பர். பிள்ளையார் சதுர்த்தி தினம் மூன்று குறுணி அரசியினால் ஒரே மோதகம் செய்யப்பட்டு நிவேதனம் செய்யப்படுகிறது. (4) ஸ்வாமி கோயிலுக்கெதிரில் 16 கால் மண்டபம்; இது கிருஷ்ண வீரப்ப நாயகர் காலத்தில் கட்டப்பட்டது. இதில் முப்புரதகன மூர்த்தி, சண்டேஸ்வர அனுக்கிர மூர்த்தி, அர்த்தநாரீஸ்வரர் முதலிய சிலைகள் மிகவும் அழகிய வேலைப்பாடுள்ளவை. அன்றியும் இங்கு எதிரிலுள்ள விரபத்ர மூர்த்தி, காளி (இக் காளிக்கு வாதாடும் பத்ரகாளி என்று பெயர்) முதலிய மிகப் பெரிய சிலை யுருவங்கள் மிகவும் அருமையான வேலைப்பாடுள்ளவை. இவைகள் 16-ஆம் நூற்றூண்டின் பிற்பகுதியில் வெட்டப்பட்டனவாக புரோபசர் ஹிராஸ் எண்ணுகிறூர். (5) ஸ்வாமி சந்நிதியின் வாயிலில் காயத்ரி சாவித்திரி மந்திரங்களின் சிலைகளிருக்கின்றன. (இவை மற்றெங்கும் கிடையா). (6) முதலி மண்டபத்திலுள்ள மோகினியின் உருவம் மிகவும் அழகியதென பார்த்தவர்களால் மதிக்கப்படுகிறது. இம் மண்டபம் 1613-ஞ கடந்தை முதலியாரால் கட்டப்பட்டது. (7) ஆயிரக்கால் மண்டபம்-இதன் தூண்கள் ஒன்றில் யாளி வாயில் குண்டு சுழன்றுகொண்டிருக்கக் காணலாம். இங்குள்ள மன்மதன் ரதி யுருவங்கள் மிகுந்த சுந்தரமமைந்தவை. இது கிருஷ்ண வீரப்ப நாயகர் காலத்தில் சுமார் 1572-ஞ கட்டப்பட்டது. (8) எல்லாம் வல்ல சித்தர் கோயில்-ஸ்வாமி கோயிலின் உட்பிராகாரத்திலுள்ளது. விக்கிரம பாண்டியன் கட்டியது. (9) காரைக்கால் அம்மையார் சந்நிதி. சுந்தரேஸ்வரர் கோயிலின் பிராகாரத்திலுள்ளது. (10) சங்கப்புலவர்கள் வைத்திருக்கும் மண்டபம்.

கோயிலின் மதில் சுவர்கள் மிகவும் உன்னதமானவை. மதுரை மதில் அழகு, என்பது பழமொழியாம். இங்கு வெளிப் பிராகாரத்தில் ஒரு பெரிய கற்றூணில் பல சிறு தூண்கள் அடங்கியிருக்கின்றன; இவைகளை முறையே

தட்டினல் சப்த ஸ்வரங்கள்போல் ஒலிக்கின்றன. இது ஆதியில் ஒரு புறமிருந்த கரிய மாணிக்கப் பெருமாள் கோயிலைச் சார்ந்த தென்பர் (ஆயுரக்கால் மண்டபத்திலும் இப்படிப்பட்ட இரண்டு தூண்களிருக்கின்றன.) இந்த விஷ்ணு ஆலயம் தற்காலம் ஒரு பிராகாரத்தில் கோயில் நகைகள் முதலியன செய்வதற்காக அமைக்கப்பட்ட மண்டபமாக உபயோகிக்கப்படுகிறது. கோயிலில் தற் காலம் ஒரு விஷ்ணு சந்நிதியுளது. மதுரை திருஞான சம்பந் தர் அப்பர் பாடல் பெற்றது. இக் கோயிலில மூன்று முக்கிய உற்சவங்கள் நடைபெறுகின்றன-(1) சைத்ரோற் சவம், சித்திரை மாசம். இதில் திருக்கலியாண உற்சவம் விசேஷம். (2) தெப்போற்சவம் - தை மாசம். இது வண்டியூர் தெப்பக் குளத்தில் நடக்கிறது. இக் குளம், தென் இந்தியாவில் மிகவும் அழகியது. மைய மண்டபத்தில் சிறு கோபுரம் உண்டு. அதில் நாயக்க அரசர்களுடைய உருவங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இக் குளத்திற்கு ஜலம் வைகை யின் வாய்க்கால் வழியாகப் பாய்கிறது. குளம் சரியாக 1200 அடி நீளமும் அகலமும். இக்குளம் மதுரைக்கு $2\frac{1}{2}$ மைல் தூரம் உளது. (3) ஆவணிமூல உற்சவம்-ஆவணிமாசம். இதில் பிட்டுக்கு மண் சுமந்த உற்சவம் விசேஷம். இவைகளன்றி மாதம் மாதம் ஏதாவது உற்சவம் இருந்துகொண்டேயிருக்கும், அறைக் கட்டு உற்சவம்,வசந்தோற்சவம்,முதலியன; திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்ட ஒவ்வொரு விளையாடலுக்கும் ஒவ் வொரு உற்சவமுண்டு.மார்கழி மாதம் படியளக்மும் உற்சவம் விசேஷம். ஆதியில் இக் கோயிலின் பிரம்மோற்சவம் வைகாசி மாதம் நடந்ததாகவும் அதை திருமலை நாயகர் மாற்றி சைத்திரோற்சவ மாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

பெரிய கோயிலிலுள்ள மற்ற சிறு ஆலயங்கள்.

(1) மீனட்சியம்மன் சந்நிதிக்கு வடபுரத்தில் பழைய சொக்கநாதர் கோயிலென ஒன்றுளது. இதுதான் பூர் வீக கோயிலோ, அல்லது பெரிய கோயிலுக்கு வெளியே யிருக்கும் கீழே குறிக்கப்பட்ட பழைய சொக்கனதர் கோயில்தான் ஆதி கோயிலோ, என்று சொல்வதற்கில்லை. இது ஆராயத்தக்கது. (2) சின்னிச்சாம-கோயில்-அம்மன்

சந்நிதிமடப்பள்ளிக்கு வடக்கிலுள்ளது; கோயில் மிகவும் சிறியது; மேற்கு பார்த்தது. இங்குள்ள சந்நிதியின் வாயிலுக்கு மூத்தளக்கும் வாயில் என்று பெயர்; தற்காலம் மூத்து வழி என வழங்குகிறது. இது 1426ஞு சின்னப்ப நாயகரால் கட்டப்பட்டதாம். (3) நந்தீஸ்வரர் கோயில் ஸ்வாமி சந்நிதியில் திருவாயிலின் பக்கத்தில் வடக்கு முகமாக இருக்கிறது. (4) பெத்தீஸ்வரம், வேலீஸ்வரம்- இவை இரண்டும் ஸ்வாமி கோயில் இரண்டாம் பிராகாரத்தின் மேற்றிசையிலுள்ளது. (5) முக்தீஸ்வரர் கோயில். பெரிய கோயிலில் சில நாயக்கர் அரசர்கள் காலத்திய கல்வெட்டுகள் உள.

மேற்குறித்தபடி ஸ்வாமி மோயிலுக்கெதிரில் புதுமண்டபம் என்று ஒரு அழகிய மண்டபம் உளது. இங்குதான் வசந்தோற்சவம் நடக்கிறது. இது 333 அடி நீளம் 105 அடி அகலம்; இதன் நடுவில் விஸ்வநாத நாயகர் முதல் திருமலை நாயகர் வரையில் அரசாண்டவர்களுடைய சிலை உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதைச் சுற்றிலும் வெயில் காலத்தில் ஜலம்விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; இது திருமலை நாயகரால் கட்டப்பட்டது; பல சிறந்த சிலைகளை யுடையது- அதில் பார்க்கத் தக்கவை, ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி, காளி தேவி, கலியாண சுந்தரர் மணக்கோலம், ஸ்வாமி பெண் பன்றியாக பன்றிக் குட்டிகளுக்கு முலைப்பால் ஊட்டிய திருக்கோலம் முதலியன. இம்மண்டபம் 1626ஞு ஆரம்பிக்கப்பட்டு 1645ஞு முடிக்கப்பட்டது.

மதுரையிலுள்ள மற்ற சிவாலயங்கள்:— பழைய சொக்கநாதர் கோயில், சிறு ஆலயம். இங்குள்ள லிங்கத்திற்கு சொக்கலிங்கம் என்று பெயர்; இது பூர்வீக ஆலயமாயிருக்கலாம். நன்மைத் தருவார் கோயிலென மற்றொரு சிவாலயமுண்டு. இந்த இடத்திற்கு திருநடுவூர் என்று பெயர்; மேலமாசி வீதிக்கு மேற்கே யுள்ளது. ஸ்வாமியின் பெயர் இம்மையே நன்மை தருவார் என்பதாம். தேவி- மத்யபுரநாயகி. 1218ஞு சுந்தர பாண்டியன்

கட்டிய கோயிலாம். தெற்கு மாசிவீதியில் ஏகாம்பரீஸ்வரர் கோயில்

ஜவந்தீஸ்வரர் கோயில் மீனாட்சி கோயிலுக்கு தெற்கில் உள்ளது இது. பழையஆலயமாயிருக்கலாம். தமிழில் செவ்வந்தீஸ்வரர் எனப்பெயர். இக் கர்ப்பக்கிரஹம், செவ்வந்திபீமநாயகர் என்பவரால் 1564ஞ கட்டப்பட்டது. இது ஆதியில் பிரத்யேகமான கோயிலா யிருந்திருக்கலாம். ஊரிலுள்ள சத்திரங்களில் முக்கியமானவை:- குண்ணத்தூர் சத்திரம், கோமுட்டிசத்திரம், லாலா சத்திரம்,ஸ்டேஷனுக்கு சுமார் ¼ மைல் தூரம்; கருப்புட்டி சத்திரம், வெங்கடசாமி நாயகர் சத்திரம், மலையாளச் சத்திரம், சுமார் ⅓ மைல் தூரம்; மங்கம்மாள் சத்திரம் ½ பர்லாங் தூரம். இங்கு மூசாபெர் பங்களாவும் உண்டு.

**மந்திரச்சுரம்** :—தென் இந்தியா, ஓமலூர் சிவாலயம் ஸ்வாமி - ஆர்த்தநாதேஸ்வரர், தேவி - பார்வதி, ருத்திர தீர்த்தம்.

**மயச்சோலிங்கக் கோயில்** :—சென்னை ராஜதானி, பேரளத்திற்கு ¼ மைல், சிவாலயம். ஸ்வாமி-சகலபரமேஸ்வரர் தேவி-மங்கள நாயகி, சரஸ்வதி தீர்த்தம். பிரம்மாவும் சரஸ்வதியும் பூசித்த ஸ்தலம்.

**மயிலாடி** :—சென்னை ராஜதானி, சீர்காழி தாலுகா, கொள்ளிடத்திற்கு சமீபமுள்ளது. சிவாலயம் சிறியது.

**மயிலார்** :—பெல்லாரி ஜில்லா, ஹடகல்லி தாலுகா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-மல்லஹரி, சிவபெருமாள் மல்லாசுரனைக் கொன்ற ஸ்தலம். உற்சவத்தின் போது ஜனங்கள் நாய்களைப்போல் வேடம் பூண்டு குலைத்துக்கொண்டு கோயிலுக்குள் செல்கின்றனர்.

**மயிலூர்** :—சென்னை ராஜதானி, நீலகிரியில் கூனூருக் கருகிலுள்ளது. மஹாலிங்க ஸ்வாமி கோயில்.

**மயிலை** :—திருமயிலை, மயிலாப்பூர் என்று வழங்கப்படுகிறது, சென்னை ராஜதானி, சென்ன பட்டணத்தின்

தெற்கில் உள்ளது. தேவாரப் பதிகங்களில் மயிலாப்பு என்று அழைக்கப்பட்டிருக்கிறது. திருஞானசம்பந்தர் அங்கம் பூம்பாவையாக்கிய க்ஷேத்திரம். கோயிலின் மேற்கு பிராகாரத்தில் இதற்கு ஒரு சிறு கோயில் உண்டு. ஸ்வாமி-கபாலீஸ்வரர், தேவி-கற்பகாம்பாள், புன்னை விருட்சம், கபாலி தீர்த்தம் (சித்திரை குளம்) ராம தீர்த்தம், முதலியன. பார்வதி தேவியார் மயில் உருவில் சிவபெருமானைப் பூசித்த க்ஷேத்திரம். வடக்கு பிராகாரத்தில் இதற்கு ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் வாழ்ந்த ஸ்தலம். ஸ்வாமி சந்நிதி மேற்கு பார்த்தது. தேவி சந்நிதி கிழக்கு பார்த்தது, தற்காலக் கோயில் சுமார் 300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாம். இதில் ஒரு கல்வெட்டும் இல்லாததது கவனிக்கத் தக்கது. பழைய கோயில் சமுத்திரக் கரையோரம் இருந்தது; போர்த்துகேயரால் இடிக்கப்பட்டதென்று எண்ணுவதற்கிடமுண்டு. விநயகர் பெயர்-கூத்தாடு விநாயகர், சுப்பிரமணியர் பெயர் சிங்கார வேலவர். பிரம்மோற்சவம் பங்குனிமாசம். 8-ஆம் நாள் திருஞான சம்பந்தர் அங்கம் பூம்பாவை யாக்கிய ஐதிகம் நடந்தேறி வருகிறது, அறுபத்து மூவர் உற்சவம் விசேஷம். 3-ம் நாள் அதிகாரநந்தி சேவை காலை 6 மணிக்கு, 5-ம் நாள் விருஷமோற்சவம் 9-ம் நாள் பிட்சாடனர் திருக்கோலம், இந்த உற்சவங்கள் விசேஷம். கோபுரம் புதிதாய்க் கட்டப்பட்டது சுமார் 40 வருடங்களுக்குமுன்-125 அடி உயரம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. மயிலாப்பூரிலுள்ள மற்ற சிவாலயங்கள்:— (1) வெள்ளீஸ்வரர் கோயில் தெற்கு மாடவீதியிலுள்ளது. சுக்கிரன் பூசித்தது. பிரம்மோற்சவம் சித்திரை மாசம் ஸ்வாமி-வெள்ளீஸ்வரர், தேவி-காமாட்சியம்மன். (2) மல்லிகேஸ்வரர் கோயில், தேவி-மரகதவல்லி. (3) விருபாட்சீஸ்வரர் கோயில், தேவி-விசாலாட்சி. (4) காரணீஸ்வரர் கோயில். (5) பிரம்மபுரீஸ்வரர் கோயில். (6) தீர்த்தகபாலீஸ்வரர் கோயில், அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். என்பர். (7) ராமலிங்கேஸ்வரர் கோயில் ஸ்ரீ ராமர் பூசித்த ஸ்தலம். (8) மீளேச்சுரர் கோயில் வேதம் பூசித்த ஸ்தலம். (9) வாலீஸ்வரர் கோயில்; வாலி பூசித்தது.

**மயின்புரி** பிரிவு:—ஐக்கிய மாகாணம், இங்குள்ள சிவாலயங்கள்: (1) பொங்கோவன் கிராமர், சிவாலயம். ஸ்வாமி-மஹாதேவர். (2) ஷிகோபாத் கிராமம், மஹாதேவர் ஆலயம். (3) நாகலா பிரந்தாபன் கிராமம், சிவாலயம்; ஸ்வாமி-பஞ்சமுகி மஹாதேவ்.

**மயேந்திரப் பள்ளி**:—(திரு) மஹேந்திரப் பாளையம் கோவிலடிப்பாளையம் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, ஆனைக்காரன் சாவடி ஸ்டேஷனிலிருந்து 7 மைல்; சந்திரன், சூரியன், பிரம்மா, இந்திரன் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி - திருமேனியழகர், தேவி - முல்லை நகை வடிவாம்பிகை மந்திரப் புஷ்கரணி தீர்த்தம். இங்கு ஒரு எலி சிவபெருமான் அருளைப்பெற்று சக்கிரவர்த்தியாய் பிறந்தது என்பது ஸ்தலபுராணம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

**மரக்காணம்**:—சென்னை ராஜதானி, அச் சிறுபாக்கம் ஸ்டேஷனுக்கு 12 மைல். இதன் பழைய பெயர் சோ பட்டினம் (சோ = அரசன்.) சிவாலயம். ஸ்வாமி - பூமேஸ்வரர், தேவி-கிரியம்பாள். அமுத தீரத்தம்,—ரதி தேவி ஆதிசேஷன் பூசித்த ஸ்தலம்.

**மருகல்**:—(திரு) சென்னை ராஜதானி, நங்கிலத்தி லிறங்கி $7\frac{1}{2}$ மைல் போக வேண்டும். சிவாலயம், ஸ்வாமி-மாணிக்க வண்ணேஸ்வரர், தேவி-வண்டுவார்குழலம்மை. சிவகங்கை தீர்த்தம், வன்னி விருட்சம். திருஞானசம்பந்தர் விஷம் தீண்டி யிறந்த செட்டிப் பிள்ளையைப் பிழைப்பித்த க்ஷேத்திரம். பிரம்மோற்சவம் சித்திரை மாசம். திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. மார்க்கண்டர் பூசித்த க்ஷேத்திரம்.

**மருதமலை**:—சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-செல்வபதீஸ்வரர், தேவி-பராசக்தி.

**மருதாந்தநல்லூர்**:—தென் இந்தியா, சிவாலயம்.

**மருதூர்** :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-கூடலேஸ்வரர், தேவி - உமாதேவி, தாம்ரபர்ணி தீர்த்தம்; உதகநதி சித்ராநதி கூடுமிடம்; ஆகவே ஸ்வாமிக்கு கூடலழகர் என்று பெயர்.

**மல்ஹார்காட்** :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, ம்ஹாதேவர் கோயிலும், கண்டோபா கோயிலும், பாழாய்க் கிடக்கின்றன.

**மலையடிப்பட்டி** :—புதுக்கோட்டை சமஸ்தானம்,—சென்னை ராஜதானி; சிவாலயம், குன்றில் குடையப்பட்டிருக்கிறது. கீரனூருக்கு 8 மைல் கிழக்கு. கர்ப்பக்கிரஹம் தாழ்வாரத்தின் பின்புறமாக வாயிலைப் பார்த்தபடி அமைக்கப்படவில்லை; தாழ்வாரத்தின் பாகமே கர்ப்பக்கிரஹமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஸ்வாமி சந்நிதி கிழக்கு புறமாக இருக்கவேண்டுமென்று இவ்வண்ணம் செதுக்கப்படடது போலும். லிங்கம் வட்ட வடிவமாயது. எதிரில் நந்தி செதுக்கப்பட்டிருக்கிறது. பின்புறச் சுவர் பக்கம் சப்தமாத்ருக்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன (அர்த்த சிலை உருவங்களாக). இங்குள்ள ஒரு தூணில் சண்டேஸ்வரர் விக்ரஹம் இருக்கிறது; இது பழமையான சண்டேஸ்வர மூர்த்தியாம். நடுத் தூண்களில் கல்வெட்டுகள் இருக்கின்றன. கோயில் பல்லவ நந்தி வர்மனது 16-ஆம் ஆண்டில் வெட்டப்பட்டது; ஆகவே, கி. பி. 800-ஷுத்தியதாம். கோயில் 22 அடி × 18 அடி 4 அங்குளம் × 9 அடி. கோயிலை வெட்டுவித்தவன் பெயர் விடேல் விடுகு முத்தரையன் என்பதாம்.

**மழபாடி** :—(திரு) சென்னை ராஜதானி, திருவையாறுக்கு 2½ மைல், பெரும்புலியூருக்கு 2 மைல் வட மேற்கு. மழவர்பாடி = மழவர்கள் பாசறை. நந்தி தேவருக்குக் கலியாணமான ஸ்தலம். உத்தரவாஹினி; ஸ்வாமி-வஜ்ரஸ்தம்பேஸ்வரர், தேவி-அழகாம்பிகை, கொள்ளிடநதி, சிவகங்கை, லட்சுமி தீர்த்தம் - இவையிரண்டும் தற்காலம் கொள்ளிடத்தில் மூழ்கிப் போயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தேவேந்திரன் பூசித்த ஸ்தலம். பிரம்மோற்சவம் மாசிமாசம். கோபுரம் 7 நிலை யுடையது. மிகவும்

பழமையான ஆலயம், கல்வெட்டுகள் நிறைந்திருக்கிறது. மூவர் பாடல் பெற்ற க்ஷேத்திரம்.

**மழலாடி** :—உடையார் பாளையம் தாலுகா, திருச்சிராப் பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, வைத்யநாதர் கோயில்.

**மழிசை** :—திருமழிசை என வழங்கப்படுகிறது. (பிர பல விஷ்ணு க்ஷேத்திரம். திரு + மயி + சேய், திருமழிசை யாயதென்பர்.) பூவிருந்தவல்லிக்கு 3 மைல். செங்கல் பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். தற்காலம் ஸ்வாமி பெயர் ஒட்டாண்டி என்பர். தேவி-சீதள நாயகி, பழைய கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் அகஸ்தியேஸ்வரர் என்றிருக்கிறது. அருகிலிருக்கும் வைணவக் கோயிலார் தற்காலப் பெயரைக் கொடுத்தனர் என்பர். கோயில் பழைய சோழ கட்டடம். 1055-ம் ஆண்டில் ஆண்ட முதல் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டு ஒன்று உளது. பண்டிட் நடேச சாஸ்திரியார் இக் கோயில் 11-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று கூறுகிறார். கர்ப்பக்கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி; காஞ்சி ஜ்வரஹரேஸ்வரர் கோயிலைப் போன்றது.

**மளவள்ளி** :—மைசூர் ராஜ்யம், ஷிகார்பூர் தாலுகா, ஷிமோகா ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி பெயர் கள்ளேஸ் வரர், பூர்வகாலத்தில் ஸ்வாமி பெயர் மள்ளபள்ளிதேவர் என்றிருந்தது. இங்கு ரமலிங்க ஸ்வாமி கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு. மற்றும் அமிர்தேஸ்வர ஸ்வாமி கோயில்-கிலமாயிருக்கிறது.

**மறவ மதுரை** :—புதுக்கோட்டை சமஸ்தானம், திரு மெய்யம் தாலுகா, சிவாலயம்.

**மறியூர்** :—சென்னை ராஜதானி, ராம்நாட் ஜில்லா, ராம நாத புரத்திற்கு 26 மைல். மிகவும் பழைய சிவாலயம். ஸ்வாமி-பூவேந்திநாதர்; கோயில் மணலால் மூடப்பட்டிருந் ததை ராயர் அப்பாஜி காலத்தில் வெளிப்படுத்தினர். அச் சமயம் ஸ்வாமியின்மீது சாற்றியிருந்த புஷ்பங்கள் வாடாம லிருந்தபடியால், ஸ்வாமிக்கு அப்பெயர் வந்ததென்பர்.

**மன்னார்குடி** :—மேற்படி தாலுகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ஜெயங்கொண்ட நாதர் கோயில், ஸ்வாமி-ஜெயங்கொண்ட சோளீஸ்வரர்; ராஜராஜனால் கட்டப்பட்டதாம். (1019-1053) இக் கோயிலில் காய்ச்சப் படும் பால் எப்பொழுதும் கெடுவதில்லை என்பது ஐதிகம். இங்கு அண்ணாமலைநாதர் கோயில், கைலாசநாதர் கோயில் என்னும் இரண்டு சிவாலயங்களும் உள. இவைகளிலும் பழைய கல்வெட்டுகள் உள.

**மன்னார் கோயில்** :—இது தற்காலம் விஷ்ணு ஆலயமா யிருக்கிறது. பூர்வத்தில் சிவாலயமாயிருந்த தென்பதற்கு பல குறிகள் உள. இங்குள்ள 5 நிலை கோபுரத்தில், கணேசர், நடராஜர், விருஷபவாஹனரூடர் முதலிய சிலபங் கள் உள. இங்குள்ள கோயில் துவாரபாலர்கள் கைகள் தறிக்கப்பட்டிருக்கின்றன; சிவ சின்னங்கள் இருந்ததை வெட்டியதாக எண்ண இடமுண்டு. கோயிலிலுள்ள வைஷ்ணவ உருவங்களெல்லாம் சித்திரங்களே. விமானத் தின் தென்புறம் தட்சிணாமூர்த்தி யிருக்கிறார். குலசேக ராழ்வார் காலத்தில் இது வைஷ்ண ஆலயமாக மாற்றப் பட்ட தென்பர்.

**மனப்படைவீடு** :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம். தென் காசி கோயிலைப் போன்ற கர்ப்பக்கிரஹ முடையது.

**மஹாகோடே** :—வட இந்தியா, சிவாலயம். சுயம்பு லிங்கம்; ஸ்வாமி பெயர் மஹோத்கடா.

**மஹாதானபுரம்** :—குளித்தலை தாலுகா, திருச்சிராப் பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி; சோளீஸ்வரர்கோயில்-ஸ்வாமி-மதுராந்தக சோளீஸ்வரர்; கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் ஸ்ரீ மதுராந்தக ஈஸ்வரர் என்றிருக்கிறது.

**மஹாதேவ மலை** :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம் சிறியது; சிறு குன்றின்மீதுள்ளது. திருக்கழுகுன்றத்து கழுகுகள் தினம் இங்கு வருவதாக ஐதிகம்.

மஹாதேவ பெட்டா :—மைசூர் ராஜ்யம் (கன்னடத்தில் பெட்டா என்றால் மலை) மைசூருக்கு 83 மைல். கோயில் காட்டின் மத்தியிலுள்ளது. ஸ்வாமி பெயர் மஹாதேஸ்வர். லிங்கத்திற்கு மைசூர் மஹாராஜா பொற் கவசம் அர்ப்பணம் செய்திருக்கிறார்.

மஹாநந்தி :—சென்னை ராஜதானி, நந்தியால் ஸ்டேஷனுக்கு 10 மைல். குண்டக்கல் பெஜ்வாடா ரெயில் பாதையில் காஜுலபள்ளி ஸ்டேஷனுக்கு 3 மைல். நல்லமலைத்தொடரின் அடியில், காட்டின் மத்தியில் சிவாலயம் உளது. கோயில் குளத்தில் மலையூற்று நீர் பாய்கிறது. ஸ்வாமி-மஹா நந்தீஸ்வரர்-சிவராத்திரி விசேஷம்.

மஹாபலிபுரம் :—இதன் பூர்வீகப் பெயர் மாமல்லபுரம். சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, திருக்கழுக்குன்றத்திலிருந்து $2\frac{1}{2}$ மைல். சென்னையிலிருந்து 32 மைல். மஹா மல்லன் எனும் பல்லவ அரசன் ஆண்ட இடமாதலால் இப் பெயர் வந்திருக்கலாம். சிவாலயம் கடற்கரைக் கோயில் (690-710) இரண்டாம் நரசிம்ம வர்மன் அல்லது ராஜசிம்மனால் ஏழாம் நூற்றாண்டில் இக் கோயில் கட்டப்பட்டது. இதற்கு க்ஷத்திரிய பல்லவேஸ்வாம் என்று பெயர். கோயிலில் தற்காலம் பூஜையில்லை. பெரிய லிங்கம் பின்னப்பட்டிருக்கிறது; இதற்கு க்ஷத்திரிய சிம்ம பல்லவேஸ்வரர் என்ற பெயர். துவஜஸ்தம்பம் சமுத்திரத்திலிருக்கிறது, 11 அடி உயரம். அலைகள் கோயிலுக்குள் இராக்காலங்களில் மோதுகின்றன. இக் கோயில் 8-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென தூப்ரெயில் துரை எண்ணுகிறார். இக் கோயில் கிழக்கு பார்த்தது. இதைப் பார்த்துதான் தென் இந்தியாவிலுள்ள சிவாலயங்கள் கட்டப்பட்டன என்று சிலர் கூறுகின்றனர். லிங்கம் 17 பட்டைகள் உடையது. கறுப்புக் கல்லாலாயது; சுற்றளவு 6 அடி 9 அங்குலம். லிங்கத்தின் பின்புறம் சோமாஸ்கந்த மூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. கோயிலுக்குப் பின்புறம் ஒரு சிறு சிவாலயமுண்டு. இதற்கு ராஜசிம்ம பல்லேஸ்வரர் கோயில் என்று பெயர். இதிலும் தற்காலம் பூஜையில்லை. இங்கும் சோமாஸ்கந்த மூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. காலம் 690-710. இங்குள்ள

மற்ற சிவாலயங்கள்: (1) தர்மராஜன் ரதம். இது ரதமல்ல, சிவாலயமாகவே வெட்டப்பட்டதாம். 28 அடி சதுரம், 35 அடி உயரம். ஒரே கல்லில் வெட்டப்பட்டது. பௌத்த விஹாரங்களைப்போல் நிர்மிக்கப்பட்ட தென பெர்கூசன் கூறுகிறார். இது 4 மாடிகள் உடையது, கி. பி. 670-700 ஆண்டில் ஆண்ட ராஜ சிம்மன் எனும் பல்லவ அரசனால் வெட்டப்பட்டது. நரசிம்மவர்மன், நரசிம்மன், நரசிம்ம விஷ்ணு, காலகாலன், அத்யாந்த காமன், ஸ்ரீபரன், ஸ்ரீநிதி, அதிரணசண்டன் முதலிய பிருதுப் பெயர்களுடையவன். இக் கோயிலின் மூன்றாம் மாடியில் கிழக்கில், இக் கோயிலின் பெயர் அத்யாந்த பல்லவேஸ்வரம் என்று கூறப்பட்டிருக்கிறது, அதாவது அத்யாந்த காமன் என்பவனால் கட்டப்பட்டதாம். பரம சிவத்தின் உருவம் சோமாஸ்கந்த மூர்த்தியாக நடுவில் இருக்கிறது; பக்கலில் பிரம்ம விஷ்ணுவின் உருவங்களும் இருக்கின்றன. கோயிலில் பூஜையில்லை. இங்கு ஆதியில் சந்தன மரத்தாலாகிய திராவிகள் இருந்தன. (3) அர்ஜுனன் ரதம்-இதுவும் சிவாலயமாக ஆரம்பிக்கப்பட்டு முற்றுப் படவில்லை. (4) தற்காலம் கணேசர் ரதம் என்று அழைக்கப்படும் கட்டடமும் ஆதியில் சிவாலயமாய்க் கட்டப்பட்டதேயாம். இக் கோயிலின் கல்வெட்டில் இது பல்லவ அரசனாகிய அத்யாந்தகாமரணஜெயனால் சிவாலயமாகக் கடடப்பட்டதென அறிகிறோம். 3 மாடிகளையுடையது; உச்சியில் திரிசூலங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. 670-700 கி. பி. இதிலிருந்த சிவலிங்கம் சீமைக்குக் கொண்டுபோகப்பட்டது. பிறகு காலியாயிருந்த கோயிலில் விக்னேஸ்வரரை எழுந்தருளப்பண்ணியிருக்கின்றனர். இங்குள்ள குகைக் கோயில்களும் ரதங்களும் 625-650-ல் ஆண்ட முதலாம் நரசிம்ம வர்மனால் ஆரம்பிக்கப்பட்டு 675-ல் ஆண்ட பரமேஸ்வர வர்மனால் முடிக்கப்பட்டனவென்று தூப்ரெயில் துரை எண்ணுகிறார். (5) இவ்வூரின் வடக்கில் முகுந்த நயனார் கோயில், சிவாலயம்; ராஜசிம்மன் மகன் மஹேந்திரனால் கட்டப்பட்டது. லிங்கத்தின் பின்புறம் சோமாஸ்கந்த மூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. சுமார் 8-ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்டது. கிராம சத்திரத்திற்கு ½

மைல் தூரம். (6) மலைக்கு 50 கஜ தூரத்தில் பாழடைந்த ஒரு சிவாலய மிருக்கிறது. 24 × 15 × 12 அடி விஸ்தீரணம் கருப்புக்கல் சிவலிங்கம். (7) கோபிகள் தயிர் கடையும் பாத்திரம் எனும் கல்லின் அருகில் ஒரு சிறு சிவாலய மிருக்கிறது. (8) 3 குகைக்கோயில்கள் மத்தியில் பரமசிவத்தின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. (9) ஆழாக்கு எண்ணெய்க் கோயில், என்பதுவும் சிவாலயமாம். இதில் சிவலிங்கம் தற்காலமில்லை. இதன் விஸ்தீரணம் 22 × 16 × 16 அடி. (10) இதன் கீழ் ஒரு குகைக் கோயில் உளது. 33 × 13 × 17 அடி விஸ்தீரணம்; இங்கு சோமாஸ்கந்த மூர்த்தி உருவம் உளது. இதன் எதிரில் லிங்கம் வைப்பதற்காக இடம் வெட்டப்பட்டிருக்கிறது. இது தற்காலம் **மஹிஷாசுர மண்டபம்** என வழங்கப்படுகிறது. (11) யமபுர மண்டபம் என்று அழைக்கப்படும் கட்டடமும் சிவாலயமேயாம். இதில் பிரதான இடத்தில் சோமாஸ்கந்தர் உருவம் உளது. இங்குள்ள வாஹன மண்டபமும் திரிமூர்த்தி மண்டபமும் ஆதியில் நரசிம்ம பல்லவனால் (625-650) சிவாலயங்களாக வெட்டப்பட்டவைகள். இவைகளில் சிவலிங்கங்கள் இருந்தன. வாஹன மண்டபம் தற்காலம் விஷ்ணு ஆலயமாக மாற்றப்பட்டிருக்கிறது. இங்கு பவழக்கார சத்திரம் என்று ஒரு சத்திரமுண்டு.

**மஹாபலேஷ்வர்** :—கோயில் வால்டேர் ஸ்டேஷனுக்கு 20 மைல். விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி; ஸ்வாமி-மஹாபலேஷ்வர்; லிங்கம் குன்றில் குகைக்குள் இருக்கிறது. லிங்கத்தினின்றும் ஓர் அருவி பிறப்பதாக ஐதிகம்.

**மஹாலிங்க ஸ்தலம்** :—வட இந்தியா சிவாலயம். சுயம்பு லிங்கம். ஸ்வாமி பெயர் ஈஸ்வரர்.

**மஹாஸ்மல்** :—வட இந்தியா, ரெயில் ஸ்டேஷன். ஸ்வாமி-மஹாதேவர், தேவி பார்வதி, கோயில் சாத்புரி குன்றின் மீதுள்ளது. கோயிலுக்கருகில் உஷ்ணநீர் ஊற்றுகள் இருக்கின்றன.

**மஹேந்திர கிரி** :—கிழக்கு மலைத் தொடரிலுள்ளது. வால்டேரிலிருந்து கல்கத்தாவுக்குப் போகும் வழியி

ளுள்ளது. 5000 அடி உயரமுள்ள மலை; மூன்று சிகரங்களுடையது. இங்குள்ள சிவாலயம் குந்திதேவியால் கட்டப்பட்டது என்பது ஐதிகம். ஆரிய சில்பம். சதுரக் கர்ப்பக்ரஹம் 11 × 11 அடி. விமானம் 30 அடி உயரம். கோயில் மேற்கு பார்த்தது. தெற்கு கோகர்ணேஸ்வரர் கோயில் என்று பெயர். மற்றொரு கோயில் பீமன் கோயில் என வழங்கப்படுகிறது. பீமனால் கட்டப்பட்டதென்பது ஐதிகம்; 15 அடி சதுரம், 25 அடி உயரம் ஒரே கற்பாறையால் ஆயது; வாயிற்படி மிகவும் சிறியது. உள்ளே 5 அடி சதுரத்தில் லிங்கம் இருக்கிறது. சிவராத்திரியில் மட்டும் பூஜை. ஸ்வாமி பெயர் தற்காலம் கோகர்ணேஸ்வரர். இன்னொரு கோயில் யுதிஷ்டிரரால் கட்டப்பட்டதென்பது ஐதிகம்; கோயில் 17½ அடி சதுரம். இதன் பேரில் 15 நிலைகள் கோபுரம்போல் அமைக்கப்பட்டிருக்கின்றன. உயரம் 30 அடி. இம் மூன்று கோயில்களின் சிகரங்களும் தாமரையைப்போல் அமைக்கப்பட்டிருக்கின்றன; கோவிலுக்கெதிரில் ஒரு மண்டபம் உண்டு. 20 × 30 அடி; முடிக்கப்படவில்லை. ஸ்வாமி பெயர் மஹாவ்ரதர் (மஹாவரதர் ?)

**மஹேஸ்வர நல்லூர்** :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-விக்ரமசோளீஸ்வரமுடையார்.

**மஹீபாலன்பட்டி** :—பூர்வ காலத்தில் இதன் பெயர் பூங்குன்றம் என்பதாம். சென்னை ராஜதானி பாண்டி மண்டலத்திலுள்ளது. ராமநாதபுரம் திருப்பத்தூர்த் தாலுகா, சிவாலயம். ஸ்வாமி பெயர் கல்வெட்டுகளில் குலசேகர ஈஸ்வரமுடைய நாயனர் என்றிருக்கிறது.

**மாக்கோட்டை** :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, மன்னர் குடிக்கு 7 மைல். சிவால்யம் - கீர்த்தி சேகரன் என்பவனால் கட்டப்பட்டது. கோயில் கொஞ்சம் கிலமாயிருக்கிறது.

**மாகலா** :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி தற்காலம் வேணுகோபாலஸ்வாமி கோயிலாயிருப்பது

பழைய காலத்தில் 3 ஆலயங்கள் ஒன்ருய்ச் சேர்ந்த சாளுக்கிய கட்டடம்; அதில் ஒன்று பூர்வத்தில் சிவாலய மாயிருந்தது.

**மாகள** :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, பீமேஷ்வர் கோயில்.

**மாகாளம்** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி - மாகாளேஸ்வரர், மங்களநாயகி, காளி தீர்த்தம், காளி பூசித்தது; வைப்புஸ்தலம்.

**மாகறல்** :—(திரு) செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, காஞ்சீபுரத்திற்கு 10 மைல் தெற்கு. தேவேந்திரன் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-அடைக்கலநாதேஸ்வரர், மங்கல மகரந்த ஈஸ்வரர், தேவி-புவனநாயகி, நவ்வி தீர்த்தம், அடைக்கல தீர்த்தம்; கர்ப்பக்கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி. இந்திரனுக்காக நண்டுவளையிலிருந்து சிவ பெருமான் உற்பத்தியான ஸ்தலம். உடும்பு தழுவிக் கொண்டிருப்பதுபோல் ஸ்வாமியின்மீது காணப்படுகிறது. திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு திருமாலீஸ்வரர் கோயில் என்னும் மற்ருெரு சிவாலய முளது. கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் அகஸ்தீஸ்வரமுடையார் என்றிருக்கிறது.

**மாங்காடு** :—சென்னை ராஜதானி புதுக்கோட்டையிலிருந்து 22 மைல் சூதங்கேஸ்வரர் கோயில் பழைய கோயில் மாணிக்கவாசக ஸ்வாமிகளால் கட்டப்பட்டதென்பர். புதுக்கோட்டை சமஸ்தானத்தாரால் புதுப்பிக்கப்பட்டது. சூதவனம் மாங்காடு.

**மாங்கிர் பிரிவு** :—வங்காளம், வட இந்தியா, இங்குள்ள சிவாலயங்கள் (1) மாங்கீர் பட்டணம், புதிய சிவாலயம் சுமார் 110 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. (2) **சிமேரியா கிராமம்** :— தாளேஸ்வர் நாத் சிவாலயம் இதற்குப் பூஜைசெய்பவர்கள் குயவர் ஜாதியார், குயவர் சக்கரத்தின்கீழ் சிவலிங்கம் அகப்பட்டதாம். (3) **சிங்கிரிக்**

சிறுமலை இது ரிஸ்யஸ்ரிங்கர் வசித்த மலை என்பர். சிவாலயம் 15 அடி சதுரம்; ஸ்வாமி-மகாதேவர்; தற்காலக்கோயில் சுமார் 58 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. இங்கு பழைய கோயில் ஒன்று இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

**மாடத்துக்கோயில் :—** புதுக்கோட்டை சமஸ்தானம், நாங்குபட்டி யருகிலிருக்கிறது. பழைய சிவாலயம்-இங்கு சப்தரிஷிகளின் சிலைகள் உள. இங்குள்ள கல்வெட்டுகளால் இக்கோயில் சேர கடம்பராயர் என்பவரால் கட்டப்பட்டதாக அறிகிறோம்.

**மாடவிளாகம் :—** சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா; மஹாபலிபுரத்திலிருந்து 5 மைல், திருக்காலீஸ்வரர் கோயில்.

**மாடி :—**மைசூர் ராஜ்யம்; சிவாலயம்; ஸ்வாமி-ராமேஸ்வரர்; கெம்பகௌடருடைய குலதெய்வம், இங்குள்ள உற்சவ மூர்த்திக்கு இரண்டு தேவிகள், பார்வதி கங்கை. இதற்கு $3\frac{1}{2}$ மைல் தூரத்தில் **சோமேஸ்வரர் கோயில்-1712**ஆ மும்மடி கெம்பவீரகௌடரால் கட்டப்பட்ட சிவாலயம். கோயில் வடக்கு பார்த்தது.

**மாணிக்கநகர் :—**குல்பர்கா ரெயில் ஸ்டேஷனிலிருந்து 33 மைல்; மத்ய இந்தியா, சிவாலயம். ஸ்வாமி-சந்திரபரமேஸ்வரர், சங்கமேஸ்வரர், தேவி-பார்வதி.

**மாணிகுழி :—**(திரு) திருமாண்டகுழி என்றும் பெயர்; தென் ஆற்காடு ஜில்லா, கூடலூர் தாலுகா, சென்னை ராஜதானி; கூடலூர் ஸ்டேஷனுக்கு $3\frac{1}{2}$ மைல் மேற்கு; வாமனபுரீஸ்வரர் கோயில்; ஸ்வாமி-மாணிக்கமேனிவரதேஸ்வரர், தேவி- மாணிக்கவல்லியம்மை, கொன்றை விருட்சம், மாணிக்க தீர்த்தம், பெண்ணைநதி; விஷ்ணு மாணிவடிவாக (வாமனவதாரமாக) பூஜித்த ஸ்தலம்; ஸ்வாமி வணிகருக்கு உதவிபுரிந்தபடியால் உதவிநாயகா என்றும் பெயர். கல்வெட்டுகளில் திருமாணிக்குழியாளுடையார் என்று ஸ்வாமி பெயர் இருக்கிறது. கோயிலில் பல கல்வெட்டுகள் உள.

தற்காலக்கோயில் 7-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென எண்ண இடமுண்டு. திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

**மாத்தூர்** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திட்டைக்கு சமீபமுளது, சிவாலயம்; ஸ்வாமி ராமநாதேஸ்வரர், தேவி-திரிபுரசுந்தரி, தேவிக்கு மஹிஷாசுரமர்த்தனி என்றும் பெயர் உண்டு. வாயுதீர்த்தம்; வைப்பு ஸ்தலம்.

**மாதங்கன்பள்ளி** :— பொன்னேரி தாலுகா சத்யவேடு கிராமத்திலுள்ளது. சென்னை ராஜதானி. இங்கு சிவாலயம் ஒரு சமாதியின்மீது கட்டப்பட்டதென எண்ணப்படுகிறது. கோயிலில் அபராஜிதன் எனும் கங்கபல்லவ அரசனது காலத்திய கல்வெட்டு ஒன்றுளது; இவர் 7-ஆம் நூற்றாண்டில் ஆண்டவர்; ஆகவே இக்கோயில் மிகவும் பழமையானதாம். மாதங்கன்பள்ளி என்பது மாதங்க ரிஷியின் சமாதியாயிருக்கலாம் என்று சிலர் நினைக்கின்றனர். பள்ளி என்பது சாதாரணமாய் பூர்வகாலத்தில் ஜைன ஆலயத்தைக் குறிக்கும்; ஆகவே இக்கோயில் பூர்வம் ஜைன ஆலயமாயிருந்ததென சிலர் கூறுகின்றனர்.

**மாதர்ப்பாக்கம்** :—தென் இந்தியா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-விஸ்வேஸ்வரர், தேவி-விசாலாட்சி; கும்ப தீர்த்தம்.

**மாத்தூர்** :—திருப்பத்தூர் தாலுகா, ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-அயோகிதீஸ்வரர், தேவி-அமிர்தவல்லி.

**மாதேஸ்வர மலை** :—மஹாதேஸ்வரகிரி என்றும் வழங்கப்படுகிறது. கொள்ளேகால் தாலுகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சிவராத்திரி விசேஷம்.

**மாந்தாதா** ;—வட இந்தியா, ஓங்காரேஷ்வர் கோயில், லிங்கம் ஜலத்தின் மத்தியிலிருக்கிறது; தேவிகோயில் பின்பக்கமுள்ளது. மாந்தாதா தீவின் மேற்கில் ரிம்முக்தேஷ்வர் கோயில் உளது. இங்கு ஒருகைதான்யம் ஸ்வாமிக்கு

அர்ப்பணம் செய்தால் கடன்காரர்கள் தங்கள் கடன்களி னின்றும் விடுபடுவதாக ஐதிகம்.

**மாந்தாதா** :—மத்ய மாகாணம், சிவாலயம், மலைக் கோயில், இதற்கு நான்கு புறமும் வாயில்கள் உள. நர் மதையின் மத்தியிலுள்ளது. மாந்தாதேஸ்வரர்; உமா தேவி.

**மாந்துறை** :—(திரு) திருச்சிராப்பள்ளிக்கு 13 மைல். வடகிழக்கு. சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி - ஆம்ரவனேஸ்வரர், தேவி-அழகாலுயர்ந்த அம்மை, மா விருட்சம், மஹா தீர்த்தம், காயத்ரி தீர்த்தம்; கண்வர் பூசித்த ஸ்தலம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

**மாமண்டூர்** :—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜ தானி, காஞ்சீபுரத்திற்கு 6 மைல், குகைக்கோயில், ஸ்வாமி-ருத்ரவாலீஸ்வரமுடைய தேவர்; மஹேந்திரவர்மன் என்னும் பல்லவ அரசனால் வெட்டப்பட்டது. இதற்கு இடது புறம் இருக்கும் மற்றொரு குகையிலும் சிவலிங்கம் இருக்கிறது. இது சுமார் 6-ம் நூற்றாண்டில் வெட்டப் பட்டது.

**மால்புரம்** :—திருமால்புரம் என அழைக்கப்படுகிறது. வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவா லயம். கல்வெட்டுகள் உடையது.

**மாலூர்** :—தென் இந்தியா, சிவாலயம். ஸ்வாமி-மஞ் சேஸ்வரர், தேவி-திரிபுரசுந்தரி; லிங்கம் புற்றிடமுள்ளது.

**மாலே ஜிட்டி** :—பாதாமி (வாதாபி) நகரத்திற்கு அருகி லுள்ளது. சிறு சிவாலயம். கோயில் மாபலிபுரக் கோயில்களைப் போன்றது. கர்ப்பக்கிரஹத்தின் முன்பு 4 பெரிய தூண்களையுடைய மண்டபம் உளது. சுமார் 7-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென்று பெர்கூசன் எண்ணுகிறார். கோயிலில் தற்காலம் பூஜையில்லை.

**மாயச்சூர்** :—திரு மாயச்சூர் என்று வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, பேரளம்-சிவாலயம். ஸ்வாமி-திரு

மாயச்சூர் நாதர், தேவி-சௌந்தரநாயகி; அற்புத தீர்த்தம்; வருணன் பூசித்த ஸ்தலம்.

**மாயவரம்** :—தர்மபுர ஆதீனத்தின் மேற்பார்வையிலடங்கியது. பிரம்மபுரம், கௌரீ மாயூரம், சூதவனம், மயூரம், மயிலாடுதுறை எனவும் பெயர்கள் உண்டு. தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சென்னை ராஜதானி. உமை மயிலாகப் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-ஸ்ரீவதானீஸ்வரர், வள்ளலார், கௌரிமாயூர நாதர், மயூரநாதேஸ்வரர், தேவி-அபயாம்பிகை அல்லது அஞ்சனயகி; ரிஷப தீர்த்தம், காவிரி நதி; பிரம்மா, விஷ்ணு, இந்திரன், லட்சுமி, யானை, குதிரை, குரங்கு, நரி, பூனை, கழுகு, கிளி, பாம்பு, கழுதை பூசித்த ஸ்தலம். கோபுரம் 9 நிலைகளுடையது. இங்கு பஞ்சநதேஸ்வரர் கோயில் என ஒரு சிவாலயமுளது; இதில் 900 வருடங்களுக்கு மூந்திய கல்வெட்டுகள் உள. வள்ளலார் கோயில் என்பது மற்றொரு சிவாலயம், வதானீசர், ஞானம்பிகை. இங்குள்ள நடராஜர் சபைக்கு ஆதிசபை என்று பெயர். ஸ்வாமியின் தாண்டவத்திற்கு கௌரிதாண்டவம் என்று பெயர். இங்கு ரிஷப தீர்த்தத்திற்கு தென்புறம் காசி விஸ்வநாதர் கோயில் உண்டு. லிங்கத்திற்கு பிரம்ம லிங்கம் என்று பெயர்-பிரம்மன் பூசித்தபடியால். நாதசன்மர், அறவிந்தை பிரதிஷ்டை செய்த லிங்கங்கள் உண்டு; அறவிந்தை பெண்பால் பிரதிஷ்டை செய்த லிங்கத்திற்கு இப்பொழுதும் புடைவை சாத்தப்படுகிறது. ஸ்வாமி அம்மன் சண்டேஸ்வரரை தர்சித்த பிறகு, மேற்சொன்ன இரண்டு லிங்கங்களையும் தரிசிக்க வேண்டுமாம். ஸ்தல விருட்சம் மாமரம்; பிரம்மோற்சவம் அற்பிசி மாசம். துலாஸ்நானம் விசேஷம். இதில் ஐந்தாம் நாள் அன்னபிஷேகமும், மயிலாக அம்மன் பூசிப்பதும், காவேரி கடைமுழுக்கும் விசேஷம். இங்கு மூன்று முக்கிய சத்திரங்கள் உண்டு; ஒன்று ஸ்டேஷனுக்கருகிலும், மற்றொன்று 2 மைல் தூரத்திலும் உளது. இங்கு மயிலம்மன் குளம் என்று ஒரு குளம் உண்டு. திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. இங்கு முசாபர் பங்களா உண்டு.

**மாரமங்கலம்** :—ஸ்ரீ வைகுண்டம் தாலுகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சந்திரசேகரர் கோயில்.

**மாரூர்** :—மேற்கு நாட்டிலுள்ள கார்கல் என்னும் ஊருக்கு 2 மைலில் சிவாலயமுளது.

**மால்சிரஸ்** :—பூனு ஜில்லா, பம்பாய் ராஜிதானி; சிவாலயம். ஸ்வாமி-பூலேஷ்வர் மஹாதேவ், கோயிலுக்கு 8 மதில் சுவர்கள் இருக்கின்றன.

**மாற்பேறு** :—(திரு) பாலூர் ரெயில் ஸ்டேஷனுக்கு 3 மைல் தெற்கு. சென்னை ராஜதானி; மஹாவிஷ்ணு தாமரைகளைக்கொண்டு சிவபெருமானைப் பூசிக்கும்பொழுது ஒரு புஷ்பம் குறைய, அதற்கு பதிலாக தன் கண்ணையே பறித்து பூசித்து சக்கரம் பெற்ற ஸ்தலம். சுவாமி - மால் வணங்கீசுரர்,மணிகண்டேசுரர்;தேவி-கருணைநாயகி, அஞ்சனாட்சியம்மை; அரி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம்; திருஞான சம்பந்தர் அப்பர் பாடப்பெற்றது.

**மாறன்பாடி** :—தென் இந்தியா சிவாலயம்.

**மாறளம்** :—சென்னை ராஜதானி சிவாலயம். ஸ்வாமி குருநாதேஸ்வரர், தேவி ஆனந்தவல்லி; பாபநாச தீர்த்தம்.

**மான்தோட்டம்** :—லங்கைத் தீவிலுள்ளது, சிவாலயம்; வைப்பு ஸ்தலம்.

**மான்கேஷ்வர்** :—பூனு ஜில்லா, பம்பாய் ராஜதானி சிவாலயம்; பாழடைந்திருக்கிறது.

**மான்பூர் பிரிவு** :—வட இந்தியா, வங்காளம் இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. (1) **பூத்பூர் கிராமம்** : சிவாலயம் குன்றின்மீதுள்ளது, ஸ்வாமி-பூதேஷ்வர். (2) **காட்ராஸ்கர் கிராமம்** : சிவாலயம் மேற்கு பார்த்தது.

**மானூர்** :—திருநெல்வேலி ஜில்லா; சென்னை ராஜதானி சிவாலயம்; ஸ்வாமி அம்பலவாணர். கோயிலில் பாண்டிய அரசன் மாறன் சடையன் காலத்திய வட்டெழுத்து கல் வெட்டு இருக்கிறது. பழையகோயில்.

**மானூர்** :—சென்னை ராஜதானி; றெயில் ஸ்டேஷன்; சென்னைக்கு 34 மைல் தூரம், சிவாலயம்; ஸ்வாமி-நந்தீஸ்வரர்; இரண்டு பெரிய உற்சவங்கள் நடைபெறுகின்றன.

**மானூர்** :—திருமானூர் என்று வழங்கப்படுகிறது; திருச்சிராப்பள்ளி ஜில்லா, உடையார்பாளையம் தாலுகா, சென்னை ராஜதானி-கைலாசநாத ஸ்வாமி கோயில்.

**மானூர்** :—சென்னை ராஜதானி திருவையாறுக்கு 2¼ மைல் தூரம், கொள்ளிடக்கரையிலுள்ளது. சிவாலயம்; கோபுரம் தெற்கே பார்த்தது. கிழக்கில் கோபுரமில்லை; சிறிய கோயில்.

**மானேப்பள்ளி** :—ஹிந்துபூர் தாலுகா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**மாறேஸ்வரம்** :—வட இந்தியா, சுயம்புலிங்கம்; ஸ்வாமி ஓங்காரேஸ்வரர்.

**மானுமதுரை** :—சென்னை ராஜதானி ராமநாதபுரம் ஜில்லா, சிவாலயம்; சிவகங்கைக்கு 11 மைல்; ஸ்வாமி-சோமநாதர், தேவி-உமாதேவி; வைகை நதி.

**மிட்னபூர் பிரிவு** :—வங்காள ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் (1) சந்திரசேனு கிராமம், புதியகோயில்: ஸ்வாமி காமேஸ்வர சிவம், பஞ்சரத்ன கோயில் 1931ஸ்ல கட்டப்பட்டது. (2) மல்லேஸ்வரர் கோயில், 60 அடி உயரம்; ராஜா கீர்த்தி சந்திரன் கட்டியது. சிவலிங்கம் 2½ அடி ஆழமுள்ள ஒரு தொட்டியில் இருக்கிறது. சிலசமயங்களில் இத்தொட்டியில் ஜலம் நிரம்பிப்போகிறது. (3) டாண்டன் கிராமம், சிவாலயம் சுவாமி - ஸ்யாமளேஸ்வரர்; இங்குள்ள நந்தியின் முன்னங்கால்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. (4) எக்கா கிராமம், ஹாத்நகர்; சிவாலயம் ஒரிஸ்லா அரசனுகிய முகுந்த தேவரால் கட்டப்பட்டது. (5) களேஷ்வார் சிவாலயம் சிவலிங்கம் கிணற்றில் இருக்கிறது. பூஜை தினம் நடக்கிறது (6) கார்பேடா கிராமம், காங்கேஸ்வரர் சிவாலயம்; வடக்கே பார்த்த கோயில் (7) கான்சர்பூர்-தண்டேஷ்வர் சிவாலயம் தேவி மஹாமாயா;கோயில் 75 அடி உயரம். இங்கு கார்கேஷ்வரர் ஆலயம் என்று ஒன்றுளது; 3 அடி சதுரம்; 8 அடி ஆழமுள்ள பள்ளத்தில் சிவலிங்கம் இருக்கிறது. (8). நாராயணகர் கிராமம் : தானேஷ்வர் சிவாலயம் (9) நாயா

பாகன்; இங்கு தியூல்மார் கிராமத்தில் ஒரு சிறு குன்றின் பேரில் காமேஸ்வர்நாத் கோயில்; இதில் ஆயிர முகலிங்கம் உளது. கோயில் ஒரிஸ்ஸா கட்டடம்.

மிண்டிகல் :—மைசூர் ராஜ்யம், கோலார் ஜில்லா; சிந்தா மணிக்கு அருகிலுள்ளது. சோமேஸ்வர் கோயில்.

மிராஜ்:—பம்பாய் ராஜதானி, ஜுனர் சமஸ்தானம் மிராஜ் றெயில் ஸ்டேஷன்; இங்குள்ள சிவாலயங்கள். (1) சுவாமி மார்க்கண்டேஸ்வரர், தேவி அன்னபூரணி, கோதா வரி தீர்த்தம், கோயில் றெயில் ஸ்டேஷனிலிருந்து 3 மைல் (2) காவ்தர் கிராமம், மஹாதேவர் கோயில் பழையது. (3) மதோல் மஹாலிங்பூர்; மஹாலிங்கேஸ்வர் கோயில்.

மிருதகேஸ்வரம் :—வட இந்தியா, சுயம்புலிங்கம்; சுவாமி-சூட்சுமர்.

மிலாத்தூர் :—சென்னை ராஜதானி, றெயில் ஸ்டேஷன்; திட்டைக்கு 4 மைல் கிழக்கு; சிவாலயம்; சுவாமி உன்னத புரீஸ்வரர் சோழக்கட்டடம் 150 + 120 அடி விஸ்தீரணம்; ஒரேபிராகாரமுடையது. பிரளயகாலத்தில் தண்ணீர் மட்டத் தின்பேரில் கோயில் இருந்தபடியால் உன்னதபுரி என்று பெயர்வந்ததென்பர்; கோயிலில் 1118-1135ஆ ஆண்ட விக்ரமசோழன் காலத்திய கல்வெட்டொன்றுளது.

மிஸ்ரிக் :—வட இந்தியா, சீதாபூர் ரெயில் ஸ்டேஷனி லிருந்து 13 மைல், சிவாலயம்.

மீயச்சூர் :—(திரு) பேரளம் ஸ்டேஷனுக்கு 1 மைல் மேற்கு. சென்னை ராஜதானி, சூரியன் பரமசிவத்தையும் பார்வதி தேவியையும் யானைமீது ஆரோஹணிக்கச் செய்து பூசித்த ஸ்தலம். வருணன் பூசித்த ஸ்தலம். கோயில் விமானம் யானை உட்கார்ந்திருப்பதுபோல் இருக்கிறது. சுவாமி - முயற்சிநாதேஸ்வரர், தேவி - சௌந்தரநாயகி, வில்வ விருட்சம், தீர்த்தம் சூரிய புஷ்கரிணி, கங்காகூபம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

மீயச்சூர் இளங்கோயில் :—இது மேற்கண்ட பெரிய கோயிலிலடங்கியது. வடக்குப் பிராகாரத்திலுள்ளது.

இங்கு காளி சிவபெருமானை பூசித்ததாக ஐதிகம். சுவாமி-சகலபுவனேஸ்வரர், தேவி-மேகலாம்பிகை. அமிர்த தீர்த்தம், அப்பர் பாடல் பெற்றது. பிரமன், சரஸ்வதி பூசித்த ஸ்தலம்.

**மீரட்** :—வட மேற்கு இந்தியா, ரெயில் ஸ்டேஷன். டெல்லியிலிருந்து 41 மைல், சிவாலயம். சுவாமி-மாஹேஸ்வரநாதர், தேவி-மாஹேஸ்வரி, பாண்டவர்களுடைய குலத்தூதித்தவர்களால் கோயில் கட்டப்பட்டதென்பது புராணம். இங்கு 5 தர்ம சத்திரங்கள் உண்டு.

முக்கூடல் :—சென்னை ராஜதானி, கரூருக்கருகிலுள்ளது. சிவாலயம், இங்கு ஆம்ராவதி, மணிமுக்தா நதி, காவேரி, மூன்றும் கூடுமிடமாம், எனவே முக்கூடல் என்றாயது. சுவாமி-மணியீசர்.

முக்கோண்டா :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; சிறு குன்று, மல்லிகார்ஜுன சுவாமி; ஆலயம் சிறியது.

**முக்தேஷ்வர் கோயில்** :—ஒரிஸ்ஸா பிரிவு, சிவாலயம். ஆரிய சில்பம்.

**முக்தேஸ்வரம்** :—சென்னை ராஜதானி; திருநெல்வேலி ஜில்லா, சுவாமி-ராமநாதேஸ்வரர்.

**முகலிங்கம்** :—பர்லாகிமிடி தாலூகா, கஞ்சம் ஜில்லா, சென்னை ராஜதானி; ஸ்ரீ கோகுலத்திற் கருகிலுள்ளது. சிவாலயம். சுவாமி-முகலிங்கேஸ்வரர்; சிவராத்திரி விசேஷம். (இங்கு குபேரனுக்கு ஒரு சிறு ஆலயம் உண்டு.) அருகாமையில் **பீமேஸ்வரர் கோயில்** என்று மற்றொரு சிவாலயமுளது.

முசிறி :—தென் இந்தியா, சிவாலயம், திருச்சிராப்பள்ளி ஜில்லா, குளித்தலை ஸ்டேஷனுக்கு 1 மைல். சுவாமி-முகிலேஸ்வரர், தேவி-காமாட்சியம்மன்.

முச்சம்பேட் :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். சுவாமி-சந்திரமௌளீஸ்வரர், தேவி-கர்ப்பூரவல்லி.

(தொடரும்)